உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை.

அச்சுவேலி

சரஸ்வதி வித்தியாசாலை அதிபர்

பிரமஸ்ரீ: ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் எழுதப்பட்டு,

ஷை வித்தியாசாலை

ஆசிரிய சங்கத்தாரால்

பதிப்பிக்கப்பட்டது.

ஆங்கீரச ௵ - பங்குனி ௴.

1933.

பதிவுசெய்யப்பட்டது. விலை சதம் 40.

உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை.

அச்சுவேலி

சரஸ்வதி வித்தியாசாலை அதிபர்

பிரமஸ்ரீ: ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் எழுதப்பட்டு,

ஷை வித்தியாசாலை

ஆசிரிய சங்கத்தாரால்

சுன்னாகம்

திருமகள் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஆங்கீரச௵ பங்குனி௴.

1933.

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை. | |
| க. | விநாயகக்கடவுள் I | க |
| உ. | விநாயகக்கடவுள் II | ௩ |
| ௩. | நம்பியாண்டார்நம்பி | ரு |
| ௪. | சிவபெருமான் | அ |
| ரு. | விட்டுணுபிரமர் அடிமுடி தேடியது | க௩ |
| ௬. | உமாதேவியார் I | கஎ |
| எ. | உமாதேவியார் II | க௯ |
| அ. | சுப்பிரமணியக்கடவுள் | உஉ |
| ௯. | சிவதூஷணம் | உஎ |
| க0. | வீரபத்திரக்கடவுள் சரபவடிவங்கொண்டது | உ௯ |
| கக. | வைரவக்கடவுள் | ௩உ |
| கஉ. | தவம் | ௩ரு |
| க௩. | அன்புடைமை I | ௩௯ |
| க௪. | அன்புடைமை II | ௪௩ |
| கரு. | திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் ஞானப்பாலுண்டது | ௪எ |
| க௬. | பாண்டியன் சுரந்தீர்த்தது | ௪௯ |
| கஎ. | அப்பூதிஅடிகள்நாயனர் | ரு௪ |
| கஅ. | சுந்தரமூர்த்திநாயனர் முதலைவாய்ப்பட்ட பிள்ளையை மீட்டது | ருஅ |

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| ககூ. | மாணிக்கவாசகசுவாமிகள் புத்தரை வாதில் வென்றது | சு0 |
| உ0. | மெய்கண்டதேவர் | சுசு |
| உக. | உமாபதிசிவாசாரியர் | எ0 |
| உஉ. | கோச்செங்கட்சோழநாயனார் | எ௩ |
| உ௩. | ஆலயவழிபாடு I | எசு |
| உ௪. | ஆலயவழிபாடு II | எகூ |
| உரு. | சிவாலயத் திருத்தொண்டுகள் | அஉ |
| உசு. | திருவிளக்கிடுதல் | அஎ |
| உஎ. | சிவநின்மாலியம் | கூ0 |
| உஅ. | சிவத்திரவியங் கவர்தல் | கூஉ |
| உகூ. | குருசங்கமவழிபாடு | கூரு |
| ௩0. | நக்கீரர் | கூகூ |
| ௩க. | சுப்பிரமணியரும் ஒளவையாரும் | க0௩ |
| ௩உ. | முசுகுந்தச் சக்கரவர்த்தி | க0எ |
| ௩௩. | கரிக்குருவி உபதேசம்பெற்றது | கக்க |
| ௩௪. | விட்டுணு | ககஉ |
| ௩ரு. | சைவாசாரியரும் வைணவனும் | ககஎ |
| ௩சு. | சண்டேசுரநாயனார். | கஉ௩ |

உ

# முகவுரை.

வித்தியாதரிசி,
பிரமஸ்ரீ. தி. சதாசிவ ஐயரவர்கள் எழுதியது.

உலகத்தில் மக்கள் எல்லாரும் பாவத்தை நீக்கிப் புண்ணியத்தைச் செய்ய விரும்புவர். புண்ணியங்களுள் மிகச் சிறந்த புண்ணியம் சிவபுண்ணியமாகும். சிவபுண்ணியமாவது சிவபெருமானையும், சிவனடியார்களையும் வழிபடுதலும், அவர் சரிதங் கேட்டலும் முதலாயின. "இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றாராகலின் சிவனடியார்களுடைய பெருமையை அளவிட்டுச் சொல்ல முடியாது. அதனால் சிவகதைகளும், சிவனடியார் கதைகளும் எழுதப்பட்டுள்ள இப்புஸ்தகம் சைவசமயாபிமானிகள் எல்லாராலும் போற்றற்பாலது.

அரும்பெரு விஷயங்களை யெல்லாம் இனிய கதைரூபமாக்கி மாணவர்க்கு முதலில் போதிப்பது பழையவழக்கு என்பது. அதனால் அம்மாணவரும் இளமையில் தாம் கற்றறிந்தவற்றை மறவாது மேன்மேலும் விருத்திசெய்வார்கள். இப்புத்தகம் சைவசமயச் சிறுவர்கள் தங்கள் சமயத்தைப்பற்றி அறிந்துகொள்வதற்கு ஏதுவாகும். இதனைத் தொகுத்து இயற்றினார் அச்சுவேலி பிரமஸ்ரீ; ச. குமாரசுவாமிக் குருக்களவர். சமயசாஸ்திர விற்பன்னரான குருக்களவர்களால் தெளிவான செவ்விய நடையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகம் சைவப்பாடசாலைகளிற் சமயபாடப்புத்தகமாக வைத்துப் படிப்பிக்கத்தக்கது என்பது துணிபு.

யாழ்ப்பாணம்,
30-3-33.

தி. சதாசிவஐயர்.

உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை.

## ௧. விநாயகக் கடவுள்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

[பண்-வியாழக்குறிஞ்சி]

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

**விநாயகக்கடவுள்** சிவபெருமானுடைய மூத்த திருக்குமாரரென்று வேதாகமங்களிலே புகழ்ந்துரைக்கப் படுவர். அவர் யானைமுகத்தையும், பூதவயிற்றையும், தேவ சரீரத்தையும், ஒற்றைக்கொம்பையும், மூன்று திருக்கண்களையும், ஐந்து திருக்கரங்களையும், இரண்டு திருவடிகளையும் உடையவர். திருச்சடையில் சந்திரன் முதலியவைகளைத் தரித்திருக்கின்றார். சர்ப்பம் முதலியவைகளை ஆபரணமாக அணிந்திருக்கின்றார். திருவருளை திருமேனியாக உடையவர். ஆன்மாக்களது அஞ்ஞானத்தையும் மனத்துன்பங்களையும் நீக்குபவர். விக்கினேசுரர், விநாயகர், கணபதி, சியேட்டராசர் முதலிய திருநாமங்களையுடையவர். பிரணவ வடிவமாயுள்ளவர். யாவரும் யாதொரு தொழிலைச் செய்யப் புகினும் முதலில் வணங்கப்படுபவர். தம்மை நினையாதவர்

களுக்கு விக்கினங்களை உண்டுபண்ணுதலானும், தம்மை நினைத்தவர்களுக்கு விக்கினங்களைப் போக்குதலானும் விக்கினேசுரர் என்னும் திருநாமத்தைப் பொருந்தினர். பிதா பிள்ளை என்றது அருள்நாடகமாம். பூவும் பூவினது நிறமும் பூவினது மணமும்போல சிவமும் சிவசத்தியாரும் சிவகுமாரரும் எண்ணப்படுதல் சைவாகம நூற்றுணிபாம்.

முன்னொரு காலத்தில் விட்டுணு முதலிய தேவர்கள் முதலில் மூத்த பிள்ளையாரை வணங்காது, பாற்கடலைக் கடைந்தார்கள். விக்கினேசுரர் அவர்கள் வருந்தும்படி மத்தாகக்கொண்ட மந்தரமலையைக் கடலினுள்ளே தாழ்த்துவிட்டனர். தேவர்கள் அதனைக்கண்டு, இது விக்கினேசுர வழிபாடின்மையால் வந்ததென்றறிந்து, தியானித்து வணங்க அவருடைய திருவருளினால் மத்தாகக்கொண்ட மந்தரம் முன்போல நிலைபெற்றது. தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமிர்தம்பெற்று மகிழ்ந்தார்கள்.

முன்னொருகாலத்தில் விட்டுணு பொய்ச்சாட்சிசொல்லிய குற்றத்துக்காக, உமாதேவியார் அவனைக் குருட்டுப் பாம்பாகும்படி சபித்தனர். அவர் உடனே பாம்பாய் ஒரு ஆலம்பொந்தினிடமாக இருந்து தவஞ்செய்தார். விநாயகக் கடவுள் அச்சாபத்தை நீக்கி அருள்செய்தார். அச்சாபம் நீங்கிய தினம் மார்கழிமாசத்தில்வரும் பூருவபக்கச் சட்டியாகும். அத்தினத்தில் மெய்யடியார்கள்பலர் விநாயகக்கடவுளைப் பூசித்துப் போகமோக்ஷங்களை அடைந்தார்கள்.

தேவர்கள் விநாயகக்கடவுளை ஆவணிமாசத்தில்வரும் பூருவபக்கச் சதுர்த்தியில் பூசித்தார்கள். அவர் பஞ்சகிருத்திய நிருத்தஞ்செய்தருளினர். சந்திரன் அவரது திருரூபத்தைப் பார்த்துச் சிரித்தான். விநாயகக்கடவுள் அவனை நோக்கி, "யாவரும் உன்னைப் பாராதவர்களாய், இத்தினத்

தில் நிந்தைசெய்தகல, நீ நீசர்போலாவாய்" என்றார். ஆவணிமாதப் பூருவபக்கச் சதுர்த்தியில் உலகோர் அவனைநோக்காது விநாயகருக்கு விசேட பூசை செய்வார்கள்.

---

## உ. விநாயகக்கடவுள்.

## II

மிகப்பழையகாலத்திலே கயமுகன் என்னுமோர் அசுரன் இருந்தான். அவன் சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்தான். சிவபெருமான் பிரசன்னமாயினார். அவன் சிவபெருமானிடத்திலே தேவர்கள் எல்லாரையும் வெல்லவும், படைக்கலங்களாலே இறவாதிருக்கவும், இறப்பினும் பிறவாதிருக்கவும் வரங்களைப் பெற்றுக்கொண்டான். பின்பு தேவர்களைத் தனது கட்டளைக்குட்படுத்தி, உயிர்களை வருத்திக் கொடுமைகளைச்செய்து, உலகத்தை அரசாண்டான். அரசு செய்யுங்காலத்தில் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, "இமையவர்களே, நீங்கள் தினந்தோறும் எம்முன் வரும்போது, உங்கள் கைகளால் உமது சிரசுகளில் மும்முறை குட்டி கைகளை மாறிக் காதுகளைப் பிடித்துத் தாழ்ந்தெழுந்து, அதன்பின் நமது ஏவலைச்செய்யுங்கள்" என்றான். தேவர்கள் அதனை மறுத்தற்கஞ்சி, அவன் முன்பு நின்று அப் புன்றொழிலையும் பிற பணிகளையும் நாடோறுஞ் செய்து பழியின்மூழ்கினார்கள். பழியின் மூழ்கிய தேவர்கள் அவன் செய்யுந் தீமைகளைத் தாங்கவியலாது, அவனுடைய உயிரைக் கவரும்படி விநாயகரை வேண்டுதல்செய்தார்கள். விநாயகக்கடவுள் பூதசேனைகளோடு யுத்தகளத்தையடைந்து, தமது கொம்பொன்றை முரித்தெறிந்து, கயமுகனைச் சங்காரஞ்செய்தார்.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் இறவாத கஜமுகன் வீழ்ந்து இறந்தவன்போன்று, பழையவடிவைவிட்டு ஒரு பெருச்சாளிவடிவங்கொண்டு வந்தான். அவர், "நீ நம்மைச் சுமக்குதி" என்று அவனுடைய பிடரிற்குதி வீற்றிருந்து, அப்பெருச்சாளிவாகனத்தைச் செலுத்தியருளினார்.

தேவர்கள் விநாயகக்கடவுளை வணங்கித் திருமுன் நின்று, "எம்பெருமானே! எங்களைத் துன்பப்படுத்திய கஜமுகாசுரனைத் தேவரீர் சங்காரஞ்செய்தருளியமையால் உய்ந்தேம்; நாங்கள் நேற்றைவரையும் அந்தக் கஜமுகாசுரனுக்கெதிரே தவறாமற் செய்த தொண்டை இன்றுமுதல் தேவரீருடைய சந்நிதானத்தில் செய்வோம்" என்றார்கள். பிள்ளையார் "அவ்வாறு செய்குதிர்" என்றார். தேவர்கள் அன்பினோடு முட்டியாகப் பிடித்த இருகரங்களினாலும் தங்கள் தங்கள் சிரசுகளில் மும்முறை குட்டி, இரண்டு கைகளையும் எதிர் எதிராக மாறி, இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு, கணைக்காலுந் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து வணங்கிநின்றார்கள். விநாயகக்கடவுள் திருவுளம்செய்தார். தேவர்கள் "இன்று முதல் உலகத்தில் உள்ளோர் எவரும் எங்களைப்போல இவ்வணக்கத்தைத் தேவரீருடைய சந்நிதானத்தில் செய்துவர அருள்செய்யவேண்டும்" என்று வேண்டுதல் செய்தார்கள். அவர் "அவ்வாறே ஆகுக" என்றருள்புரிந்து தேவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பி அருளினார்.

### திருநாவுக்கரசுநாயனார்.

(திருத்தாண்டகம்)

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்

மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலு
மடியேனை யாளுடைய வடிக டாமே.

கோவாய விந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கின விநாயகன்னும்
பூவாய பீடத்து மேலயன்னும்
பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய வின்னிசைகள் பாடியாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம் பயநம் மூரென்று போயி னாரே.

**சேக்கிழார் புராணம்.**

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

---

## ௩. நம்பியாண்டார் நம்பி

சோழநாட்டிலே தியாகராசக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, செங்கோலோச்சிய அபயகுலசேகர சோழமகாராசாவானவர் தமது சபையில் வரும் அன்பர்கள் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்துள் ஒவ்வோர் பதிகங்களை ஓதக்கேட்டு, கையிரண்டும் உச்சிமேலேற கண்களில் ஆனந்தவெள்ளம் பொழியச் சரீரம் முழுவதும் புளகம் போர்ப்ப, சிவபெரு

மானுடைய திருவடிகளைத் துதித்து, தேவாரத் திருமுறை களை எங்குந் தேடி இல்லாமையினாலே கவலையுறுவாராயி னார். அவர் அங்ஙனமிருக்குங் காலத்தில் திருநாரையூரிலே ஆதிசைவப் பிராமணருக்கு உலகமீடேறவும், சைவம் வாழ வும் ஒரு சிறுவர் வந்து தோற்றினார்.

அவர் உபநயனஞ் செய்யப்பெற்று, வேதமுதலிய கலை களைப் படித்துவருங்காலத்தில், பிதாவானவர் ஓரூர்க்குச் செல்ல, நம்பியாண்டார்நம்பி அவரின் கட்டளைப்படி பொல் லாப்பிள்ளையாரைப் பூசிப்பதற்குச் சென்று அபிஷேகம் முதலியவற்றைச் செய்து, நிவேதனத்தைத் திருமுன்னிலை யில் வைத்து, "எம்பெருமானே இதனைத் திருவமுது செய்யவேண்டும்" என்று வணங்கினார். பிள்ளையார் திரு வமுது செய்யாதிருப்பதைக் கண்டு நம்பியாண்டார்நம்பி வெம்பி, "அடியேன் ஏதேனுந் தவறு செய்ததுண்டா? அடி யேன் நிவேதித்திட்ட அமுதைத் திருவமுது செய்யாதது என்னை?" என்று தலையினை மோதப் புகுந்தார். அப்பொ ழுது பொல்லாப்பிள்ளையார், நம்பி! பொறு என்று தடுத்து அந்நிவேதனத்தை உவந்து திருவமுது செய்தருளினார். நம்பியாண்டார்நம்பி, "எந்தையே! அடியேன் பாடசாலைக் குச் சென்றால் உபாத்தியாயர் அடிப்பார். ஆதலினால் வேத முதலிய கலைகளைத் தேவரீரே ஓதித்தரல்வேண்டும்" என்று விண்ணப்பித்தார். பரமாசாரியராகிய விநாயகக் கடவுளும் ஓதுவிக்க, நம்பியாண்டார்நம்பி ஓதி மகிழ்ந்தார். அது போல மற்றைநாளும் நிகழ, நம்பியாண்டார்நம்பி வீற் றிருந்திடுஞ் செய்தியை அபயகுலசேகர சோழராசாவான வர் கேள்வியுற்று, திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையா ருக்கு நம்பியாண்டார்நம்பி நிவேதிக்கும்படி வாழைப்பழம், தேன், அவல், எள்ளுண்டை முதலியவற்றோடு இராசராச

மன்னவர் அந்நகரில் வந்துசேர்ந்தார். அங்ஙனம் வந்தவர் நம்பியினுடைய பாதங்களை வணங்கி, "இவற்றைப் பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதிக்க" என்று கூறினர். நம்பி அரசர் கூறியவற்றைக் கேட்டு, யானைமுகக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "அரசர் தொகுத்து வைத்த இப்பொருள்களை நிவேதித்தருளுக" என்று படைத்தனர். விநாயகக்கடவுள் துதிக்கையினுல் ஏற்றுத் திருவமுதுசெய்தருளினர். அரசர் மனம்நெகிழக் கண்ணீர் வர நம்பியினுடைய பாதங்களைப் போற்றி, "மறையவரே! மூவருடைய திருநெறித்தமிழும் அவர்களுடைய செய்தியும் பூமியில் விளங்கச்செய்தருளுக" என்று போற்றிநின்றர். நம்பியாண்டார்நம்பி அவ்வரசன் வேண்டுகோட்கு உடன்பட்டு, பொல்லாப்பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி விண்ணப்பஞ் செய்தார். பொல்லாப்பிள்ளையார், "நம்பி, தேவாரமுறைகள் சிதம்பரத்தில் மூவர் கையடையாளமுள்ள ஓர்அறையில் உள்ளன" என்று திருவாய் மலர்ந்து அவற்றை அருளிய நாயன்மார் சரித்திரத்தையும் அருளிச் செய்தார். நம்பியாண்டார்நம்பி அதனைச் சோழ மகாராசாவுக்கு உபதேசித்தருளினர். அரசர்பிரான் நம்பியாண்டார்நம்பியுடன் சிதம்பரத்தை அடைந்து, நடராசரைத் தரிசித்து, தில்லைவாழந்தணரை இறைஞ்சி, அவர்கள் கட்டளைப்படி, திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர்த்திநாயனர் என்னும் மூவரையும் திருவுலாச் செய்து, கொண்டுவந்து அவர்கள் கையிலச்சினையுடைய அறையின் பக்கத்தே நிறுத்திக் கதவைத் திறந்து, திருமுறைகளைப் புற்று மூடியிருப்பக்கண்டு, பெருங் கவலை கொண்டார். அப்பொழுது திருவருளாலே "அரசனே, தேவாரத் திருப்பதிகங்களுள் இக்காலத்துக்கு வேண்டுவன

வற்றை வைத்து ஏனையவற்றை மண்மூடச் செய்தோம்" என்றோர் அசரீரிவாக்கு எழுந்தது. அந்தத் திருவாக்கைக் கேட்டலும் அரசர் கவலைநீங்கினர். நம்பி தேவாரத் திருப்பதிகங்களையும், திருவாசகம் முதலியவற்றையும், திருமுறையாக வகுத்தருளினர். வகுத்தபின், தமக்கு விநாயகக்கடவுள் உபதேசித்தருளிய பிரகாரம் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடியருளினர்.

பொல்லாப்பிள்ளையாருடைய திருவருளினல் தேவாரத் தமிழ்வேதம் பண்டுபோல வழங்கலாயிற்று.

நம்பியாண்டார்நம்பி சிவானுபூதிச்செல்வராய் எழுந்தருளியிருந்து சிவபதம் அடைந்தார்.

---

குறிப்பு :—

பொள்ளார் என்பது பொல்லார் என மருவிற்று, உளி முதலியவற்றால் போழ்ந்து செய்யப்படாதவர் என்பது கருத்து. எனவே, சுயம்புமூர்த்தி என்பதாம்.

இலச்சினை என்பது அடையாளம்.

---

## ச. சிவபெருமான்.

சிவபெருமான் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியஞ் செய்து, பசுக்களாகிய எங்களுடைய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நீக்கி, மோட்சத்தைக் கொடுக்கவேண்டுமென்னும் பெருங்கருணையினலே, அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகையான திருமேனிகளைக் கொண்டருளினர். சிவபெருமானுடைய திருமேனி தோல், எலும்பு முதலிய தாதுக்களாலுண்டாக்கப்பட்ட நமது அசுத்த சரீரம் போலாகாது, திருவருட்சத்திவடிவேயாம். அவர்

அருவத்திருமேனியைக் கொள்ளும் போது, சிவன் என்னும் திருநாமத்தைப் பொருந்துவர். அருவுருவத் திருமேனியைக் கொள்ளும்போது, சதாசிவன் என்னுந் திருநாமத்தைப் பொருந்துவர். இவர் கிரியாசத்தி ரூபமாகிய பீடமும் சிவரூபமாகிய இலிங்கமுஞ் சேர்ந்த கன்மசாதாக்கிய வடிவமாயிருப்பினும் ஐந்து திருமுகமும் பத்துத்திருக்கரங்களும், இருதிருவடிகளும் அமைந்த தியானரூபியாய் நின்று அருள்செய்வார்.

உருவத்திருமேனியைக் கொள்ளும்போது, மகேசுரன் என்னும் திருநாமத்தைப் பொருந்துவர். மகேசுவரர் மூன்று திருக்கண்களும், ஏகதேகமும், இருதிருவடிகளும், நஞ்சணி கண்டமும், நான்கு திருப்புயங்களும், செந்நிறத்திருமேனியும் உடையவர். வலக்கண்ணைச் சூரியனாகவும், இடக்கண்ணைச் சந்திரனாகவும், நெற்றிக்கண்ணை அக்கினியாகவும் உடையவர். செவிகளிலே பாம்பையும் சங்கையும் குண்டலங்களாகத் தரித்திருக்கிறார். சிவந்த சடையில் பாலசந்திரன், கங்கை, கொன்றைமாலை முதலியவற்றைத் தரித்திருக்கின்றார். திருக்கரங்களிலே மான், மழு முதலியவற்றைத் தரித்திருக்கின்றார். பாம்பு பிரமவிட்டுணுக்களுடைய எலும்பு, பன்றிக்கொம்பு, ஆமையோடு முதலியவைகளை ஆபரணமாக அணிந்திருக்கின்றார். விபூதியைத் திருமேனியிற்றரித்திருக்கின்றார். புலித்தோலை ஆடையாக உடையவர். யானைத்தோலைப் போர்வையாக உடையவர். சிவபெருமான் இவைகளை அணிந்தது தம்பயன்கருதி அன்று; ஆன்மாக்கள் தம்மையே தலைவரென்று அடைந்து, தீமைகள் நீங்கி முத்தி பெற்றுய்யும்படியாகவே தரித்தருளினார். சிவபெருமான் இடபவாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றி நின்று அருள் செய்பவர். பஞ்சகிருத்திய காரணமாகிய நடனத்தை

எப்பொழுதுஞ் செய்பவர். இவ்வடிவமே சிவபெருமானுக்கு உருவத்திருமேனியாகும். அவர் வேண்டிய வேண்டிய இடங்களிலே வேண்டிய வேண்டிய வடிவங்களைக் கொள்வர்.

ஆன்மாக்களுக்குப் போகத்தை ஊட்டுவதற்காகவும், யோகமுத்தி உதவுதற்காகவும், வினைகளை நீக்குதற்காகவும் சிவபெருமான் ஒருவரே சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து மூர்த்தங்களையும், விநாயகர், வீரபத்திரர், வைரவர், சுப்பிரமணியர் என்னும் மூர்த்தங்களையுங் கொண்டருளினர். இவர்கள் இரத்தினமும் ஒளியும் போலவும், அக்கினியுஞ் சூடும்போலவும், மரமும் வயிரமும் போலவும் சிவபெருமானினின்றும் பிரித்தெண்ணப்படாதவர்களேயாம். சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு நான்கு திருமுகங்களினின்றும் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும், உச்சிமுகத்தினின்றும் காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் தோற்றுவித்தருளினர்.

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

பண்—பியந்தைக்காந்தாரம்

சங்க வெண்குழைச் செவியன்
　　றண்மதி சூடிய சென்னி
அங்கம் பூணென வுடைய
　　வப்பனுக் கழகிய வூராந்
துங்க மாளிகை யுயர்ந்த
　　தொகுகொடி வானிடை மிடைந்து
வங்க வான்மதி தடவு
　　மணிபொழிற் காழிநன் னகரே.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருத்தாண்டகம்.

வங்கமலி கடனஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே யமரர்கடம் மிறைவா போற்றி
யாலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### பண்-கொல்லிக்கௌவாணம்.

துளைவெண் குழையுஞ் சுருள்வெண் டோடுந்
தூங்குங் காதிற் றுளங்கும் படியாய்
களையே கமழும் மலர்க்கொன் றையினாய்
கலந்தார்க் கருள்செய் திடுங்கற் பகமே
பிளைவெண் பிறையாய் பிறங்குஞ் சடையாய்
பிறவா தவனே பெறுதற் கரியாய்
வெளைமால் விடையாய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும்வேண் டுதியே.

### திருவாசகம்.

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனொர்கைம் மாறே.

### திருவிசைப்பா.

என்னையுன் பாதபங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ்ஞான்று
மொழிவற நிறைந்த வொண்சுடரே
முன்னையென் பாசமு முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியையா யினையே.

### திருப்பல்லாண்டு.

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்.

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலு
மிடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும்பெருமையுமுன்கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும்பெருமானும் விறல்வேந்தற்கருள்கொடுத்தான்

---

## ரு. விஷ்ணு பிரமர் அடிமுடி தேடியது.

பிரமதேவர் தமது பகல் கழிந்து இரவுவர நித்திரை செய்தார். கிரகங்களும் தேவருலகும், பூவுலகும் அழிந்தன. விட்டுணு பரமசிவனைத் தியானித்துக்கொண்டு ஆலிலையில் நித்திரைசெய்தார். சனலோகத்து முனிவர்கள் கண்டு புகழ அவர் விழித்துப் பூவுலகைத் தேடினார். அது பாதாளத்தில் ஆழ்ந்திருத்தலை அறிந்து, ஒரு பன்றி வடிவங்கொண்டு, தமது கொம்பினால் பூமியை எடுத்துக்கொண்டு மீண்டுவந்து முன்போல நிறுத்திப் போயினர். அப்பொழுது பிரமாவுக்கு மற்றொரு பகற்பொழுதாயது. பிரமா எல்லாவற்றையும் சிருட்டித்தார். விட்டுணுதாமே பிரமமென நினைத்து அகந்தையோடு பாற்கடலிற்றுயின்றார். பிரமா அவ்விடத்தை அடைந்து, விட்டுணுவின் மார்பிற்றாக்கி, நித்திரை விட்டெழுதி என்றார். விட்டுணு எழுந்தார். எழுந்த விட்டுணுவை "நீயார்" என்று பிரமதேவர் வினவினர். விட்டுணு "நான் உன் பிதா" என்றார். அவ்விருவரும் இவ்வாறாகப் பலவிதமாக வாதித்தார்கள். பிரமா "நாமிருவரும் யுத்தஞ் செய்வோம்; நம்மில் வெற்றி பெற்றவரே மேலவர்" என்றார். இருவரும் கடும்போர் செய்து, இறுதியில் சிவப்படைக்கலங்களைச் செலுத்தினார்கள். அவைகள் தம்முள் விளையாடி உலாவித்திரிந்தன.

இந்த வாறாக யுத்தம்செய்தபொழுது, சிவபெருமானது கிருபையினால் நாரதமுனிவர் தோன்றி, "நீங்களிருவரும் முதல்வரல்லீர், நீங்கள் யுத்தம் செய்யும் பொழுது செலுத்திய சிவப்படைக் கலங்களைத் தந்த கடவுளை மறந்தீர்கள்போலும்; மறந்தீராயின் அப்படைகளின் பெயரையும் மறந்தீர்களா? அப்பெயரை மனதிலே நினைத்துக்கொள்ளுங்கள்; இன்னும் நீங்கள் மலைவீராயின் ஆதியாய் அரு

வுருவான பரம்பொருள் சோதியாய் உங்கள் நடுவே தோன்றுவர்; அதைத்தரிசியுங்கள்" என்று ஞான அறிவினாலே இவைகளை உபதேசித்துச் சென்றார். பிரமவிட்டுணுக்கள் நாரதமுனிவர் கூறியவற்றை மனதிற்கொள்ளாதவர்களாய்ப் பலகாலம் யுத்தம் செய்தார்கள்.

இவைகளெல்லாவற்றையும் பரமசிவன் நோக்கி, அவர்கள் அகந்தையை நீக்கி அடிமைக்கொள்ளுமாறு திருவுளங்கொண்டு, மாசிமாதத்திலே அபரபக்ஷ சதுர்த்தசியின் நடு இரவில் அவர்கள் நடுங்கும்படி அவ்விருவருக்கும் நடுவில் ஓர் அக்கினிமலைபோலத் தோன்றியருளினார். தோன்றிய சோதி அவ்விருவரும் செலுத்திய சிவப்படைக்கலங்களிரண்டையும் தன்னுளடக்கி நின்றது. பிரமவிட்டுணுக்கள் கோபத்தையும் போரையும் நீக்கி அதைப்பார்த்து நின்றார்கள். அப்பொழுது "நீங்கள் இந்தச் சோதியின் அடியையும் முடியையும் காணுங்கள்" என்று அவர்கள் கேட்கும்படி ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. பிரம விட்டுணுக்கள் சபதங் கூறி "அடிமுடிகளில் ஒன்றை முன்னங் காண்பவரே பரம்பொருளாவர்" என்று உறுதிசெய்தனர்: பிரமா சோதியின் முடியைக் காண்பேன் என்றார். விட்டுணுசோதியின் அடியைக் காண்பேன் என்றார்.

திருமால் ஒரு பன்றியின் வடிவங்கொண்டு, பூமியை இடந்து கீழேயுள்ள புவனங்கள் எங்குந் தேடிச்சென்று அதனடியைக் காணாராய், வலிமைகுன்றித் துயரடைந்தார். அப்பொழுது பழையஞானம் முழுதுமுண்டாயிற்று. தெளிவடைந்த அவர் பன்றிவடிவத்தைத்தாங்க ஆற்றாதவராய், சிவபெருமானுடைய திருவடிகளையே புகலிடமென்று தோத்திரஞ்செய்து, அவருடைய அருளினாலே சோதிக்குப் பக்கலாக வந்துநின்றார். பிரமா ஒரு அன்னவடிவெடுத்து, மேலுள்ள

புவனங்களிற்றேடிச்சென்று முடியைக்காணுதவராய் வருந்தினர். சோதியினின்று சித்தர்போலப் பலர் வந்து, சிவபரத்துவத்தைக் கூறினுர்கள். பிரமா அகந்தைமுதலியன நீங்கி, விட்டுணுவை அணுகினர். இருவரும் சிவபூசைசெய்ய ஆசையுற்றவர்களாய், சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசைக்கு வேண்டும் உபகரணங்கள் எல்லாவற்றையும் அமைத்து அர்ச்சித்து வணங்கினுர்கள்.

சிவபெருமான் உமாதேவிபாகராய் இடபவாகனத்தின் மீதாக அந்தச் சோதிக்கணித்தாய் பிரம விட்டுணுக்கள் காணும்படி நின்று அருள் செய்தார்.

பிரம விட்டுணுக்கள் அவருடைய திருவடிகளை நமஸ்காரஞ் செய்து, அருள்வெள்ளத்தில் அமிழ்ந்தி, உண்மை உணர்வோடு நின்று, தோத்திரஞ் செய்து, தங்கள் குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி "நீங்கள் செய்த குற்றங்களொன்றையும் திருவுள்ளங்கொள்ளோம்; வேண்டியவரங்களைக் கேண்மின்" என்று அருளிச் செய்தார்.

அரிபிரமர் "கடவுளே, தேவரீருடைய திருவடிகளை புகலிடமாகக் கொண்டு வழிபடுகின்ற தலையன்பைத் தந்தருளுக" என்று வேண்டுதல் செய்தார்கள். கடவுள் அதனையீந்து, அந்தச்சோதியிலே மறைந்தருளினுர்.

பரமசிவன் மறைந்தபொழுது பிரம விட்டுணுக்கள் வணங்கி எழ, வளர்ந்தெழுந்த அச்சோதி சுருங்கிச் சுருங்கி வந்து, உலகெலாந் துதிக்கும்படி ஒரு மலையாயது, அந்தச் சிவலிங்கரூபமாகிய மலையை அரிபிரமர் அணுகி, மும்முறை பிரதக்ஷிணஞ் செய்து, வணங்கித்துதித்துத் தங்கள் பதவிகளுக்குப் போயினுர்கள்.

பிரம விட்டுணுக்கள் தேடிய அம்மலை அருணசலமென்னும் பெயருடையதாய் இன்னும் அடியார்கள் வணங்குமாறு இருக்கின்றது. அச்சோதி தோன்றியஇரவே சிவராத்திரியாயது. அத்தினத்திற் பலரும் சிவபெருமானைப் பூசித்து உய்ந்தார்கள்.

### திருநாவுக்கரசுசுவாமிகள் திருத்தாண்டகம்.

"காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தயனுங் காணா வண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கு
மேரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு
மேழுலகுங் கடந்தண்டத் தப்பா னின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

### சுந்தரமூர்த்திநாயனர். பண்—பழம்பஞ்சுரம்.

"பேழ்வாயரவினணையானும்பெரியமலர்மேலுறைவானும்
தாழாதுன்றன்சரண்பணியத்தழலாய்நின்றதத்துவனே
பாழாம்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்தன்னை
ஆள்வாயாலங்காடாவுன்னடியார்க்கடியேனவேனே."

### திருவாசகம்.

"பிரம னரியென் றிருவருந் தம் பேதமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
அரனா ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ."

பிரம விட்டுணுக்கள் தமக்குச் சிவபிரான் சோதிரூபம் காட்டியபொழுது, இச்சோதியை அடியேங்களுக்கு என்றுங் காட்டியருள்வேண்டும் என்றும் பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் "கார்த்திகைமாதத்தில் கார்த்திகைநக்ஷத்திரத்தில்காட்டுவோம்" என்றருளினர். அச்சோதியைக் குறிப்பதற்காகவே எங்கும் விசேஷமாக விளக்கேற்றப்படுகின்றது.

---

## ௬. உமாதேவியார்.

உமாதேவியார் சிவபெருமானுடைய சத்தியாகும். சத்தியாவது அக்கினியுஞ் சூடும்போல சிவத்தோடு பின்னமின்றி உள்ளதாகிய வல்லமையாம். திருவருளே சிவனுக்குச் சத்தியாம். அவ்வருட்குணமாகிய சத்தியின்றிச் சிவமில்லை. சிவத்தைவிட்டு சத்தி நீங்குவதில்லை. அக்கினிபொருளால் ஒன்றாயினும் வடிவாற் செம்மை என்றும் குணத்தாற் சூடு என்றும் பிரித்தெண்ணப் படுமாறுபோல, பரம்பொருள் ஒன்றேயாயினும் எவற்றையுங்கடந்து நிற்கும் ஒளியாகியவடிவால் சிவம் எனவும் எவற்றையுங் கலந்து அவைகளைத் தன்பாலிழுக்கும் வலிமையாகிய குணத்தால் சத்தி எனவும் பிரித்துக் கூறப்படும்.

சத்தியாகிய உமாதேவியார் பச்சைநிறமும், மூன்று கண்களும், அபயகரமும், வரதகரமும், தாமரைப்பூவும் உருத்திராக்கவடமுந் தாங்கிய மற்றிருகரங்களுமாக நான்கு திருக்கரங்களுமுடையவர். உயர்ந்த கிரீடமும், ஆபரணங்களுந் தரித்துள்ளவர்.

முன்னொருகாலத்திலே உமாதேவியார் பிரமாவினுடைய மகனாகிய தக்கன் என்பவன் செய்த பெருந்தவத்தினால் ஒரு வலம்புரிச்சங்கு வடிவாய்க் காளிந்திநதியில் ஒரு தாமரைப் புஷ்பத்தின்மீது வீற்றிருந்தனர். அவ் வலம்புரிச் சங்கைத் தக்கன் கண்டு எடுத்தான். எடுத்தவுடன் அது ஒரு பெண்குழந்தையாயிற்று. உமாதேவியார் அவனிடத்தில் குழந்தை வடிவமாய் வளர்ந்தார். தக்கன் உரிய காலத்திலே சிவபெருமானுக்கு முறைப்படி தத்தஞ் செய்துகொடுத்தான். தக்கன் செய்தபாவத்தினாலே அந்தவிவாக மண்டபத்திலிருந்து சிவபெருமான் மறைந்து போயினர். அது கண்டு உமாதேவியார் பெருந்துயரங் கொண்டு தவஞ் செய்

தார். சிவபெருமான் தோன்றி அருள்செய்து அவரைத் தமது இடபவாகனத்தில் ஏற்றித் திருக்கைலாச மலைக்குச் சென்றனர். பின்பு உமாதேவியார் சிவதூஷணஞ் செய்த தக்கனுடைய யாகத்தை அழிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் வீரபத்திரரைத் தோற்றுவித்து அவ்வியாகத்தை அழிப்பித்தருளினர்.

பின்னொருகாலத்திலே இமயமலை அரசன் உமாதேவியாரைப் புத்திரியாகப் பெறும்பொருட்டுத் தவஞ் செய்தான். சிவபெருமான் அவனது தவத்தை நிறைவேற்றும்பொருட்டு உமாதேவியாருக்கு அருள் செய்தார். தேவியார் ஒரு சிறுபிள்ளை வடிவுடன் சென்று பத்மை என்னுந் தடாகத்திற் புட்பித்திருந்த பதுமாசனத்தின் மீதாக இருந்தனர். உமாதேவியார் தனக்குப் புத்திரியாகவேண்டும் என்று தவஞ் செய்த அரசன் அவரைக் கண்டு மகிழ்ந்து ஆனந்தபாஷ்பம் சொரிய வணங்கிக் கைகளாலெடுத்துச் சிரசிற் சுமந்து சென்று மேனை கையிற் கொடுத்தான். மேனை உலகமாதாவாகிய உமாதேவியாரை வணங்கிப் போற்றினள்.

உமாதேவியார் அரசனிடம் விடைபெற்றுச் சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்தார். சிவபெருமான் தோன்றி அருள்செய்து மறைந்தனர். இச்செய்தியை உமாதேவியாரது தோழியர்கள் அரசனுக்குக் கூறினர்கள். அது கேட்ட மலையரசன் உமாதேவியாரைத் தவச்சாலையினின்றும் தனது கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்றான். சிவபெருமான் எழுமுனிவர்களை அனுப்பி மணம் பேசுவித்தார். மலைஅரசன் சந்தோஷித்து அதற்குஉடன்பட்டு, திருக்கைலாசமலைக்குச் சென்று, "எம்பெருமானே" திருமணஞ் செய்யும் பொருட்டு எழுந்தருளுக" என்றான். சிவபெருமான் உருத்திரர் முதலிய கணங்களோடு இமையத்தை அடைந்து முறைப்படி திருமணஞ் செய்தருளினர்.

## எ. உமாதேவியார்.

II

**வ**டமொழி தென்மொழி இரண்டினும் வல்லவனும், முறை வேண்டினோருக்கும் குறை வேண்டினோருக்கும் காண்டற் கெளியவனும், கருணைக்குறையுளும் ஆகிய மலயத்துவச பாண்டியன் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால் சிவ விரதங்களை அனுட்டித்து, புத்திரகாமேட்டியாகஞ் செய்தான். நெய் சமித்து முதலியவற்றால் அக்கினி சிகை விட்டெரிந்தது. அப்பொழுது, உலகமாதாவாகிய உமை மூன்று முலைகளையுடைய ஒரு பெண்பிள்ளை வடிவமாகி, மூன்று பிராயத்தோடு யாககுண்டத்தினின்றுந் தோன்றி வந்து, பாண்டியனது மனைவியாகிய காஞ்சனமாலையுடைய மடியில் இருந்தார். மீனாட்சிஅம்மையே தன்னன்பு காரணமாக அவதரித்த பெருங்கருணையை அறியாது, பாண்டியன் வருந்தி: "யான் வருந்திச்செய்த யாகம் ஒரு பெண்பிள்ளையையே தந்தது; இப்பிள்ளையும் பகைவர் நகைக்கும் வண்ணம் மூன்று தனங்களுடையதாய் வந்தது, யான் யாது செய்வேன்" என்றான். அப்பொழுது "மனங் கலங்காதே; புத்திரனுக்குப் போலச் சடங்குகளெல்லாஞ் செய்து; தடாதகை எனப் பெயரிட்டு முடிசூட்டுதி; இப்பெண்ணுக்குக் கணவன் வரும்போது ஒருதனம் மறையும்" என்று ஓர் அசரீரிவாக்குத் தோற்றியது.

சிவபெருமான் அருளிய பிரகாரமே மலயத்துவசன் சாதகன்மம் முதலிய சடங்குகளைச்செய்து வளர்த்து வந்தான். தடாதகை வேதம் முதலிய கலைகளைக்கற்று, யானை முதலியவற்றைச் செலுத்துவதினும் வில் வாள் முதலிய படைத்தொழிலினும்வல்லவராயினார். தந்தை அகம்மகிழ்ந்து

பலதேயத்து அரசர்கள் சூழ முடிசூட்டித் தன் அரசைக் கொடுத்துச் சுவர்க்கம் புக்கான். பெண்ணரசியாந் தடாதகைப்பிராட்டியார் பலதேசத்து அரசர்களும் வந்து பணி செய்ய, வடமொழி தென்மொழிப் புலவர்களும், முனிவர்களும், ஞானிகளும், மந்திரிகளும் பிறரும் சூழ அறநூல் வழி அரசியற்றுவாராயினர்.

தடாதகைப்பிராட்டியார், திக்கு விசயஞ் செய்ய விரும்பி நால்வகைச் சேனைகளோடு சென்று, வடதேசத்தி லுள்ள அரசர்களைவென்று, பின்னர் திருக்கைலாச மலையை நோக்கிச் சென்றார். படைவீரர் திருக்கைலையை வளையத் திருநந்திதேவர் பூதங்களை ஏவினர். பூதங்கள் யுத்தஞ்செய்து தோற்றன. திருநந்திதேவர் சிவபெருமானுக்கு நிகழ்ந்த வற்றை முறையிட்டார். சிவபெருமான் யுத்தகளத்துக் குச் சென்றார். அப்பொழுது சிவபெருமானைப் பிராட்டியார் கண்டார். உடனே ஒருதனம் மறைந்தது. முன்னுளிலே அசரீரிவாக்கை அறிந்த சுமதியென்னும் மந்திரி தடாதகையை வணங்கி, "தாயே இச்சிவபிரானே உமக்கு நாயகர்" என் றான். சிவபெருமான் "உன்னை மணஞ்செய்ய வருவோம்; நீ மதுரைக்குப்போ" என்று கிருபை செய்தார். பிராட்டி யார் மதுரையை அடைந்து மாளிகையிற் புகுந்தார். மந்திரி மார்கள், மதுரை நகரெங்கணும் மண முரசறைவித்து, எல் லாத் தேசங்களுக்கும் மணவோலை அனுப்பினார்கள். திரு முகம் பெற்ற சகல தேசத்துமன்னர்களும் வந்தார்கள். சிவ பெருமான் தேவர் உருத்திரர் முதலியோர் சூழ மதுரையுட் புகுந்து திருமண மண்டபத்தை அடைந்து வீற்றிருந்தருளி னர். அப்பொழுது விட்டுணு தடாதகைப்பிராட்டியைத் தத் தஞ் செய்தார். சிவபெருமான் முறைப்படி ஏற்றுக் கிருபை செய்தருளினர்.

உமாதேவியார் காஞ்சீபுரத்தின் கண்ணே ஏகாம்பரநாத சுவாமியின் வாமபாகத்திற் காமாட்சி என்னுந் திருநாமத்தோடு விளங்கி முப்பத்திரண்டு தருமங்களையும் ஆன்மாக்கள் ஈடேறும்படி செய்தருளுகின்றார். சிதம்பரத்திலே நடராசப்பெருமான் பஞ்சகிருத்திய நிருத்தஞ்செய்ய, ஆன்மாக்களின் பிறவிப்பிணி நீக்கத்தின்பொருட்டு சிவகாமி அம்மை என்னும் நாமத்தோடு அந்நிருத்தத்தைத் தரிசித்தருளுகின்றார். காசித்தலத்திலே, விசுவநாதர் ஆன்மாக்களுக்கு இறக்குங் காலத்திலே பிரணவம் உபதேசித்தருளும்போது, உமாதேவியார் விசாலாட்சி என்னும் பெயருடையராய், அவைகளுக்கு இளைப்பு நீங்கும்பொருட்டுத் தூசினால் வீசியருளுகின்றார். உமாதேவியார் இலக்குமி என்னுந் திருநாமத்தைப் பொருந்தி, எல்லாச் செல்வங்களையும், சரசுவதி என்னும் திருநாமத்தைப் பொருந்தி எல்லா வித்தைகளையும் கொடுத்தருளுகின்றார். துர்க்கை, காளி என்னும் பெயர்களைத் தாங்கி துஷ்ட நிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்பவரும் உமாதேவியாரேயாம். உலகமாதாவாகிய இவரை நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் மிக விசேடமாக வழிபட்டு உய்தல் வேண்டும்.

### கோயிற் புராணம்.

மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
யொன்றியமங் கல நாணி னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரிதா
னின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி.

### சேக்கிழார் புராணம்.

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

திருவிளையாடற்புராணம்.

பங்கயற் கண்ணரியபரம் பரனுருவே
தனக்குரிய படிவமாகி
இங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த
சரா சரங்களீன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க் கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங்கொண்ட
அங்கயற் கணம்மை யிருபாதப்போ
தெப்போது மகத்துள் வைப்பாம்.

---

## அ. சுப்பிரமணியக்கடவுள்.

முன்னொருகாலத்திலே சூரபதுமன் முதலிய அவுணர்கள் தேவர்களுக்கு மிக்க துன்பஞ் செய்தார்கள். தேவர்கள் தங்கள் துன்பத்தைக் கைலாசபதிக்கு முறையிட்டார்கள். சிவன் திருவுளமிரங்கி, தமது நெற்றிக்கண்களினின்றும் ஆறு அக்கினிப் பொறிகளைத் தோற்றுவித்தனர். அப்பொறிகள் ஆறும் ஆறு சிறுவராய்ச் சரவணப்பொய்கையில் வளர்ந்தன. அந்த அறுசிறுவரும் உமாதேவியார் ஒருங்கே தழுவ ஓருருவமாயினர். அவரே சுப்பிரமணியக்கடவுள் என்று போற்றப்படுவார். சுப்பிரமனியருக்குக் குமரன், வேலன், முருகன், கந்தன் முதலிய பல நாமங்களுண்டு. சுப்பிரமணியக்கடவுள் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கண்களும், பன்னிரண்டு திருப்புயங்களும், இரண்டு திருவடிகளும் உடையார். கொடி, குலிசம், தோட்டி, அஸ்திரம், வேல் என்னும் ஐந்தும் முறையே பொருந்திய கரங்களும் அபயகரமுமே வலக்கரங்களாம். தாமரை, மணி, மழு, தண்டு, வில் என்னும் ஐந்தும் முறையே பொருந்திய

கரங்களும் வரதகரமுமே இடத்திருக்கரங்களாம். குமாரக்கடவுள் இன்னும் அடியார்கள்பொருட்டு வேறு பல வடிவங்களைத் தாங்கி அருள் செய்கின்றார். வள்ளிநாயகியார் தெய்வதயானை அம்மையார் ஆகிய இருவரும் அவருக்குச் சத்தி என்று சொல்லப்படுவர். சூரன் முதலிய அவுணர்கள் இந்திரன் முதலிய தேவர்களை வருத்திச் சுவர்க்கத்தை எரித்துத் தேவர்கள் பலரையும், இந்திரகுமாரனாகிய சயந்தனையும் சிறையில் வைத்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் பரமசிவனுடைய கட்டளைப்பிரகாரம் வீரவாகு முதலிய வீரரோடும் பூதங்களோடும் சென்று அவ்வசுரர்கள் பலரையுங்கொன்று சூரபன்மனோடு எதிர்த்து யுத்தம் செய்தார். சூரபதுமன் பல மாயவடிவங்களைக்கொண்டு யுத்தம் செய்தான். சுப்பிரமணியக்கடவுள் அவைகளை மாற்றித் தமது விசுவரூபத்தைக் காண்பித்துச் சிறிதே நல்லறிவு வரச்செய்தார். அப்பொழுது சூரபதுமன் அவ்விசுவரூபத்தைக் கண்டு ஆனந்தபாஷ்பம் சொரிய அதன்வசமாய் நின்றான். முருகக்கடவுள் அவனுடைய அற்ப ஞானத்தை மாற்றியருளினார். சூரபதுமன் ஒரு இருள்வடிவங்கொண்டு தேவர்களை உண்ணும்படி விரைந்துசென்றான். தேவர்கள் அதனையறிந்து,

"நண்ணினர்க் கினியா யோலம் ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம்.

தேவர்க டேவே யோலம் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகிநின்ற மூர்த்தியே யோல மோலம்"

சூரபதுமன் எங்களை உண்ணும்படி செல்லுகின்றான்; இமைப்பொழுதும் தாமதஞ்செய்யாது, அவனுயிரையுண்டு அடியேங்களைக் காத்தருளுக" என்று வேண்டினார்கள். இந்திரனும் அங்ஙனமே வேண்டினான். சுப்பிரமணியக்கடவுள் தமது திருக்கரத்திலிருக்கும் ஞானரூபமாகிய வேற்படையைச் சூரபதுமன்மீது செலுத்தியருளினார். வேலாயுதம் ஆகிய ஞானசூரியன் செல்லுதலும் சூரபதுமனது இருள் வடிவம் முற்றும் அழிந்தது. சூரபதுமன் வேற்படை வருதலை நோக்கிக் கோபித்து ஒரு மாமரவடிவாய் நின்றான். வேற்படை கோபத்துடன் அம்மாமரவடிவத்தைச் சங்கரித்தது. சூரபதுமன் இறவாதவனாய்த் தன் பழையவடிவு கொண்டு தன் உடைவாளை எடுத்துப் போர்செய்ய எண்ணி எதிர்த்தான். வேற்படை அவனுடைய மார்பைப் பிளந்து உடம்பை இருகூறாக்கி பெருமானுடைய திருக்கரத்தில் வந்திருந்தது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியாத சூரபதுமன், பிளவுண்ட தன் இரண்டுகூறும் கோழியும் மயிலுமாகிப் போர்ச் செருக்குடன் வந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவன்மீது கிருபா நோக்கம் செய்தார். அவன் அத்திருவருட்பார்வையால் ஞானம்பொருந்திய மனத்தனானான். கடவுள் ஞானமடைந்த கோழியை நோக்கி, "நீ நம்முடைய தேரிற்கொடியாய்ச் சென்றிருந்து கூவுதி" என்றருள, அது அங்ஙனமே செய்தது. குமாரக்கடவுள் ஞானத்தைப்பெற்று ஒழுகுகின்ற மயிலை வாகனமாகக்கொண்டு, செலுத்தியருளினார். தேவர்கள் கடவுளுடைய பெருங் கருணையைத் துதித்தார்கள்.

வீரவாகுதேவர் முருகக்கடவுளுடைய கட்டளைப்படி சயந்தன் முதலியோரது விலங்கை அறுத்துச் சிறையை

நீக்கி அருள்செய்தார். வருணன் அவுணனுடைய பட்டினமாகிய மகேந்திரபுரியை அழித்தனன்.

ஒரு காலத்திலே பிரமா, தம்மை நமஸ்காரம் பண்ணாது கர்வத்தோடு சென்றமையைச் சுப்பிரமணியக்கடவுள் நோக்கி, அவரைப் பிரணவப்பொருள் வினாவினார். அவர் சொல்ல அறியாது மயங்கக், குட்டிச்சிறையில் வைத்துச் சில காலம் உலகங்களைப் படைத்தார். பின் சிவபெருமானுடைய விருப்பின்படி பிரமாவைச் சிறையினின்று நீக்கியருளினார். பின்னர்ப் பிரணவப்பொருளை அகத்தியமுனிவருக்கு உபதேசித்தருளினார். ஒருகால் முனிசிரேட்டராகிய நாரதர் ஒரு யாகஞ் செய்தார். மந்திர வேறுபாட்டால் அவ்வியாகத்தக்கினியினின்றும், ஒரு ஆட்டுக்கடா தோன்றி உலகம் முழுதையும் அழித்தது. முனிவரது வேண்டுகோளின் பிரகாரம் அவ்வாட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டு, அவருக்குக் கிருபைசெய்தருளினார்.

சுப்பிரமணியக் கடவுளை மெய்யன்போடு தியானிப்போர் சிவபெருமானுடைய திருவடி நீழலை அடைவார்கள்.

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

#### பண்—காந்தாரம்

வள்ளி முலைதோய் குமரன் றாதை வான்றோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீ ரரிசிற் றென்பாற் சிறைவண்டும்
புள்ளு மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

#### திருத்தாண்டகம்.

கோழிக் கொடியோன்றன் றாதை போலும்
 கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலு
 முள்குவா ருள்ளத்தி னுள்ளார் போலும்

ஆழித்தேர் வித்தகருந் தாமே போலு
    மடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
எழுபிறவிக்குந் தாமே போலு
    மின்னம்பர்த் தான்றோன்றி யீசனாரே.

**சுந்தரமூர்த்திநாயனார்.**

**பண்—தக்கேசி.**

வேந்த ராயுல காண்டறம் புரிந்து
    வீற்றி ருந்தவிவ் வுடலிது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருழந் திடுமிப்
    பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையி லாட்டுகந் தானைப்
    பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
    சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

**கந்தபுராணம்.**

மாயையின் வலியோ னாகி மான்முத லோரை வென்றே
யாயிரத் தோரெட் டண்ட மரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றாள் சென்னி வைப்பாம்.

**முதுமொழி வெண்பா.**

மேல்வளமெல் லாமமைந்தும் வீர மகேந்திரந்தான்
றோல்வியுற்று மாய்ந்ததே சோமேசா—ஞாலமிசை
ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

———

## ௰. சிவதூஷணம்.

சிவபெருமானை நிந்தித்தலும், சிவனை வழிபடும் முறையைப் போதிக்குங் குருவை நிந்தித்தலும், சிவனடியாரை நிந்தித்தலும், வேதாகமங்களை நிந்தித்தலும், அவைகளைக் கேட்டுக்கொண்டிருத்தலும் பிறவும் சிவத்துரோகங்களாகிய அதிபாதகங்களாம்.

குடிகளுக்குச் செய்யுந் தீமையினும் மகாராசாவுக்குச் செய்யுந்தீமை மிகக் கொடியது. அதுபோல ஆன்மாக்களுக்குச் செய்யுந் துரோகத்தினும் சிவனுக்குச் செய்யுந் துரோகம் மிகக்கொடியது. குடிகளுக்குச் செய்த தீமை அரசனாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். அரசனுக்குச் செய்த தீமையோ பொறுக்கப்படமாட்டாது. அதுபோலவே ஆன்மாக்களுக்குச் செய்த துரோகம் சிவபெருமானாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். சிவபெருமானுக்குச் செய்த துரோகம் பொறுக்கப்படமாட்டாது. ஆதலால் மேற்கூறிய சிவத்துரோகங்களில் ஒன்று செய்தவரும், அதற்குடன்பட்டவரும், அதுசெய்வாரை விலக்காது பொறுத்தவரும், அது செய்வாரோடு கூடினவரும் நரகங்களில் அளவில்லாதகாலம் கிடந்துவருந்துவர். சிவத்துரோகம் எவ்வகைப் பிராயச்சித்தத்தாலுந் தீராது.

முன்னொருகாலத்திலே, பிரமதேவருடைய புத்திரனாகிய தக்கன் என்பவன் சிவபெருமானைக் குறித்து அருந்தவஞ்செய்தான். சிவபெருமான் தோன்றி அருளி அவன் விரும்பிய வரங்களைக்கொடுத்தார். சிலகாலஞ்செல்ல அவன் செல்வச்செருக்கினால் சிவபெருமானையும் வேத முறையையும் இகழ்ந்து விட்டுணுவை யாகாதிபதியாக வைத்து ஒரு யாகத்தைச் செய்யத்தொடங்கினான். ததீசி முனிவர் வந்து சிவபெருமானையே முதல்வராக வைத்து யாகஞ்செய்ய

வேண்டும் என்று போதித்தார். தக்கன் அவற்றை அங்கீகரியாது இகழ்ந்தான். சிவபெருமான் அவனது யாகத்தைச் சிதைத்து, அடிமைக்கொள்ளுமாறு திருவுள்ளங்கொண்டு, தமது நெற்றிக் கண்ணினின்றும் வீரபத்திரமூர்த்தியைத் தோற்றுவித்தருளினார். அவர் ஆயிரஞ்சிரசுகளையும் மூவாயிரங் கண்களையும், இரண்டாயிரங் கரங்களையும், இரண்டு பாதங்களையும், சிவந்த நிறத்தையுமுடையவராய்த் தோன்றினர். உமாதேவியார் பத்திரகாளியைத் தோற்றுவித்தருளினார். பூதர்கள் சேவிக்க வீரபத்திரர் பத்திரகாளியுடன் யாகசாலையை அடைந்து அவிப்பாகத்தைக் கேட்டனர். அவன் கொடாதிகழ்ந்தான். வீரபத்திரர் அதுகண்டு தமது வாட்படையினால் அவனது சிரசை வெட்டி யாகாக்கினிக்கு உணவாக்கினார். தக்கனுடைய ஆணைக்கஞ்சி யாகத்துக்குச் சென்றிருந்த தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஏற்ற தண்டனைகளைச்செய்து, அருளுஞ் செய்தார்.

வீரபத்திரக்கடவுளைப் பிரமதேவர் நோக்கித் தமது புத்திரனை எழுப்பியருளுமாறு விண்ணப்பித்தார். வீரபத்திரமூர்த்தி ஒரு ஆட்டுத்தலையை அவனது குறை உடம்பில்வைத்துப் பொருத்தி "தக்கனே, எழும்புவாயாக" என்று எழுப்பினார். அவன் நல்லுணர்வுடன் எழுந்து, காசியை அடைந்து சிவபூசைசெய்து சிவகணத் தலைவனாயினான்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

உதைத்தவன்காணுணராததக்கன்வேள்வி
யுருண்டோடத்தொடர்ந்தருக்கன்பல்லையெல்லாம்
தகர்த்தவன்காண்டக்கன்றன்றலையைச்செற்ற
தலைவன்காண்மலைமகளாமுமையைச்சால

மதிப்பொழிந்தவல்லமரர்மாண்டார்வேள்வி
வந்தவியுண்டவரோடுமதனையெல்லாம்
சிதைத்தவன்காண்டிருமுண்டச்சாத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே.

**திருவாசகம்.**

பண்பட்டதில்லைப்பதிக்கரசைப்பரவாதே
யெண்பட்டதக்கனருக்கனெச்சனிந்துவனல்
விண்பட்டபூதப்படைவீரபத்திரராற்
புண்பட்டவாபாடிப்பூவல்லிகொய்யாமோ.

**சோமேசர் முதுமொழி வெண்பா.**

தக்கனார் வேள்வித் தவத்தைமேற் கொண்டிருந்துந்
தொக்கவற மாயிற்றே சோமேசா—மிக்க
அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

தக்கன் சிவனையும், அவரது மெய்யடியாராகிய ததீசி முதலியோரையும் இகழ்ந்து, தண்டிக்கப்பட்டமையையும், அவனைச்சார்ந்த தேவர்கள் தண்டிக்கப்பட்டமையையும் உணர்ந்து சிவநிந்தனைசெய்தல் கேட்டல் ஆகிய அதிபாதகத்துக்கு ஆளாகாது விலகிநடத்தல்வேண்டும்.

---

## ௧௦. வீரபத்திரக்கடவுள் சரபவடிவங் கொண்டது.

முன்னொருகாலத்திலே இரணியன் என்னும் ஓர் அசுரன் பிரமாவை நோக்கிப் பெருந்தவஞ்செய்தான். பிரமதேவர் தோன்றி, "இரணியனே, நீ விரும்பிய வரங்கள் யாவை? கூறுதி" என்று வினவியருளினர். இரணியன் பஞ்சபூதங்கள் மிருகங்கள் பட்சிகள் முதலியவற்றினால்

இரவிலும் பகலிலும் இறவாதிருக்கவேண்டும்; இறப்பினும் எனது உடலினின்று ஒழுகிய உதிரத்தில் ஒருதுளி நிலத்தில் விழுந்தாலும், உடனே அவ்வுதிரத்துளி என் வடிவு பெற்று என்பகைவர்களை அழிக்கவேண்டும்" என்று வேண்டினன். பிரமதேவர் "அவ்வாறே ஆகுக" என்று மறைந்தருளினர். அவன் தருக்குற்று, தேவர் முதலியோரை வருத்திக் கொடுங்கோல் செலுத்திவந்தான். அவனுஞ்ஞையால் அனைவோரும் "இரணியாய நம" என்றே முதற்கூறித் தங்கள் கருமங்களைத் தொடங்குவார்கள். இங்ஙனம் நிகழுங்காலத்தில் அவனுக்கு பிரகலாதனன் என்னும் பெயருள்ள ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு ஐந்து வயசாயபின்னர் இரணியன் சுக்கிராசாரியருடைய புத்திரர் இருவரிடத்தில் வித்தை கற்கும்படி அனுப்பினன். அவர்கள் அப்புதல்வனுக்கு ஆரம்பத்தில் இரணியாய நம என்று சொல்லிக்கொடுத்தார்கள். புதல்வன் 'நமோ நாராயணாய' என்று கூறினன். சுக்கிரன் புத்திரர்கள் கோபமுடையராய், இரணியனிடம்போய்ப் பிரகலாதனனுடைய செய்கையைக் கூறினர்கள். இரணியன் தன் மகனை அழைத்து, "உனக்குக்கூறிய முதல் வாக்கியத்தைக் கவனியாது, வேறுயாது சொற்றனை" என்று கோபத்துடன் வினவினன். பிரகலாதனன் "நமோ நாராயணாய" என்றான். கொடியோன் கடுஞ் சீற்றங்கொண்டு, மகனை வெட்டுவித்தான். அவனுடைய சரீரம் ஊறடையவில்லை. இரணியன் விடமூட்டுவித்தான். அது அவனுக்கு அமிர்தமாயது. பாம்புகளைக் கடிக்கும்படி ஏவினன். பாம்புகளின் பற்கள் முரிந்தன. யானைகளைக் குற்றும்படி செய்தான். அவைகளின் தந்தங்கள் ஒடிந்தன. இன்னும் இவைபோலும் பல தண்டனைகளைச் செய்வித்தும் அவன் இறக்கவில்லை.

மகன் இறவாததன்மையைக் கேள்வியுற்று, சபை முன்னர் வருவித்து "என்னையன்றி வேறுகடவுளுண்டா? நீ சொல்லிய அக்கடவுளை என் கண்முன்னே காட்டுவாயாக; காட்டாதொழிவையேல் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று கூறினன். அதுகேட்ட பிரகலாதனன் "திருமால் எங்குமுள்ளவர்" என்றான். இரணியன் "இத்தூணில் அவனைக் காட்டக்கடவாய்" என்றான். அப்பொழுது திருமால் அவன் சுட்டிய தூணிலிருந்து நரசிங்கமாய்த்தோன்றி, மாலைப்பொழுதில் இரணியனைத் தள்ளி மடியிற் கிடத்தி, முதுகைப்பிளந்து அவனது உதிரத்தையும் உயிரையும் பருகினர்.

விட்டுணுவாகும் நரசிங்கம் "இரணியனைக் கொன்றேன்" என்று அகங்கரித்து, சீவராசிகளை வருத்தியது. பிரமா முதலிய தேவர்கள் சிவபெருமானை வணங்கி, "அடியேங்களது அச்சத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பித்தனர். வீரபத்திரக்கடவுள் சிவபெருமானது திருவுள்ளக் கருத்தின்படி எட்டுக்கால்கள் பொருந்திய சரப உரு வற்று, நரசிங்கத்தைக் கொன்றனர். கொன்றபின்னர் தோலை உரித்தெடுத்து, அச்சரப உருவை நீக்கி அத்தோலைச் சிவன் சந்நிதியில் வைத்து வணங்கினர்.

பிரமா முதலிய தேவர்கள் பணிந்து "சுவாமீ! இத்தோலை ஆடையாக அணிந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் அவ்விதமே சாத்தியருளினர். விட்டுணு தாம் நரசிங்காவதாரங்கொண்டு செய்த பாவங்களைத் தீர்க்கவிரும்பிச் சிவபெருமானுடைய பாதங்களை அருச்சித்துத் தமது பதவியை அடைந்தார்.

### திருநாவுக்கரசுநாயனார்.

### திருத்தாண்டகம்.

துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை யாகங் கீண்ட
அங்கனகத் திருமாலு மயனுந் தேடு
மாரழலை யநங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேன் மன்னி நின்ற
செங்கனகத் திரடோளெஞ் செல்வன் றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே.

### சுந்தரமூர்த்திநாயனார்.

### பண்—இந்தளம்.

படங்கொணாகஞ் சென்னிசேர்த்திப் பாய்புலித்தோ லரையில்வீக்கி
அடங்கலாரூ ரெரியச்சீறி யன்றுமூவர்க் கருள்புரிந்தீர்
மடங்கலானைச் செற்றுகந்தீர் மனைகடோறுந் தலைகையேந்தி
விடங்கராகித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே.

---

## ௧௧. வைரவக்கடவுள்.

முன்னோர்காலத்தில் திருமாலும் பிரமாவும் மகாமேருமலையின் ஒரு கொடுமுடியில் இருந்தார்கள். அப்பொழுது முனிவர்களும் தேவர்களும் வந்து வணங்கி, "முழுமுதற்கடவுள் யார் என்பதை அடியேங்களுக்கு உபதேசித்தருளுக" என்றார்கள். பிரமா "நானே பரம்பொருள்" என்றார். விட்டுணுவும் "நானே பரம்பொருள்" என்று கூறினார். இருவரும் இத்தன்மையாகத் தர்க்கஞ் செய்ய, முனிவர்களும் தேவர்களும் இது நம்மால்வந்தது என்றுகூறி, ஒருவரும் நில்லாது நீங்கினர். பிரம விட்டு

ணுக்கள் பின்பும் வாதஞ்செய்தார்கள். வேதமும் குடிலை யும் வேறுவேறு உருவங்களைத்தாங்கி "வாதஞ்செய்யற்க; சிவபெருமான் ஒருவரே மெய்க்கடவுள்" என்று கூறின. அவர்கள் பின்னும் போரைச்செய்தார்கள். பெருங்கரு ணைக்கடலாகிய சிவபெருமான் அதைக்கண்டு, அவர்களு டைய போரைத்தொலைக்கத் திருவுள்ளங்கொண்டு, அமல மாகிய சோதிவடிவாய் ஆகாசமத்தியில் தோன்றியருளி னர். அகந்தைகொண்ட பிரம விட்டுணுக்கள் அச்சோதி யைச் சிவமென அறியாதவர்களாயினர். அதனைப் பரம சிவன் அறிந்து உமாதேவி சமேதராய் அச்சோதியினி டையே தோன்றியருளினர். விட்டுணு விரைந்தெழுந்து வணங்கினர். மாயை சிறிதும் நீங்காத பிரமா தமது உச்சிச் சிரசிலுள்ள வாயினல் சிவபெருமானை இகழ்ந்த னர்.

சிவபெருமான் பிரமாவினுடைய பாவத்தைத் தொலைக் கவும், மற்றைத் தேவர் முதலாயினோர்தம் அகந்தையை நீக்கவும், வைரவக்கடவுளைத் தமது இருதயத்திலிருந்து உண்டாக்கினர். அவர் நீலநிறத் திருமேனியும், சூலம், பரசு, பாசம், உடுக்கு ஏந்திய நான்கு திருக்கரங்களும், திரிநேத்திரங்களும், திருச்சடையுமுடைய உக்கிர வடிவு கொண்டு தோன்றினர். வயிரவக்கடவுளைச் சிவபெருமான் நோக்கி, "நம்மை இகழ்ந்த பிரமனுடைய உச்சிச் சிரசைக் கிள்ளிக் கையிலேந்தி, மற்றைத் தேவர் முனிவர்களது இரத்தத்தைப் பிக்ஷையாக ஏற்குதி; அப்பொழுது இறந்த வருக்கு மீட்டு உயிரைக்கொடுக்குதி" என்று கூறிச் சோதி யில் மறைந்தருளினர்.

சோதியும் மறைந்தது. விட்டுணு சிவனை வணங்கி, வைகுண்டமடைந்தார். வைரவக் கடவுள் பிரமாவினது உச்

சிச்சிரசை நகத்தாற் கிள்ளித் தமது திருக்கரத்தில் எந்தி அவருக்கு உயிர்கொடுத்தருளினர். பிரமா எழுந்து நல்லறிவு வரப்பெற்று, வைரவக்கடவுளுடைய பாதங்களை அன்போடு வணங்கி, "சர்வசங்காரகாரணராகிய கடவுளே, அடியேன் செய்த பிழையைப் பொறுத்து அருளுக. தீமையும் எளிமையும் உடைய இந்தச் சிரசும் பரிசுத்தமுடைய தாம்படியும், அடியேன் தேவரீரைத் தரிசிக்கும்பொழுது மயக்கம் தீரும்படியும் சூலப்படையைப்போல் இச்சிரசையும் திருக்கரத்தில் எந்தியருளுக" என்றுசொல்லித் துதித்தார். வைரவப்பெருமான் "அவ்வாறேயாகுக" என்று திருவுளஞ்செய்து, மேருமலையை நீங்கிப் போய்த் தேவர்களதும் முனிவர்களதும் குருதியைப் பிக்ஷையாக ஏற்று, அவர்களுக்கு உயிர்கொடுத்து எழுப்பியருளினர்.

வைரவக்கடவுள் பின்னர் வைகுண்டமடைந்து, விட்டுணுவினுடைய இரத்தத்தைப் பிக்ஷையாக ஏற்று, அவர் சோர உய்ந்தெழும்படி அருள்செய்து, அண்டங்களைப் பரிபாலித்து வீற்றிருந்தருளினர்.

சுந்தரமூர்த்திநாயனர்.

பண்—தக்கேசி.

என்ற வந்தணன் றலையினை யறுத்து
நிறைக்கமா லுதிரத்தினை யேற்றுத்
தோன்று தோண்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்தமா விரதத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவ னெளியவன்
றன்னைத் தன்னிலா மனத்தார்க்கு
மான்று சென்றணை யாதவன் றன்னை
வலிவலந் தனில்வந்து கண்டேனே.

திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம்

பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணு முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற வெளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
யரக்கனைஞ்ஞான்கு தோளுந் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றிபோற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

---

## கஉ. தவம்.

தவமானது மனம் பஞ்சப்பொறிகளின் வழியிலே செல்லாது நிற்றற்பொருட்டு விரதங்களினலே, உணவைச் சுருக்குதல் முதலிய செய்கையை மேற்கொண்டு, கடவுளைத் தியானித்தலாம். ஒருவனிடத்திலே அன்பும் அருளும் உண்டாயின், தவம் உண்டாகும். தவம் உண்டாயின், அவன் பிறவிக்குக் காரணமாகிய மும்மலங்களினின்று நீங்கிப் பேரின்பத்தை அநுபவிப்பன். ஆதலால் தவம்போலச் சிறந்தது பிறிதில்லை. ஐம்பொறிகளை அடக்கித் தவஞ்செய்து, முத்தியின்பத்தைப் பெற்றார் சிலர். இம்மையின்பத்தைப்பெற்றார் சிலர். இருமை இன்பங்களையும்பெற்றார் சிலர். தம்முடைய உடம்பைவாட்டி நெடுங்காலந் தவஞ்செய்தவரே தேவராகி மேற்பதவிகளைப் பெற்றிருக்கின்றார்கள். தவஞ்செய்து முத்தியின்பம் பெற்றவர்களை இவ்வளவினரென்று கூறுவது அரிது. தவஞ்செய்யாது பிறவுயிர்களுக்குத் துன்பஞ்செய்வோருக்கு இருமை

இன்பமும் இல்லை. அவர்கள் பிறவித்துன்பத்தை அடைவார்கள். இருமை இன்பத்துக்கு ஏதுவாகிய தவத்துக்கு ஒப்பும் இல்லை; உயர்வுமில்லை. தவத்தை ஒப்பது தவமேயாம். உடம்பைவாட்டித் தவஞ்செய்வோர் உலகமெல்லாம் வியக்கும்படி வாழ்வர். பகைவரை அழிப்பர். விரும்பிய பொருளெல்லாம் அடைவர். நித்தியராய் இருப்பர். உடம்பைவாட்டி அருந்தவஞ்செய்து மேன்மையை அடைந்த அருச்சுனனுடைய சரித்திரம் வருமாறு:—

பாண்டவர் ஐவரிலொருவனாகிய அருச்சுனன் பகைவர்களை வெல்வதற்காகப் பாசுபதாஸ்திரம் பெறும்பொருட்டு இந்திரநீலமலையிலிருந்து, விபூதி உருத்திராக்கத்தை அணிந்து, ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபித்து சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். துரியோதனனாலனுப்பப்பட்ட மூகாசுரன் என்பவன் அங்கேவந்து பன்றிவடிவோடு இருந்தான். அக்காட்டிலிருந்த தபோதனரெல்லாம் அப்பன்றியால் மனங்கலங்கியிருந்தார்கள்.

பரமசிவன் பன்றியின் வலிமையை மாற்றத் திருவுள்ளங்கொண்டு, திருவடிகளில் செருப்பைத்தரித்து, திருவரையில் புலித்தோற்கச்சைக் கட்டி, சுரிகையைச் செருகி திருமார்பில் குன்றிமணிமாலை முதலிய மாலைகளை அணிந்து, முதுகில் தூணியைக்கட்டி, திருக்கரங்களில் அம்பையும் வில்லையும் ஏந்தி, இவ்வாறு ஒரு வேட்டுவத் திருக்கோலத்தைக்கொண்டு முன்னே சென்றருளினார். பார்ப்பதி தேவியாரும் எம்பிரான் எடுத்த வேடவடிவத்திற்கியைய ஒரு திவ்விய வடிவத்தைத் தாங்கி அவருக்குப்பின்னே போயினார். சிவபெருமான் செல்லுதலும், அப்பன்றி விரைந்து அவரது முன்னிலையில் ஆர்த்துவந்தது. பெருமானார் ஒரு திருவிளையாடலைத் திருவுள்ளத்துன்னி,

ஓரம்பை எய்தருளினார். அவ்வம்பு படுதலும் பன்றி வெருவி ஓடி ஒழித்தது. சிவபெருமான் தவறுதபடி தொடர்ந்துசெல்ல, அது இளைத்து முனிவர்களது ஆச்சிரமத்தை அடைந்தது. முனிவர்களெல்லோரும் அப்பன்றிக்குப் பயந்து ஓடி விசயனை அடைந்தார்கள். உடனே அவன் எழுந்து வில்லை வளைத்து அம்பைத்தொடுத்துப் பன்றிவிழும்படி எய்தான். பரமசிவனுகிய வேடுவர் வந்தருளி "இப்பன்றியை யானே கொன்றேன்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அருச்சுனன் கிராதமூர்த்தியை நோக்கி "காட்டில்வாழுங் கொடுந்தொழிலையுடைய வேடுவனே, நான்விட்ட அம்பு தைக்கவும் நீ பொய்வார்த்தையைப் பேசுகின்றாய்; வில்லோடு உன் சிற்றூர்க்குப்போ" என்றான். இதனால் இருவருக்கும் செரு நிகழ்ந்தது. அருச்சுனன் அதுகாலை சிவபெருமானது திருமுடியில் வில்லினால் தாக்கினான். சர்வலோகாதிபதியாய், சர்வ வியாபகராய், இலங்குஞ் சிவபெருமான்மீது பட்ட அவ்வடி சரம் அசரம் ஆகிய எல்லாப்பொருள்களிலும் பட்டது. மீண்டும் சிவபெருமான் விசயனுடன் மல்யுத்தம் புரிதலாகிய திருவிளையாடலைச்செய்து, கிராதவடிவைக் கரந்து, உமையுந் தாமுமாக இடபவாகனத்தில் ஆரோகணித்துக் காட்சி கொடுத்தருளினார்.

அருச்சுனன் சரீரம் நடுங்கி அயர்ந்து கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்சொரிய, "அடியேனது குற்றத்தைப் பொறுத்தருளுக" என்று வேண்டினன். சிவபெருமான், "அருச்சுனனே, அஞ்சேல் உனக்குவேண்டும் வரம் யாது கூறுதி" என்றருளிச்செய்தார். அருச்சுனன் வணங்கி, "பரமபிதாவே தேவரீருடைய திருவருளினால் அடியேன் உய்யும்படி முத்தி தந்தருளுக" என்று வேண்டி-

ஞன். சிவபெருமான் "வில்வீரனே, பூமியிற் பகைஞரை வெல்வதற்கு பாசுபதாஸ்திரம் பெறுமாறு நினைத்துத் தவஞ்செய்தாய்; அதனை முன்னதாகவே பெற்றுக்கொள்" என்று கொடுத்து "எம்மை வேடனென்று இகழ்ந்து கூறினை; அதனால் வேடராசனாகித் திருக்காளத்தி சென்றடைந்து அன்புருக்கொண்டு எம்மைப் பூசித்துப் பன்றி முதலிய விலங்குகளின் மாமிச உணவை நிவேதிக்குதி" அந்நாளில் உனக்கு மோக்ஷத்தைக் கொடுப்போம்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

### திருநாவுக்கரசுநாயனார்.

### திருநேரிசை

"அரும்பெருஞ் சிலைக்கைவேட னாயவ்விற் பார்த்தற் கன்று
உரம்பெரி துடைமை காட்டி யொள்ளமர் செய்து மீண்டே
வரம்பெரி துடைய னாக்கி வாளமர் முகத்தின் மன்னுஞ்
சரம்பொலி தூணி யீந்தார் சாய்க்காடு மேவி னாரே."

"வெங்கடுங் கானத் தேழை தன்னொடும் வேட னாய்ச்சென்
றங்கமர் மலைந்து பார்த்தற் கடுசர மருளி னானை
மங்கைமா ராட லோவா மன்னுகா ரோணத் தானைக்
கங்குலும் பகலுங் காணப் பெற்றுநான் களித்த வாறே"

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

### பண்—பழந்தக்கராகம்

"வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளும் நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே"

---

## ௧௧. அன்புடைமை.

அன்பாவது ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் மனநெகிழ்ச்சியாம். நம்மோடு தொடர்புடையராய் நமக்கு இனியவராய் உள்ளவர் யாவர் என்று ஆராய்தல்வேண்டும். தந்தை தாய் முதலியோருக்கும் எமக்கும் உள்ள தொடர்ச்சி நிலையில்லாத இவ்வுடம்பினால் ஆயது. இவ்வுடம்பு அழியவே இதனால் ஆகிய தொடர்ச்சியும் ஒழியும். உடம்பினாலே தொடர்ச்சியுள்ளபோதும் சிலகாலங்களிலே நமது உறவினரே நமக்குப் பகைவராகவும், பகைவரே உறவினராகவும் காண்கின்றோம். ஆதலால் இவர்களை எமக்கு இனிய்ரென்று கொள்ளுதல் கூடாது. எந்நாளும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்னும் கருத்து நமக்கு உண்டு. ஆயினும் நாம் இன்பம் இது, துன்பம் இது, துன்பத்தினின்று நீங்கி இன்பம்பெறும்வழி இது என்று உள்ளவாறு அறிதற்கும், துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்கும் சுதந்திரசத்தி உடையேயாம் அல்லேலாம். ஆகையால் எமக்கு நாமே இனியம் எனக்கொள்ளுதலும் பொருந்தாது.

ஆன்மாக்கள்மேல் வைத்த பெருங் கருணையினாலே அவர்களை அநாதியேபந்தித்த மலத்தை நீக்கி மோக்ஷத்தைக் கொடுத்தருளும் பரமபதி சிவபெருமான் ஒருவரே; ஆதலால் அவர் ஒருவரே நமக்கு இனியவர் என்று கொண்டு அவரிடத்திலேயே அன்பு செய்தல்வேண்டும். அன்பு இல்லாதவிடத்துச் சிவபெருமானை ஒருவாற்றானும் அடைதல் கூடாது. இடையறாது வளரும் அன்பின் முதிர்ச்சியிலே சிவபெருமான் விளங்குவர். சிவபெருமா

னிடத்து அன்புடைமைக்கு அடையாளங்கள்: அவரு டைய உண்மையை நினைக்கும்பொழுதும், கேட்கும்பொ ழுதும், காணும்பொழுதும், தன்வசமழிதலும், ஆனந்த அருவிபொழிதலும், விம்மலும் பிறவுமாம். இவ்வன்பு பல பிறவிகளிற் செய்த புண்ணிய முதிர்ச்சியினாலேயே வரும். இவ்வன்புடைமையால் தமக்கு ஒப்பாரும் மிக்கா ரும் இன்றி விளங்கிய பெரியார் கண்ணப்பநாயனார்.

அருச்சுனன் என்பான் சிவபெருமான் கட்டளையிட் டருளிய பிரகாரம் பொத்தப்பிநாட்டிலுள்ள உடுப்பூரிலே வேடத்தலைவனாகிய நாகன் என்பவனுக்கு தத்தை என்ப வளிடத்தில் புத்திரனாய்ப் பிறந்தான். அப்பிள்ளைக்குத் திண்ணனார் என்று பெயரிடப்பட்டது. திண்ணனார் வில் வித்தையில் சாமர்த்தியம் உடையவராயினார். அவர் ஒரு நாள் வனத்திற்சென்று வேட்டையாடினார். வேட்டை யாடும்பொழுது ஒருபன்றி வேடருடையவலையை அறுத்து வேகமாக ஓடியது. திண்ணனார் அப்பன்றியைக் கொல்ல நினைத்து விசையோடு தொடர்ந்தார். பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய் இளைப்பினால் ஒரு மா நிழலிலே நின்றது. திண்ணனார் அதை உடைவாளினாலே குத்தினார். அவரு டன்வந்த நாணன் காடன் இருவரும் இறந்த அப்பன்றி யைக் கண்டு "இதை நெருப்பிலே காய்ச்சித்தின்று தண் ணீர் குடிப்போம்" என்றார்கள். திண்ணனார் அதற்கு உடன்பட்டு அவர்களுடன் சிறிது தூரஞ்செல்லத், திருக் காளத்திமலை தோன்றியது. அவர் நாணனை நோக்கி, "நமக்குமுன்னாகத் தோன்றுகின்ற இம்மலைக்குப் போ வோம்" என்றார். நாணன் "இம்மலையில் குடுமித்தேவ ரைக் கும்பிடலாம்" என்றான். திண்ணனார் பொன்முக லியாற்றை அடைந்து அதன் கரையிலுள்ள நிழலிலே

அப்பன்றியை வைத்தார். பின்பு காடனை நோக்கித் "தீக்கடைகோல்செய்து நெருப்பை உண்டாக்கு" எனக் கட்டளையிட்டார். கட்டளைசெய்து நாணனோடும் பொன்முகலியைக்கடந்து மலையிலே பேராசையோடும் ஏறிச் சென்று, சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டார்.

கண்டமாத்திரத்திலே பரமசிவனுடைய கிருபாநோக்கத்தைப்பெற்று, முன்னுள்ள குணங்கள் மாறிப் பரமசிவனிடத்தில்வைத்த அன்புருவமாயினார். விரைந்து சென்று தழுவி முத்தமிட்டார். சரீரம் முழுதும் உரோமாஞ்சங்கொள்ள, கண்ணீர்சொரிய மனங்கசிந்துருக, ஆனந்தங்கொண்டு "துட்டமிருகங்கள் இருக்கிற இக்காட்டிலே நீர் துணையின்றி வேடரைப்போல் இருப்பதெவ்வாறு?" என்று துக்கித்துப் பரவசமடைந்தார். பின் ஒருவாறு தெளிந்து "இவருடைய முடியிலே நீரைவார்த்துப் பச்சிலைகளையும் பூவையும் இட்டவர் யாவரோ" என்றார். அப்பொழுது அங்குநின்ற நாணன் "பண்டு உமது பிதாவுடனே வேட்டையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபோது, ஒரு பார்ப்பான் இவர்முடியிலே நீரை ஆட்டி இலையையும் பூவையுஞ் சூட்டி, உணவை ஊட்டி சிலவார்த்தைகளைப் பறைந்தான் அதைக்கண்டிருக்கின்றேன். இன்றும் இப்படி அவனே செய்தான்போலும்" என்றான். அதைக்கேட்ட திண்ணனார் இந்தச்செய்கைகளே திருக்காளத்திநாதருக்கு இனிய செய்கையென்று கடைப்பிடித்தார். பின்சுவாமி அமுதுசெய்வதற்கு இறைச்சிகொண்டுவர விரும்பி அவருடைய சந்நிதானத்தை அருமையாக நீங்கி, பிறவிடயங்களிலுண்டாகும் வேட்கை நீங்கி அன்புமயமாகி அங்குள்ள சோலையிலே புகுந்தார். காடன்

அதுகண்டு கும்பிட்டு, "நெருப்புக்கடைந்து வைத்திருக்கிறேன்; இவ்வளவு நேரமும் நீர் தாழ்ந்தது என்னை" என்றான். நாணன் அதைக்கேட்டு, "இவர் மலையிலே உள்ள தேவரைக்கண்டு, நீங்கமாட்டாதவராய் நிற்கின்றார். அந்தச்சுவாமிக்கு ஊட்ட இறைச்சி கொண்டுபோகும்பொருட்டே வந்திருக்கின்றார் என்றான். திண்ணனார் பன்றியை வதக்கி, இனிய தசைகளைக் கிளித்து, காய்ச்சி வெந்தவுடனே, தம்முடைய வாயிலே இட்டுச்சுவைபார்த்து, இனியனவாகிய இறைச்சிகளைத் தேக்கிலைக் கல்லையிலேவைத்து மற்றையவைகளை உமிழ்ந்தார். இதைக்கண்ட நாணன் காடன் இருவரும் இறைச்சியைத் தாமுண்கின்றாருமில்லை பசியுடைய எங்களுக்குத் தருகின்றாருமில்லை; தெய்வப் பித்துக்கொண்டார். இதை நாகனுக்குக் கூறுவோம்" என்றுசொல்லி காட்டிலேநின்ற ஏவலாளரையுங் கொண்டு சென்றார்கள்.

திண்ணனார் கல்லையில் ஊனாகிய அமுதை அமைத்து, திருமஞ்சனம் ஆட்டும்பொருட்டு ஆற்றுநீரை வாயினால் முகந்து, பூக்களைக் கொய்து தலையிலே செருகி, ஒரு கையில் அம்பையும் வில்லையும் மற்றக் கையில் இறைச்சியையும் ஏந்தி, மிகவிரைந்து கடவுளை அடைந்தார். அடைந்து அவருடைய திரு முடிமேல் இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பால் மாற்றி, தம்முடைய வாயில் இருக்கின்ற நீரைத் திருமுடிமேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில் இருந்த பூக்களை எடுத்துத் திருமுடிமேற் சாத்தினார். பின்பு இறைச்சியைத் திருமுன் படைத்து "கொழுமையான இறைச்சிகள் எல்லாவற்றையும் நாக்கினாற்,சுவைபார்த்துப் படைத்தேன். மிக நன்றாகவிருக்கின்றது. நாயகரே! இதை அமுதுசெய்தரு

ளும்" என்று சொல்லி உண்பித்தார். சூரியன் அத்தமயன மாயினன். தேவருக்குத் துட்ட மிருகங்கள் துன்பஞ்செய்யக்கூடும் என்று இராமுழுதும் கையிலே வில்லை ஏந்தி, சுவாமிக்குப் பக்கத்திலே, விழித்துக்கொண்டு நின்றார். அப்படிநின்ற திண்ணனார் சுவாமிக்கு இறைச்சி கொண்டு வரும்படி வைகறைப்பொழுதிலே சென்றார்.

---

## கச. அன்புடைமை.

## II

திருக்காளத்தியீசரைத் தினந்தோறும் சைவாகம விதிப்படி அருச்சிக்கும் ஆதிசைவராகிய சிவகோசரியார் என்பவர், ஆற்றிலே ஸ்நானஞ்செய்து, திருமஞ்சனமும் பத்திரபுஷ்பமும் எடுத்துக்கொண்டு சிவசந்நிதானத்திலே போனார். போகும்பொழுது இறைச்சியும் எலும்பும் கிடக்கக்கண்டு நடுநடுங்கி, மகாதேவரே, தேவரீரது முன்னிலையில் வேட்டுவப் புலையர்களே இதனைச் செய்தனர்போலும்; உமக்கும் இது திருவுள்ளமோ என்று இரங்கினார். பின்பு அங்கேகிடந்த இறைச்சி, எலும்பு, கல்லை இவைகளையெல்லாம் திருவலகினால் மாற்றி, குற்றம் நீங்கும்படி சுத்தி செய்து, அன்புடன் பூசைசெய்து பணிந்து, அருமையாக நீங்கித் தபோவனத்தை அடைந்தார்.

முன்னர் வேட்டைக்குச்சென்ற திண்ணனார் பன்றி முதலிய மிருகங்களின் இறைச்சியைப் பக்குவப்படுத்தித் தேக்கிலையில் வைத்துத் தேனைக்கலந்து, நீரும் பூவுங்கொண்டு மலையிலேறி முன்போலப் பூசைசெய்து இறைச்சிக் கல்லையைத் திருமுன்வைத்து, "இவை பன்றி மான் முதலிய மிருகங்களின் இறைச்சி, அடியேனும் சுவை

கண்டேன்; தேனுங் கலந்திருக்கின்றது" என்று சொல்லித் திருவமுது செய்வித்து, அவருக்குப் பக்கத்தில் நின்றார்.

அப்பொழுது தனது மகனுடைய செய்கையை நாணனுலுங் காடனுலும் அறிந்த நாகன், தன் புத்திரரை அடைந்து தன்பக்கலாக வசப்படுத்தியும் வசமாகாமையினுல் கைவிட்டுச் சென்றான்.

சிவத்தொண்டில் வழுவாது நிற்குந் திண்ணனுர் சுவாமிக்குப் பகலில் இறைச்சியூட்டியும் இரவில் நித்திரையின்றியும் இந்தப்பிரகாரம் தொண்டுசெய்துவந்தார். சிவகோசரியாரும் தினமும்வந்து இறைச்சியிருப்பதைக்கண்டு சுத்திசெய்து, அருச்சித்து, "என்னுடைய நாயகனே, இக்குற்றத்தைச் செய்தாரைக் காணேன் உம்முடைய திருவருளால் நீக்கியருளவேண்டும்" என்று வேண்டினர்.

ஐந்தாநாள் இரவு காளத்திநாதர் சிவகோசரியாருக்குக் கனவிலே தோன்றி "அன்பனே, நீ அவனை வேடுவன் என்று நினையாதே, அவனுடைய உருவமும் செய்கையும் அன்பே; அவனுடைய அறிவு நம்மை அறியும் அறிவே; அவனுடைய அன்பினுலாகிய செய்கைகளை உனக்கு நாளைக்குக் காட்டுவோம், நீ ஒளித்திருந்து பார்; உன் மனக்கவலையை நீக்குதி" என்று கூறி மறைந்தருளினர். சிவகோசரியார் மறுநாள் சுவாமியை அருச்சித்து அவர்க்குப் பின்பாக ஒளித்திருந்தார். திருக்காளத்திநாதர் திண்ணனுருடைய அன்பு முழுதையும் கோசரியாருக்குக் காட்ட விரும்பித் தமது வலத் திருக்கண்ணினின்றும் உதிரம் பாயச்செய்தார். வேட்டையாடி இறைச்சியும் மலரும் நீரும் கொண்டுவரும் திண்ணனுர் உதிரஞ்சொரிதலைக்கண்டு, திருமஞ்சனம் சிந்த, இறைச்சி சிதற, புஷ்பங்கள் முடியினின்

றுஞ் சோர, நிலத்தில் பதைத்துவிழ்ந்தார். இறந்தவர் போன்று கிடந்தார். சுவாமிக்குத் தீங்குசெய்தவர் யாவரோ என்று எங்கும் பார்த்தார். பின் பெருமானைக் கட்டிக் கொண்டு கண்ணீர்வரக்கதறினர். பின் ஒருவாறு பிரிந்து வேடர்கள் புண்ணைத்தீர்க்கின்ற பச்சிலைகளைப் பிடுங்கிக் கொண்டுவந்து திருநேத்திரத்திலே பிழிந்துவிட்டார். அதினல் இரத்தம் தடையாகாமை கண்டு, சிறிது ஆலோசித்தார். ஆலோசிக்க "ஊனுக்கு ஊனிடல்வேண்டும்" என்னும் பழமொழி அவர்கருத்திலே வந்தது. உடனே அவர் மனமகிழ்ச்சியோடும், திருமுன்னே இருந்து, அம்பினல் தம்முடைய கண்ணைத்தோண்டி முதல்வருடைய கண்ணில் அப்பினர். அப்ப, இரத்தம் நிற்பதைக்கண்டார். உடனே சந்தோஷம் பொருந்திக் குதித்துப்பாய்ந்து கூத்தாடி நின்றார், சிவகோசரியாருக்குத் திண்ணனருடைய அன்பைப் பின்பும் காட்டத் திருவுள்ளங்கொண்டு, இடக் கண்ணிலும் குருதிபாயச் செய்தார். அதைக்கண்ட திண்ணனர் ஏங்கிப் பின் ஒருவாறு தெளிந்து, இதற்கு அஞ்சேன் மருந்து கைகண்டேன். இன்னும் ஒரு கண்ணுண்டு; அதை இடந்து அப்பி இதனைத்தீர்ப்பேன் என்று நினைத்து தம்முடைய கண்ணைத் தோண்டியபொழுது, சுவாமியுடைய கண் இவ்விடத்து இருக்கிறது என்று அறியும்பொருட்டு, இடக்காலை அவர்கண்ணில் அருகே ஊன்றி, மனவிருப்போடும் தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பைஊன்றினர். திண்ணனர் கண்ணிலூன்றத் தேவதேவர் சகியாதவராகி, "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப என்னன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று அருளிச்செய்து கண்ணைத் தோண்டும் கையை இலிங்கத்தின்றுமூன்றிய திருக்கரத்தினலே பிடித்தருளினர். சிவகோசரியார் இந்த

அற்புதங்களைக் கண்டு சிவனை வணங்கினார். அந்தக்காலம் முதலாக இறைவர் கூறியபடியே அவருக்குக் கண்ணப்பர் என்னுந் திருநாமம் வழங்குகின்றது. சிவபெருமான் பேரன்புள்ள திண்ணனாருடைய கரத்தைத் தமது திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு "நீ நமக்கு வலப்புறத்தில் நில்" என்றருளிச்செய்தார்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருநேரிசை

காப்பதோர் வில்லு மம்புங் கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டித்
தீப்பெருங் கண்கள்செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார் குறுக்கைவீ ரட்டனாரே.

### திருநேரிசை.

குவப்பெருந் தடக்கைவேடன் கொடுஞ்சிலை யிறைச்சிப்பாரந்
துவர்ப்பெருஞ் செருப்பாநீக்கித் தூயவாய்க் கலசமாட்ட
உவப்பெருங் குருதிசோர வொருக்கணை யிடந்தங்கப்பத்
தவப்பெருந் தேவுசெய்தார் சாய்க்காடு மேவினாரே.

### திருவாசகம்.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ.

### சோமேசர் முதுமொழி வெண்பா.

ஊனுக்கூ னென்னு முரைகண் டுவந்தனரே
தூநற்சீர்க் கண்ணப்பர் சோமேசா—வானதனாற்
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

---

## ௧௫. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஞானப்பாலுண்டது.

சோழநாட்டிலே, சீகாழி என்னும் திருத்தலத்திலே பிராமண குலத்திலே, கவுணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயர் என்பவர் வைதிக சைவப்பற்று மிக உடையராயிருந்தார். அவர் சமணம் புத்தம் முதலிய புறப்புறச் சமயப் பொய் மிகுத்து, அரியவேத ஒழுக்கம் அருகிவருதலை நோக்கி, உளம் வருந்தி, பரசமயங்களை நிராகரித்துச் சைவசமயத்தை ஸ்தாபனஞ் செய்தற்குரிய ஒரு புத்திரனைப்பெறத் தவஞ்செய்வாராயினார். அத்தவங் காரணமாகத் தோணியப்பரது திருவருளினாலே, சிவபாதவிருதயரது மனைவியாராகிய பகவதி அம்மையாரது திருவயிற்றில், திருநீற்றினொளிவிளங்கும்படி ஒரு புத்திரர் திருவவதாரஞ்செய்தருளினார். திருவவதாரஞ்செய்த புத்திரர் தமது மூன்றும் ஆண்டிலே, ஒரு நாள் திருக்கோயிலிலுள்ள திருக்குளத்திலே நீராடச்சென்ற தந்தையோடு அழுதுகொண்டு பின்சென்றார். தந்தையார் அவரை அக்குளக்கரையிலே இருத்தி, நீரில்மூழ்கி சிவனைத் தியானித்திருந்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணிக் கோபுரத்தைப்பார்த்து, "அம்மே, அப்பா" என்று அழைத்து கண்களினின்று நீர்ததும்ப, கைகளைப்பிசைந்து அதரம் துடிப்ப அழுவாராயினார்.

அப்பொழுது திருத்தோணி அப்பர் அவருக்குத் திருவருள் புரியும்படி அம்மையாரோடு இடப வாகனத்தில் எழுந்தருளிப் பொய்கையின் மருங்கை அணைந்தார். அழுகின்ற பிள்ளையாரைச் சிவபெருமான் கிருபைசெய்து, உமாதேவியாரைப் பார்த்து, "உன்னுடைய தனங்கள்

பொழிகின்ற பாலாகிய அமுதத்தை பொன்வள்ளத்திற் கறந்து ஊட்டுதி" என்றார். அம்மையார் தமது ஞானத் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து, கண்ணீர் துடைத்துப் பிள்ளையாருடைய கையிலேகொடுத்து ஊட்ட, தோணியப்பர் அவருடைய அழுகை தீர்த்து ஆண்டருளினார். பிள்ளையார் எல்லா உலகங்கட்கும் இருமுது குரவராகிய இறைவன் இறைவி இருவராலும் ஆட்கொள்ளப் பெற்றமையால் ஆளுடைய பிள்ளையார் எனவும், சிவஞான சம்பந்தம் பெற்றமையால் திருஞானசம்பந்தப்பெருமான் எனவுந் திருநாமம் உடையவராயினார்.

சிறிது நேரத்திலே சிவபாதவிருதயர் தாம் செய்யும் நியமங்களைமுடித்துக் கரையேறித் திருஞானசம்பந்தப்பிள்ளையாரைப் பார்த்து, "நீ யார் தந்த பாலடிசிலையுண்டாய்?" என்று கோபித்து, "எச்சில் கலக்க உனக்கு இப்பாலூட்டினவரைக் காட்டுவை" என்று தமது கையில் ஒரு கோலை எடுத்து ஓச்சினார். சம்பந்தப் பிள்ளையார் ஆனந்தபாஷ்பம் பொழிந்து, தமது திருமுடியின்மேல் எடுத்தருளிய ஒரு திருக்கை விரலினாலே சுட்டி, ஆகாயத்தில் உமாதேவிசமேதராய் இடபவாகனத்தில் எழுந்தருளிய சிவபிரானைக் காட்டி,

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

(பண்—நட்டபாடை.)

என்னும் முதற்றிருப்பாடலையுடைய பதிகத்தைப் பாடியருளி எதிரே தொழுது நின்றார். தேவர்கள் சிவபெருமானுடைய திருவருளை வியந்து மலர்மழை பொழிந்தார்கள்.

சிவகணநாதர்கள் "அர அர" என்று துதித்தார்கள். சிவபெருமான் உமாதேவியாரோடும் திருத்தோணி என்னும் ஆலயத்துக்கு எழுந்தருளினார்.

**சோமேசர் முதுமொழி வெண்பா.**

பாடினர்மூ வாண்டினிற்சம் பந்தரென யாவோருஞ்
சூடுமகிழ்ச்சி மெய்யே சோமேசா—நாடியபிடில்
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

---

## கக. பாண்டியன் சுரந்தீர்த்தது.

கூன்பாண்டியராசன் முன்செய்த தீவினையினாலே, சமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யென்று துணிந்து சத்தியமார்க்கமாகிய சைவத்தைவிட்டு, அசத்தியமார்க்கமாகிய ஆருகதமதத்திற் பிரவேசித்தான். அரசன் ஆருகதனானபடியால் அந்நாடு முழுவதும் ஆருகதமாகிய இருண் மூடிற்று. பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறைநாயனாருமாகிய இருவர் மாத்திரம் சைவராயிருந்தார்கள். இருக்குங் காலத்திலே சைவசமயாசாரியாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய மகிமைகளையும், அவர் வேதாரணியத்துக்கு எழுந்தருளி வருதலையும் கேள்விப்பட்டு, அளவிறந்த மகிழ்ச்சியோடு சில பரிசனங்களை நாயனாரிடத்துச் செல்லும்படி அனுப்பினார்கள். அனுப்பப்பட்ட பரிசனங்கள் திருமறைக்காட்டில் சுவாமிகள் இருக்குந் திருமடத்தை யணைந்து அவரை வணங்கினார்கள். பிள்ளையார் அவர்களை நோக்கி, "மங்கையர்க்கரசியுங் குலச்சிறையாரும் க்ஷேமமாய் இருக்கின்றனரா?" என்று வினவியருளினார். அவர்கள் "ஆம்" என்று சொல்லிப்

பின் "குருமூர்த்தியே! பாண்டியராசனும் நாட்டாரும் சமணப்பாவிகளது போதனையினால் ஆருகதமதப் பிரவேசஞ் செய்தார்கள்; மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் அதைத் தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்யும் படி அடியேங்களை அனுப்பினார்கள்" என்று பிரார்த்தித் தார்கள்.

சம்பந்தமூர்த்தி நாயனார் அது கேட்டு மதுரைக்குப் போக உடனே புறப்பட்டார். திருநாவுக்கரசுநாயனார் அதனை யறிந்து சம்பந்தப்பெருமானை நோக்கி, "நீரோ சிறுபிள்ளை; சமணரோபாதகத்துக்கு அஞ்சாதவர்கள்; ஆதலால் அங்கே போதல் கூடாது; உமக்குக் கிரகங்களும் இப்போவலியில" என்று கூறித் தடுத்தார். "சமணர் செய்த கொடுந்துன்பங் களுக் கெல்லாந் தப்பிய அப்பரே, சிவனருள் இல்லாதவர் போல் நீர் இவ்வாறு சொல்வதென்? கிரகம் நட்சத்திரம் முதலிய வெல்லாம் சிவாஞ்ஞைப்படி நடப்பனவே; பரம சிவன் நம்முடைய சிந்தையே கோயில்கொண்டு இருத்தலி னால் நமக்குத் தீங்குவராது" என்று சொல்லிக் **கோளறுபதி கம்** ஓதி அப்பமூர்த்தியை உடன்படுத்திக் கொண்டு புறப் பட்டார்.

**பண்—பியந்தைக்காந்தாரம்.**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே.

பிள்ளையார் வேதாரணியேசுரரை வணங்கி, விடைபெற்று, அவரது திருமேனியைச் சிந்தித்து, பரசமயகோளரிவந்தார்; சமணசமயமாகிய இருள்கெட உதித்த ஞானசூரியர் வந்தார் என்று சின்னங்கள் ஒலிக்க மதுரையை அடைந்தார். குலச்சிறைநாயனார் மதுரைக்குப் புறத்திலே போய் எதிர்கொள்ள, பாண்டிமாதேவியார் சொக்கநாதரை நமஸ்கரித்து ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானது நல்வரவை யேற்று நின்றார். எதிர்கொண்டு நின்ற மந்திரியார் அடியார் கூட்டத்தைத் நெடுந்தூரத்திலே கண்டு ஆனந்தபரவசராய் நிலத்திலே விழுந்துகிடந்தார். அதனை அறிந்த பிள்ளையார் சிவிகையினின்று மிறங்கித் தமது அருமைத் திருக்கரங்களால் குலச்சிறையாரைப் பற்றி எடுத்தருள் செய்தார். குலச்சிறையார் வணங்கி நின்று "அடியேங்கள் செய்த தவப்பயனே! அரசனும் இந்நாடும் விபூதிப் பிரகாசத்தினாலே விளங்கும் மேன்மையைப் பெற்றோம்; பாண்டிமாதேவியார் தேவரீரை எதிர்கொள்ளுமாறு அடியேனை ஏவினார்" என்று விண்ணப்பஞ் செய்தார்.

சம்பந்தசுவாமிகள் திருஆலவாயை அணைந்து கோயிலை வணங்கிப் பதிகம்பாடித் திருமுன்றிலை அடைந்தார். அப்பொழுது பாண்டிமாதேவியார் கண்களினின்றும் நீர் சொரிய "அடியேனும் அடியேனது நாயகரும் செய்ததவம் என்" என்று சொல்லி பிள்ளையாரை வணங்கினார். பிள்ளையார் திருவருள்செய்து, குலச்சிறைநாயனார் திருமடங்காட்ட அதில் எழுந்தருளியிருந்தனர்.

பிள்ளையார் எழுந்தருளிவரக்கண்ட சமணர்கள் பாண்டியராசனை அடைந்து, "சீர்காழியிலிருக்கும் ஒரு பிராமணச் சிறுவன் சிவனிடத்தில் ஞானம் பெற்றவனும். எங்களை வெல்ல அவன் வந்திருக்கின்றான்" என்றார்கள். பாண்டியன்

"இதற்கு நாம் யாது செய்வோம்" என்று சொல்ல, சமணர்கள் "அப்பிராமணப்பிள்ளை இருக்கிற மடத்தில் மந்திரத்தினால் தீமூளச்செய்வோமாயின், அவன் இங்கு இராமற் போய்விடுவான்" என்றார்கள். பாண்டியன் அது கேட்டு "அங்ஙனமே செய்யுங்கள்" என்று சொல்லி அவர்களைப் போக்கினான். சமணர்கள் சுவாமிகள் எழுந்தருளியிருக்குந் திருமடத்தில் அக்கினி பற்றும்படி மந்திரஞ் செபித்தார்கள். திருவைந்தெழுத்தை உச்சரிக்கும் மகான்கள் பார்க்குந் திக்கிலும் வேறு மந்திரங்கள் பலிக்குமா? திருமடத்தில் தங்கள் மந்திரம் பலியாமையைக்கண்ட சமணர்கள் நெருப்பைக்கொண்டுபோய் மடத்தில் கொளுத்தினார்கள். அது வெளிப்படுதலும் பரிசனர்கள் அக்கினியை அவித்துநீக்கி, பிள்ளையாருக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். நாயனார் இத்தீமை பாண்டியனால் வந்தது என்று திருவுள்ளங் கொண்டு,

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே.

என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருப்பதிகம் பாடியருளியவுடனே அக்கினிவெப்பம் போய்ப் பாண்டியனை அடைந்தது. அரசனுக்கு வெப்பு நோயடுத்ததைப் பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் கண்டு வைத்தியரை அழைத்து மருந்துகள் செய்வித்தும் நோய் தீர்ந்திலது. சமணர்களும் தங்கள் மந்திர ஔடதங்களினாலே நோய்மாறாமை கண்டு வருந்தினார்கள். பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் "திருஞானசம்பந்த சுவாமிகளுக்குச்சமணர்செய்த தீமையினாலேயே இந்தவெப்புநோயுமக்கு

அடுத்தது. அந்தத் திருஞானசம்பந்தமூர்த்திகள் திருவருட் பார்வை செய்யின் உமக்கு வெப்புநோயேயன்றிப் பிறவி நோயும் தீரும்" என்றார்கள். பாண்டியன் இவ்விருவரையும் நோக்கி, "அந்தத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை இங்கே அழையுங்கள்; என்னுடைய நோயை நீக்கி வென்றவர் பக்கம் சேர்வேன்" என்றான்.

பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் நாயனாருடைய மடத்தை அடைந்து மிக்க சோகத்தோடு திருப்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அதுகண்டு நாயனார் அவர்களைத் திருக்கரத்தால் எடுத்து, "அன்பர்களே! உங்களிடத்து யாதாயினுந் தீங்குண்டா?" என்றுவினாவினார். அவர்கள் "அரசனுக்கு வெப்புநோய்வந்தது. அதனை நீக்கவேண்டும்" என்று வணங்கினார்கள். நாயனார் "அஞ்சவேண்டாம்" என்று கிருபைசெய்து, சொக்கநாதசுவாமியை வணங்கி அருள் பெற்று, பாண்டியனது கோயிலுக்கு எழுந்தருளினார். பாண்டியன் பிள்ளையாரைக் கண்டவுடன் கைகூப்பி, ஒரு இரத்தினாசனத்தைக் காட்ட அதில் வீற்றிருந்தனர். அது கண்ட சமணர்கள் தங்கள் சமயநூலை எடுத்துச்சொல்லிக் குரைத்தார்கள்: அரசன் "உங்கள் தெய்வத்தன்மையை நீங்களும் இச்சிவனடியாரும் எனதுசுரத்தைத் தீர்த்தலிலே காட்டுங்கள்" என்றான். அப்பொழுது சமணர்கள் அரசனது அனுமதிப்படி அவனது இடப்புறத்தைப் பீலியினாலே தடவினார்கள். வெப்புநோய் வளர்ந்தது. அரசன் பிள்ளையாரை நோக்கினான். அவர் அந்நோக்கங் கண்டு, "மந்திரமாவது நீறு" என்னுந் திருப்பதிகம்பாடி அவனுடைய வலப்பாகத்தை விபூதியினாலே தடவினார். அவ்வலப்பாகம் வெப்பு நீங்கிற்று. இடப்பாகத்து வெப்புநோய் முன்னையினும் இருமடங்காகப் பெருகியது. சமணர்கள் செருக்கழிந்து வெட்பைத்

தீர்க்கமாட்டாது தூரத்தில் நின்றார்கள். பாண்டியன் சமணரை நோக்கி: "நீங்கள் தோற்றீர்கள்; என்னைவிட்டுப் போங்கள்" என்றுசொல்லி நாயனாரைநோக்கி "சுவாமீ! எனது இடப்பாகத்து வெப்பையும் நீக்கியருளுக" என்று வேண்டினான். அவர் முன்போல விபூதியிட்டு இடப்பாகத்தையுந் தடவினார். பாண்டியன் சுரம்முழுதும் நீங்கி, சயனத்தைவிட்டெழுந்து, திருஞானசம்பந்தப் பெருமானது திருவடிகளை வணங்கி "அடியேன் உய்ந்தேன், உய்ந்தேன்" என்றான். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் மிக்க களிப்புற்றார்கள்.

**திருநீற்றுப்பதிகம்.** **பண்—காந்தாரம்**

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான்றிருநீறே.

**சோமேசர் முதுமொழிவெண்பா**

பிள்ளையார் வைப்பினிற்றீப் பெய்வித்த மீனவன்றீத்
துள்ளுநோயுழந்தான் சோமேசா—வெள்ளிப்
பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

---

## ௬௭. அப்பூதியடிகள் நாயனார்.

சிவபத்தியுள்ளவரும், பொய் முதலிய குற்றங்கள் அற்றவரும் ஆகிய அப்பூதியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சைவசமய ஸ்தாபனாசாரியாராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய வடிவைத் தாம் காணாதவராயிருந்தும், அவரது சிவபக்தியைக் கேள்வியுற்று, அவரிடத்தே மிக்க அன்புள்

ளவராகி, தம்முடைய மக்களுக்கும் பொருள்களுக்கும் திரு நாவுக்கரசு என்னும் பெயரையே வைக்கும் நியதியுடையவ ராயிருந்தார். இன்னும் அவர் திருநாவுக்கரசு சுவாமிகள் பெயரால் மடங் கட்டுதல் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முத லிய அறங்களைச் செய்துவந்தார்.

வருங்காலத்திலே திருநாவுக்கரசுநாயனூர் திருப்பழ னம் என்னும் பதியைப் பணிந்து திங்களூரின் வழியாக வரும்பொழுது, வழியிலுள்ள குளிர்ந்த தண்ணீர்ப்பந்தலை அடைந்து அதனைப் பார்த்துச் சிந்தை வியப்புறுகையில் திருநாவுக்கரசு என்னும் பெயர் எவ்விடத்திலும் வரைந்தி ருப்பதைக் கண்டார். வாகீசர் அதனைக்கண்டு "இப்பெயரை யிட்டு இப்பந்தர் அமைத்தவர் யாவர்?" என்று வினவினூர். அதனை அறிந்தவர்கள் "திருநாவுக்கரசு என்னும் பெயரால் அப்பூதி அடிகள் என்னும் பிராமணர் எங்குமுள்ள சாலை களையுங் குளங்களையுஞ் செய்தமைத்தார்" என்றூர்கள். திரு நாவுக்கரசர் அதுகேட்டு "அவர் எவ்விடத்தார்?" என்று வினவினூர். "அவர் இவ்வூரிலுள்ளவர்; அவர் மனையுஞ் சமீ பத்துள்ளது" என்றூர்கள். திருநாவுக்கரசுசுவாமிகள் அவ ரது வீட்டை அடைந்தார். அப்பூதியடிகள் கடிதுவந்து வணங்கினூர். அவர் வணங்குமுன் வாகீசரும் வணங்கினூர். அப்பொழுது அப்பூதியடிகள் "தேவரீர் அடியேனது மனை யில்வர முடிவில் தவஞ்செய்தேன் போலும்" என்றூர். திருநாவுக்கரசுநாயனூர் "நாம் திருப்பழனத்தில் சிவபிரானை வணங்கிவருகின்றேம்; வழியில் நீர்வைத்த தண்ணீர்ப்பந்த ருங் கண்டு, நீர் செய்கின்ற பிற அறங்களையுங் கேட்டு வந் தோம்; சிவனடியார்க்கு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உமது பெயரை எழுதாது, வேறொருபேர் எழுதவேண்டிய காரணம் என்னை? கூறும்" என்று வினவினூர். அப்பூதியடி

கள் "சமணப்பதகரும் மன்னனும் செய்த சூட்சிகளையெல்லாம் திருத்தொண்டினுறைப்பாலே வென்ற திருநாவுக்கரசரது திருப்பெயரோ வேறொருபேர்" என வெகுண்டு கூறி "வாகீசரை அறியாதார் உளரோ; சிவவேடத்தோடு இங்ஙனம் கூறினீர்; நீர் யாவர் இயம்பும்" என்றார். திருநாவுக்கரசர் அவரது பத்தியின் றன்மையை நோக்கி, "யான் சூலைநோய் நீங்கித் தடுத்தாளப்பெற்ற சிறியேன்" என்றார். அப்பூதியார் வாகீசர் கூறியது கேட்டு, கைகூப்பி ஆனந்த பாஷ்பம் பொழிய உரைதடுமாறித் தரையில் விழுந்து வணங்கினார். பின்னர்த் தமது மனைவியாரையும் மக்களையும் சுற்றத்தாரையும் கொண்டு வணங்குவித்து, ஆசனத்திருத்திப் பூசனைகளைச் செய்தார். செய்துமுடிந்தபின் திருவமுது செய்யுமாறு விண்ணப்பஞ்செய்தார். அவரும் அதற்கு உடன்பட்டார். அப்பூதியடிகளும் அறுசுவைபொருந்திய கறிகளையும், அமுதையும் உண்டாக்கி, நாயனார் திருவமுது செய்தருளும் வண்ணம் தமது மூத்த மகனை மூத்த திருநாவுக்கரசை வாழைக்குருத்துக் கொண்டுவரும்படி அனுப்பினார். புத்திரரும் "என்னுடைய தாய் தந்தையர் ஏவ இது செய்யப்பெற்றேன்" என்று விரைந்து தோட்டத்துட்புக்கு வாழைக்குருத்தை அரியும்பொழுதில், பாம்பொன்று கையிற் றீண்டியது. சிறுவன் உடனே பதைபதைப்போடு சர்ப்பங்கடித்த வேகத்தால் விழுமுன்னர், விரைந்து சென்று குருத்தைக் கொடுப்பேன் என்று ஓடிவந்து, குருத்தைத் தாயார் கையிற் கொடுத்து, மயங்கி விழுந்திறந்தான்.

தளர்ந்து விழுந்த மகனைத் தந்தையும் தாயும் நோக்கி விடத்தினால் இறந்தானென்ற துக்கமின்றி, தொண்டரை அமுது செய்வித்தலையே கருத்தாகக்கொண்டு சவத்தை மறைத்து, திருநாவுக்கரசுநாயனாரை அடைந்து வணங்கித்

திருவமுதுசெய்யுமாறு வேண்டினர். திருநாவுக்கரசுநாயனார் எழுந்து செல்ல, அவருடைய பாதங்களை விளக்கி, வேறோர் ஆசனத்திலேற்றினார். திருநாவுக்கரசுநாயனார் அப்பூதி அடிகளுக்கும் மனைவியாருக்கும் விபூதி நல்கி புதல்வர்களுக்குங் கொடுக்கும்பொழுது, அப்பூதியடிகளை நோக்கி, "விபூதி சாத்துவதற்கு உமது மூத்தபுத்திரனையுங் காட்டும்" என்று கூறியருளினார். அப்பூதியடிகள் நிகழ்ந்தமென்றையுங் கூறாராய், "இப்போது அவன் இங்கு உதவான்" என்றார். திருநாவுக்கரசுநாயனார் "அவன் என்ன செய்தான் விரித்துக்கூறும்" என்று கூறினார். அப்பூதிஅடிகள் வாகீசர் திருவமுதுசெய்வது பிழைத்துவிடுமே என்று கூறாதிருந்தாராயினும், பெரியவர் வினவும்பொழுது உண்மையையே கூற வேண்டும் என்னும் சீலத்தால், தமது புத்திரருக்கு உற்றதைக் கூறினார். திருநாவுக்கரசர் அதுகேட்டு "நீர் செய்தது நன்று; வேறுயார் இப்படிச்செய்வார்" என்று முன் எழுந்து சென்று, ஆவிநீங்கிய சவத்தை நோக்கி, சிவபெருமான் திருவருள்செய்யும்வண்ணம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே.

(பண்—இந்தளம்.)

என்னும் முதற்செய்யுளையுடைய தேவாரப்பதிகத்தைப் பாடியருளி விஷத்தை நீக்கினார். தீபோன்ற விடம்நீங்க உய்ந்த பிராமணச் சிறுவனும், உறக்கநீங்கி விரைந்தெழுபவனைப்போன்று, திருநாவுக்கரசுநாயனாருடைய பாதங்களை வணங்க, அவர் விபூதிகொடுத்தருளினார். அப்பூதிஅடிகளும் மனைவியாரும் ஆவிபெற்ற பிள்ளையைக்கண்டு வாகீசரது

திருத்தொண்டைப் புகழ்ந்து, அன்பர் அமுதுசெய்தருளுவ தற்குச் சிறிது இவன் இடையூறு செய்தானென்று சிந்தை கொந்தார்கள். அவர்களுடைய வாட்டத்தை நாயனார் கண்டு, மனையை அடைந்து, அப்பூதிநாயனாரோடும் அவர் புத்திரர் களோடும் ஒருங்கிருந்து திருஅமுது செய்தருளினார். அப் படிச் சிலகாலம் அங்கிருந்து திருப்பழனத்துக்குப் போயி னார். அப்பூதிஅடிகள்நாயனார் வாகீசரது திருவடிகளைச் சிந்தித்துச் சிவபெருமானுடைய பாதநீழலை அடைந்தார்.

சோமேசர் முதுமொழி வெண்பா

அப்பூதி யார்மறைத்தும் வாகீச ரக்காவைத்
துப்பா னறிந்தனரே சோமேசா—இப்புவியில்
ஐயப் படாஅ தகத்ததுணர் வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

---

## கஅ. சுந்தரமூர்த்திநாயனார் முதலைவாய்ப்பட்ட பிள்ளையை மீட்டது.

சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய சுந்தர மூர்த்திநாயனார் திருவாரூரில் இருக்குங் காலத்திலே, தமது தோழராகிய சேரமாண்பெருமாள்நாயனாரைக் காண விரும்பி, மலைநாட்டை அடைவதற்கு விருப்புடன் செல்லு வாராயினார். அப்பொழுது அவ்வூர்ப் பிராமணவீதி ஒன்றில் ஒரு வீட்டில் அழுகை ஒலியும், அதற்கெதிரான மற்றொரு வீட்டில் மங்கல ஒலியும் எழுதலை நாயனார் கண்டு அங்கே உறைகின்ற பிராமணர்களை நோக்கி "அழுகை ஓசையும், மங்கல ஓசையும் ஆகிய இரண்டும் உடனே நிகழ்வது என்னை" என்று வினாவியருளினார். அவர்கள் "ஐந்து வயது வந்த பிராயத்தையுடைய இவ்விரண்டு வீட்டுப்பிள்ளைகள்

இருவரும் ஒருநாள் அருகிலுள்ள ஒரு மடுவில் நீராடினுர்கள். அவருள் ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றவன் தனது வீட்டை அடைந்தான்; அடைந்தவனுக்கு இன்று உபநயநம்தரிக்கின்றுர்கள். ஆதலால் அவ்வீட்டில் மங்கல ஒலியும், அது கண்டு எதிர்வீட்டில் தமது புதல்வனை நினைத்து ஆற்றுராய் பெற்ருேர் செய்யும் அழுகை ஒலியும் ஓரேகாலத்தில் எழுகின்றன" என்றுர்கள் நாயனுர் அது கேட்டு மிக இரங்கினர். அவருடைய வரவை அறிந்த பெற்றுர்கள் மகிழ்ந்து, எதிர்வந்து திருப்பாதங்களில் வணங்கினுர்கள். நாயனுர் வணங்கியவர்களை நோக்கி "புத்திரனை யிழந்தவர்கள் நீவிர் தாமா" என்று கேட்டருளினுர். அதற்கு மறையோனும் மனைவியும், நமது புத்திரனை முதலை விழுங்கியது முன்னுளில் நிகழ்ந்தது. இப்பொழுது அடியேங்கள் தேவரீரிடத்துவைத்த அன்பு பழுதாகாது தேவரீரை எழுந்தருளப் பெற்ருேம்" என்றுர்கள். சுந்தரமூர்த்தி நாயனுர் "இவர்கள் மைந்தனை இழந்த துயரத்தை மறந்து யான் வந்ததற்கே மனம் மகிழ்ந்தார்கள். ஆதலால் இவர்கள் சிறுவனை முதலைவாயினின்றும் அழைத்துக் கொடுத்தே அவிநாசிப்பெருமானை வணங்குவேன்" என்றருளிச் செய்தார். அருளிச்செய்து "இவர்களுடைய புதல்வனை முதலை விழுங்கிய மடு எங்கே" என்று வினவி அப்பொய்கையை அடைந்தருளி, அச்சிறுவனை அந்நாளிற் கவர்ந்த முதலை கொண்டுவருமாறு திருப்பதிகம் எடுத்தருளினுர்.

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

"உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினுய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"

என்னும் நான்காவது திருப்பாட்டை ஓதி முடியமுன், இயமன் அப்புதல்வனுடைய உயிரைக் கொண்டுவந்து அவ்வாவியிலுள்ள முதலை வயிற்றினுள்ளே, சென்ற ஆண்டுகளின் வளர்ச்சி நிரம்பிய தேகத்துடன் புகுத்து விட்டான். முதலை அம்மகனைக் கரையிற் கொணர்ந்து உமிழ்ந்தது. உடனே தாயானவள் தன்மகனை ஓடி எடுத்துக் கொண்டுவந்து நாயனாருடைய சேவடிக்கீழ் பிராமணனோடு விழுந்து வணங்கினாள். அப்பொழுது தேவர்கள் மலர் மழை பொழிந்தார்கள். பூமியிலுள்ளோர் அதிசயித்தார்கள். மறையவர் உத்தரீயங்களை வீசி ஆரவாரஞ் செய்தார்கள். பின்னர் சுந்தரமூர்த்திநாயனார் அவிநாசியில் எழுந்தருளியிருக்கும் சிவனை வணங்கிச் சென்று, அப்பிராமணச் சிறுவனுக்கு உபவீததாரணம் செய்வித்து அவ்வீட்டில் மங்கல ஒலியை எழுவித்து, உடனே மலைநாட்டுக்குச் செல்லுவாராயினார்.

---

## கசு. மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றது.

சிவபெருமானுடைய திருவடிகளை ஒருபோதும் மறவாத ஒரு தபோதனர் சோழநாட்டு வளங்களைக்கண்டு சிதம்பரத்தைத் தரிசித்து, ஈழமண்டலத்து வளங்களைக் காணும்படி அங்கேபோயினார். சென்றதபோதனர் தாம்போயிருக்குமிடங்கடோறும் "பொன்னம்பலம் நீடூழிவாழுக" என்று உரைத்து வருவாராயினார். தபோதனர் அங்ஙனங் கூறுவதை ஈழதேயமன்னன் அறிந்து, அவரை அழைப்பித்தான். தபோதனர் புத்தராசனை அடைந்து, 'பொன்னம்பலம் நீடூழிவாழுக' என்றுகூறிச் சமீபத்தில் இருந்தார். புத்தரா

சன் 'நீர் பொன்னம்பலம் என்றுகூறியதின் கருத்தென்னை?' என்று வினவினன். தபோதனர் "சோழநாட்டிலே சிதம்பரம் என்னும் ஒருதலம் இருக்கின்றது. அச்சிதம்பரமே புவனங்கள் அனைத்தினுக்கும் முதற்கணுண்டான சிவத்தலமாம். அச்சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்திலே சிவகாமியம்மையார் காண, சபாநாயகர் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்திய நிருத்தம் செய்தருளுவார். ஆகையால் பொன்னம்பலம் என்றுச் சரிக்கின் எல்லாப் பாவங்களும் நீங்கிவிடும்" என்றுகூறினர்.

ஈழதேசத்தரசனது அருகிலிருந்த புத்தகுரு அது கேட்டு "யான் இப்பொழுதே சிதம்பரத்தை அடைந்து, அங்குள்ள சைவரோடு தருக்கஞ்செய்து, வெற்றி கொள்வேன்; கனகசபையைப் புத்தருடைய பள்ளி என்றுசொல்லும்படி செய்வேன்" என்றுகூறித் தனது சிஷ்யவருக்கத்தோடு சிதம்பரத்தின் எல்லையை அடைந்து அங்குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்துள்ள ஒரு மண்டபத்திலிருந்தான். அவன் இருக்க முன்னரே தனது ஊமைமகளோடு சென்ற ஈழராசனும் அவனைவணங்கி இருந்தான். சிவபெருமானது கோயிற்றொண்டு செய்பவர்கள்: "புத்தனே, விரைந்து இவ்விடத்தை விட்டுப்போ" என்றார்கள். புத்தகுரு "எமதுகடவுளே முதற்கடவுளென்று தாபித்தல்லது செல்லுவதில்லை" என்றான். இச்செய்தியைச் சைவர்கள் தில்லைவாழந்தணர்களுக்கும் ஏனையோருக்கும் அறிவித்தார்கள். தில்லைவாழந்தணர்கள் அவனது வரவை ஆக்ஷேபித்து, சோழராசனுக்கு ஒரு நிருபம் அனுப்பினார்கள். மற்றையோருக்குச் சிதம்பரதரிசனத்துக்கு வருமாறு நிருபங்கள் அனுப்பினார்கள். பின்னர் தில்லைவாழந்தணர்கள் புத்தனை நோக்கி, "இன்றொருதினமும் இங்கே இரு; நாளை

க்கு நாங்கள் உங்கள் இழிவைக் காட்டுவோம்" என்றுகூறித் தங்கள் மனைகளிற் சென்று துயின்றார்கள்.

சிவபெருமான் அவர்களது கனவிலே தோன்றித் "திருவாதவூரன் சிதம்பரத்தின் எல்லையில் தவஞ்செய்து கொண்டிருக்கின்றான். அவனை அழைத்துக்கொண்டு வாருங்கள்; அவன் தருக்கநூல் முறைப்படி புத்தரை வாதில் வெல்வான்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். எல்லாரும் ஒருங்குகூடித் திருவருட்டிறத்தைத் துதித்து, சமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் பன்னசாலையை அடைந்தார்கள். அடைந்த அந்தணர்கள் சபாநாயகர் சொப்பனத்தில் அருளியவற்றை விண்ணப்பித்தார்கள். திருவாதவூரடிகள் அதனைக்கேட்டு, அவர்களோடு விரைந்துசென்று, நடராசரை வணங்கி, "புத்தர்களிருக்கும் மண்டபத்தை அடைந்து, ஓராசனத்திலிருந்தார். சோழராசன் வேதாகமங்களில் வல்ல அந்தணர்களும், பல கலைகளில் வல்ல வித்துவான்களும், பௌராணிகரும் ஆகிய இவர்களுடன் வந்து, சிதம்பரத்தை வணங்கி, பின்னர் திருவாதவூரடிகளுடைய திருமருங்கிலிருந்தான்.

திருவாதவூரடிகள் புத்தனை நோக்கி, "மயக்கவாதங்களைப் போதிக்கும் புத்தகுருவே! நீவந்த காரணம் யாது கூறுதி" என்றார்.

புத்தன்: "நமது கடவுளல்லாமல் வேறு கடவுளில்லையென்று வாதித்துவென்று கனகசபையிலே புத்தனைத்தாபிக்க வந்தேன்" என்றான்.

திருவாதவூரடிகள்:—"உனது கடவுளின் இலக்கணங்களையும் அவனடியை உயிரடையும் முறையையும் கூறுவாயாக" என்றார். புத்தன் தன்மதக் கொள்கைகளை எடுத்துக்

கூறினான். திருவாதவூரடிகள் அக்கொள்கைகளை யெல்லாம் நிராகரித்தருளினார்.

புத்தன்:- உமது கடவுள் இலக்கணம் யாது? நீர் பெறும் முத்தியாவது என்னை? என்று வினவினான்.

திருவாதவூரடிகள் :- நமது கடவுள் கல்லால விருக்ஷ நீழலிலே தக்ஷிணாமூர்த்தியாய் உபதேசம் புரிந்தருளுவர். கனகசபையிலே அநவரதநடனம் புரிவர். திருமேனியில் அணியும் விபூதியையுடையவர். உமாதேவியைப் பாகத்திலுடையவர். அவர் தம் மகிமை இத்தன்மைத்தென்று நாம் சொல்ல எளிதோ? என்று கூறி அப்பாலுஞ் சொல்லத் தொடங்கினார்.

புத்தன்:- உமது கடவுள் ஆலவிருட்ச நீழலில் இருந்து உபதேசிப்பர் என்றீர். அவர் செபமாலையைக் கையிற்றாங்குவது தமக்குத் தியானிப்பதற்கு வேறு கடவுள் உண்டென்று கருதியா?

திருவாதவூரடிகள்:- நங்கடவுள் செபமாலையைக் கரத்திற் கொண்டு வீற்றிருத்தல் உலகத்திலுள்ளவர் அனைவரும் தவஞ் செய்து உண்மைஞானத்தை அடைவதற்காம் என்று அறிந்துகொள். அச்செபமாலை படைக்கலவித்தைகளை மாணாக்கர்க்கு அன்புடன் பழக்கும் ஆசிரியர்களது கையிலுள்ள வாட்படை போலாகும் என்பதையும் நன்கு அறிந்துகொள்ளக் கடவாய்.

புத்தன்:- உமது கடவுள் நடனஞ் செய்வார் என்று கூறினீரே; தம்மினும் நல்லறிவுள்ளவர் இல்லாத சபையிலே தம்மிச்சைப்படி ஆடுபவருமுண்டா?

திருவாதவூரடிகள்:- நமது சிவன் விறகிற்றீப்போலவும் பாலில் நெய்போலவும் உயிர்கடோறும் வியாபித்து

ஐந்தொழில் செய்து அவைகளது ஆணவம் முதலிய பாசங்களைப் போக்கிப் பின்னர் மோட்சத்தைக் கொடுக்கும் ஒரு ஞானநாடக ஆசிரியன் என்பதை அறிந்துகொள்ளுதி.

புத்தன்:- நுமது கடவுள் விபூதியணிந்த மேனியுடையவர் என்று மேன்மையுடன் கூறி மகிழ்ந்தீர். அவர் தமது செவ்வொளி பொருந்திய திருமேனியிலும் பார்க்க விபூதி அதிசுத்தம் என்று கருதியோ அதனைத் தரித்தார்.

திருவாதவூரடிகள்:- நங்கடவுள் விபூதிதரித்தது ஆன்மாக்களது பிறவியை நீக்கும் பொருட்டென்றறியக் கடவை. அது தமது குழந்தைகளது நோயை நீக்கும் பொருட்டு தாய்மார் மருந்து உண்பதுபோல்வதாம்.

புத்தன்:- நுங்கடவுள் உமாதேவியாரை இடப்பாகத்திலுடையவரென்றீர். உமது கடவுள் இல்லறத்தை அனுட்டிக்க, அவர் வழிப்பட்டநீர் தவத்தை மேற்கொள்ளுவது அவம் அல்லவா?

திருவாதவூரடிகள்:- உலகத்துக்குப் போக மூட்டி வினையைத் தொலைத்தற்கே உமாதேவியாருடன் வீற்றிருந்தருளுகிறார். நமது கடவுள் யோகமுத்தி உதவுதற்கு யோக வடிவங் கொண்டார். அவரது உண்மைநிலையை நீ சிறிதும் அறிந்தாயில்லை.

திருவாதவூரடிகள் புத்தகுரு கேட்ட வினாக்களுக்கெல்லாம் இங்ஙனமாக விடைகூறி சைவமத ஸ்தாபனஞ் செய்தருளினார். பின்னர் ஆசாரிய சுவாமிகள் நாமகளை நோக்கி, "சரஸ்வதியே, நீ இப்புத்தர்களது வாக்கிலிருந்து பொய்வார்த்தைகளைக் கூறுவிப்பதென்னை? நீ இப்பதிதர்களது இருக்கைவிட்டகன்று சிவாஞ்ஞைப்படி போய்விடு என்று கூறினார். அப்பொழுதே புத்தர்களது நாக்கினின்

றும் சரஸ்வதி நீங்கினாள். புத்தர்கள் அனைவரும் ஊமை களாயினர். ஈழமண்டலாதிபதி அருட்குன்றாகிய மாணிக்க வாசக சுவாமிகளை வணங்கி, "பேசவல்ல புத்தர்கள் ஊமர் கள் ஆயினார்கள். ஊமைப் பெண்ணாகிய என் மகளுக்கு வாக்குவன்மை கைகூடுமாயின்நான்உமக்கு அடிமை" என்று விண்ணப்பஞ்செய்தான். திருவாதவூரர் அவளைச் சமீபத்தி லிருத்தி "பெண்ணே, இங்கே இருக்கும் புத்தகுரு வினா விய வினாக்கட்கெல்லாம் நீயே நியாயவார்த்தை சொல்லுதி" என்று கூறியருளினார். அப்பொழுது, புத்தரது வினாக் களுக்கெல்லாம் கற்றுணர்ந்த பண்டிதர்களைப்போல உத் தரங் கூறினாள். நாயனார் அவ்வினா உத்தரங்களின் உண் மைப் பொருளைத் திருச்சாழல் என்னுந் திருவாசகமாகப் பாடியருளினார். ஈழமன்னன் விபூதிதரித்து, பஞ்சாக்கரம் ஓதி அடியவன் ஆயினான். பின்னர் அரசன் இப்புத்தர் கள் ஊமைத்தன்மை நீங்கவேண்டும் என்று பிரார்த்தித் தான். திருவாதவூரடிகள் மகிழ்ந்து அவர்கள்மீது கிருபா நோக்கஞ் செய்தருளினார். அவர்கள் ஊமைத்தன்மை நீங்கித் திருவாதவூரடிகளது திருமுன்னிலையை அடைந்து வணங்கி "குருமூர்த்தியே! அடியேங்களுக்கு விபூதி ருத்திராட்சங் களையும் காவிவஸ்திரத்தையுந் தந்தருளுக" என்று வணங் கினார். திருவாதவூரடிகள் விபூதியை அவர்கட்கு அணிந்து, உருத்திராக்கமாலைகளைப் பூட்டிக் காவிவஸ்திரம் கொடுத் தருளினார். பின்னர்த் திருவாதவூரடிகள் சிதம்பரத்தை வணங்கிச் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தார். புத்த சமய வேடத்தை நீக்கி விபூதிதரித்த சைவர்களும் அரச னும் சிதம்பரத்தையே தமது சனன ஊராகக்கொண்டு இருந்தார்கள்.

**திருச்சாழல்**

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

**சோமேசர் முதுமொழி வெண்பா.**

வாழ்வாத லூரர் வளவனவை முன்னெதிர்த்துச்
சூழ்தே ரரைவென்றார் சோமேசா—தாழ்வகல்
ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

---

## ௨௦. மெய்கண்ட தேவர்

புண்ணிய பூமியாகிய தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிய நடுநாட்டிலே, திருப்பெண்ணாகடத்திலே, பரம்பரைச் சைவ வேளாளர் குல திலகரும், சிவபத்தி, அடியார் பத்திகளிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்தவரும் ஆகிய அச்சுதர் களப்பாளர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் நெடுங்காலம் பிள்ளைப் பேறின்மையால், அதற்குரிய விரதாதிகளை எல்லாம் ஆதிசைவரும் சகலாகம பண்டிதர் என்னும் காரணப் பெயருடையவரும் தம்முடைய குலகுருவுமாகிய அருணந்திசிவாசாரியார் உணர்த்த உணர்ந்து, அனுட்டித்துவந்தனர். வந்தும் சித்திபெறாது, பின்னும் அருணந்திசிவாசாரியரிடத்து விண்ணப்பஞ் செய்தனர். சகலாகம பண்டிதர் உற்றுநோக்கி, தமிழ் வேதமாகிய தேவாரத்திருமுறையை ஆசனத்தில் எழுந்தருளச்செய்து அர்ச்சனை தூபதீப ஆராதனைகள் சமர்ப்பித்து, அத்திருமுறையிற் கயிறு சாத்தும்படி கட்டளையிட்டனர். உத்

தரவின்படி அச்சுதர்களப்பாளர் நமஸ்கரித்துக் காபிறு சாத்தினர். திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவெண்காட்டுப் பதிகத்துள்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னும் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாசுரத்தின் பொருளைச் சகலாகம பண்டிதர் உற்றுநோக்கி, "அன்பனே! உன் எண்ணம் நிறைவேறும். நீ திருவெண்காடு சென்று அங்கேயுள்ள முக்குள தீர்த்தத்திலே நீராடி சுவேதாரணியப் பெருமானையும் அம்மையாரையும் பேரன்போடு வழிபட்டு வருவாயாக" என்றருளிச்செய்து அவருக்கு விடைகொடுத்தனர்.

அச்சுதர்களப்பாளரும் தமதாசிரியர் கட்டளையைச் சிரமேற்றாங்கி, தமது மனைவியாரோடும் திருவெண்காடு சென்று, முக்குள தீர்த்தத்திலே மூழ்கி, எம்பெருமானையும் பெருமாட்டியையும் விதிப்படி வழிபட்டு வருவாராயினர். அந்நாளிலே ஒருநாள் சுவேதவனப் பெருமான் கனவிலே தோன்றி, "அன்பனே! உனக்கு இப்பிறவியிலே பிள்ளைப்பேறு அரிதாயினும், நமக்கு மிக்க பிரீதியுடையதாயுள்ள தேவாரத்திருமுறையைச் சிறந்த பிரமாணமாகக் கொண்டு நீ ஒழுகுகின்றமையால், அத்தேவாரத்தைப் பாடி சைவசமயமே மெய்ச்சமயமெனப் பல அற்புதங்களால் நிலைநிறுத்திய திருஞானசம்பந்தன் போல்பவனுய், ஒரு சற்புத்திரன் இத்தமிழ் நாட்டார் உய்யும்படி தோன்றுவான்" என்றருளிச்செய்து மறைந்தனர்.

அச்சுதர்களப்பாளர் சிவபெருமான் தமக்கு அருள் செய்ததற்கு மகிழ்ந்து, அப்பெருமானை வழக்கம்போல் வழிபாடுசெய்துவந்தார். சிலகாலஞ் சென்றபொழுது அவரது மனைவியார் கருப்பவதியாயினர். பத்து மாதங்களும் நிரம்பவே சைவசமையந் தழைத்தோங்க ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினர். அக்குழந்தைக்கு சுவேதவனப்பெருமாள் என நாமகரணஞ் செய்து, அச்சுதர்களப்பாளர் அருமையாய் வளர்த்துவந்தனர்.

சுவேதவனப்பெருமாள் பிறைமதிபோல்வளருநாளிலே அவரது நன்மாமனர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வந்து குழந்தையைக் கண்டு மகிழ்ந்து, அவரைத் தமது இல்லத்தில் எடுத்துக்கொண்டுபோய்ப் பேரன்போடு வளர்ப்பாராயினர். சுவேதவனப் பெருமாள் இரண்டுபிராயத்திற்றனே மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் எழுந்தருளி இருந்தார்.

அந்நாளிலே திருக்கைலாசமலையிலே கல்லாலமாநீழலிலே, தக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த, சிவபெருமானிடத்து சிவஞான போதத்தை உபதேசம்பெற்ற திருநந்திதேவர் மரபிலேவந்த பரஞ்சோதிமுனிவர், திருவெண்ணெய்நல்லூர் வந்து, சுவேதவனப் பெருமாளைக் கண்டு தீக்ஷைபுரிந்து, தாம் தமது குருவாகிய சத்தியஞானதரிசினிகள்பாற் கேட்டவாறே சிவஞானபோதத்தை விளங்க உபதேசித்து, அதனைத் தமிழ்நாட்டார் உய்யும்படி மொழிபெயர்த்துப் பொழிப்புரைக்குமாறு அருளிச்செய்து, மெய்கண்டதேவர் எனத் தீட்சாநாமஞ் சாத்திச் சென்றனர்.

மெய்கண்டதேவர் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சுயம்புமூர்த்தியாகிய பொல்லாப் பிள்ளையாருடைய சந்நிதியில் சிவஞானபோதத்தைச் சிந்தித்துத்

தெளிந்து நிட்டைகூடி தமிழ்நாடு உய்யும்வண்ணம் தாம் பெற்ற வடமொழிச் சிவஞான போதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தனர். மெய்கண்டதேவர் ஆதிசைவராகிய திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியர் முதலிய பக்குவர்களுக்கு உபதேசித்தருளி, நெடுங்காலம் சிவயோகத்திலமர்ந்து, திருவெண்ணெய் நல்லூரிலே, ஐப்பசிமாதத்துச் சுவாதி நட்சத்திரத்திலே சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

இவர் காலம் ஏறக்குறைய ௯௱ வருடங்களுக்கு முன் என்பர்.

## சைவ சித்தாந்த சந்தானசாரியர்கள்

| | |
|---|---|
| தக்ஷிணாமூர்த்தி | |
| திருநந்திதேவர் | |
| சனற்குமாரமுனிவர் | அகச்சந்தானசாரியர் |
| சத்தியஞான தரிசினிகள் | |
| பரஞ்சோதிமுனிவர் | |
| மெய்கண்டதேவர் | |
| அருணந்திசிவாசாரியர் | |
| மறைஞானசம்பந்தசிவாசாரியார் | புறச்சந்தானசாரியர் |
| உமாபதிசிவாசாரியர் | |

## தாயுமான சுவாமிகள்

பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண் மேவுநா ளென்னாளோ.

## உக. உமாபதிசிவாசாரியர்

**சை**வசித்தாந்த ஸ்தாபனுசாரியராகிய மெய்கண்ட தேவர், தமக்குப் பரஞ்சோதி முனிவர் உபதேசித்தருளிய சிவஞானபோதப் பொருளைத் திருத்துறையூர் சகலாகம பண்டிதர் எனப்படும் அருணந்திசிவாசாரியருக்கு உபதேசித்தருளினுர். அருணந்திசிவாசாரியர் திருப்பெண்ணுகடத்தை ஜன்மஸ்தானமாகவுடைய மறைஞானசம்பந்த சிவாசாரியருக்குச் சிவதீக்ஷைசெய்து சிவஞானபோதத்தை அருளிச்செய்தார். மறைஞானசம்பந்தர் தமது ஆசாரியரை நமஸ்கரித்து அவ்விடம் விட்டுப் போய்ப் பூலோக கைலாசமாகியசிதம்பரத்தைஅடைந்து ஆலயப்பிரதக்ஷிணஞ் செய்து அங்கு வீற்றிருந்தருளினுர்.

சிதம்பரத்து நடராஜப் பெருமானுக்குப் பூசைபுரியும் உரிமைபூண்ட தில்லைவாழந்தணர்களுள் உமாபதிசிவாசாரியர் என்னும் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் விருதுகளோடு பல்லக்கிலிவர்ந்து பூசைசெய்து மீளும்போது திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருந்த மறைஞானசம்பந்தர், "பட்டகட்டையிற் பகற் குருடு போகின்றது" என்ருர். அதைக்கேட்ட உமாபதி சிவாசாரியர் மகிழ்ந்து, பல்லக்கை விட்டிறங்கி, அவரை வணங்கி "உண்மை ஞானம் உபதேசித்தருளுக" என்று வணங்கினுர். மறைஞான சம்பந்தர் நெய்தற்ருெழில் செய்வார் வீதியிலேபோய் நூலுக்கு இடும் கூழைவாங்கிப் பருகினுர். உமாபதிதேவர் அவர் திருக்கரத்தினின்றும் ஒழுகும் சேஷத்தை வாங்கி உண்டார். அவரது அதி தீவிர பக்குவத்தை அறிந்துஅவருக்குச்சிவஞானபோதத்தைஉரைத்தருளினுர்.

இதனை அறிந்த தில்லைவாழந்தணர்கள் உமாபதி சிவனுரைப் பந்தியினின்றும் நீக்கிவிட்டார்கள். அவர் கொற்

றவன் குடியிற்போய் மடங்கட்டி அங்கே நடேசரை ஆன்மார்த்தமாகப் பூசித்துக்கொண்டு நிட்டைகூடி வந்தார்.

ஒருமுறை நடராசப்பெருமானுக்கு கொடியேற்றுங் காலம் வந்தபோது, தில்லைவாழந்தணர்கள் கொடியேற்ற முயன்றபொழுது அது ஏறாது தடைப்பட்டு நின்றது. அந்தணர்கள் வருத்தங்கொண்டு தத்தம் மனைகளிற்போய்ச் சயனித்தார்கள். அப்பொழுது சொப்பனத்தில் நடராசப் பெருமான் எழுந்தருளி, "உமாபதி சிவன் வந்தாற் கொடியேறும்" என்றருளிச்செய்தார். பின் அவரெல்லோரும் உமாபதிசிவாசாரியரைப் பிரார்த்தித்தார்கள். அவர் கொடிக்கயிற்றைப் பற்றாது விடும்படி ஆஞ்ஞாபித்து, "கொடிக்கவி" என்னுஞ் சித்தாந்த நூலைப் பாடியருளக் கொடி சுயமாகவே ஏறிவிட்டது.

பெற்றான் சாம்பான் என்பவன் உமாபதிசிவனார் அறியாதபிரகாரம் அவருக்குச் சமையல் செய்வாரிடத்து, திருவமுது ஆக்கும்பொருட்டுக் கூலிபெறாமலே விறகுகொடுக்கும் வழக்கமுடையவனாயிருந்தான். ஒருநாள் சமையல் விரைவில் நடவாமையைக்குறித்து உமாபதி சிவனார் வினவியபோது "பெற்றான் சாம்பான் விறகு கொணர்ந்து கொடுக்கும் வழக்கமுடையவன்; இன்றைக்கு மழையினாற் போலும் கொணர்ந்திலான்; விறகுக்குக் கூலிகொடுத்தாலும் வாங்குகின்றானில்லை;" என்று விண்ணப்பித்தார்கள். அதைக்கேட்ட சிவாசாரியர் அவன் வந்தால் என்னிடம் அனுப்புங்கள் என்றருளிச்செய்தார். சமையல் செய்வோர் பெற்றான் சாம்பான் வந்தவுடன் உமாபதிதேவரிடம் அனுப்பினார்கள். அப்பொழுது அவர் அவனைப்பார்த்து "விறகுகொணர்ந்து கொடுக்கின்றாயாம்; கூலி ஏன் பெறுகின்றிலாய்" என்று வினவினார். அதற்கு அவன் "சுவாமி!

அடியேனுக்குத் தீட்சை செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்குச் சிவாசாரியர் "நீ நடராசரிடம் திருமுகம் வாங்கிவருவாயாயின் தீக்கைசெய்வேன்" என்றார். உடனே பெற்றான் சாம்பான் கோவில் வீதியிலே போய் நடராசவள்ளலாரைப் பிரார்த்தித்துப் படுத்திருந்தான். பெருமான் திருப்பாசுரம் எழுதப்பட்ட திருமுகத்தை அர்த்தராத்திரியில் அவனிடம் கொடுத்தருளினார். அவன் அதை உமாபதிசிவனாரது திருமுன்னிலையில் வைத்து நமஸ்கரித்தான். சிவாசாரியர் அத்திருமுகத்தையெடுத்துக் கண்களில்ஒற்றி அதனைத்திறந்துபார்த்தபோது,

> அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
> குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
> பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
> முத்தி கொடுக்கை முறை.

என்று எழுதப்பட்டிருத்தல் கண்டு பரவசமுற்று, பெற்றான் சாம்பானுக்கு ஞானவதிப்பிரகாரம் திருநோக்கமாகிய தீக்கைசெய்து முத்திகொடுத்தருளினார். இவ்வுண்மையை அறியாத பெற்றான் சாம்பான் மனைவி, தனது நாயகனை மடத்துச் சுவாமியார் எரித்துவிட்டார் என்று அரசனுக்கு முறையிட்டாள். அரசன் பெற்றான் சாம்பானது மனைவியின் முறையீட்டைச் சிவாசாரியருக்கு விண்ணப்பித்தான். சிவசாரியர் அவர்களது ஐயத்தை நீக்குமாறு திருவுள்ளங்கொண்டு, முள்ளிச்செடி ஒன்றுக்குத் தமது திருநோக்கத்தினாலே சோதிவடிவாய் ஆகாயத்திற் செல்லும்படி செய்து, அதற்கும் முத்தி கொடுத்தருளினார்.

உமாபதிசிவாசாரியர் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்

னும் சித்தாந்த சாத்திரங்களையும் கோயிற்புராணம் முதலிய பிரபந்தங்களையும் அருளிச்செய்து கொற்றவன்குடியில் நிட்டையிலே வீற்றிருந்து, சிவபெருமானேடு இரண்டறக் கலந்தருளினர்.

**தாயுமான சுவாமிகள்**

குறைவிலருண்ஞானமுதல் கொற்றங்குடியடிக
ணறைமலர்த்தாட்கன்பு பெற்றுநாமிருப்பதெந்நாளோ.

---

## உஉ. கோச்செங்கட்சோழநாயனர்.

சோழநாட்டிலே காவிரிநதிக்கரையில் சிறந்துவிளங்கும் சந்திரபுஷ்கரணி என்னும் தீர்த்தத்தின் மருங்கிலே, விருட்சங்கள் நிறைந்த ஒரு வனம் இருந்தது. அவ்வனத்தில் ஒரு வெண்ணுவல் மரத்தின் கீழே எழுந்தருளியிருந்த சிவலிங்கப்பெருமானை ஒரு வெள்ளானையானது நாடோறும் வழிபட்டுவந்தது. இவ்வாறுக யானை பூசித்த காரணத்தால் அத்தலத்துக்குத் திருவானைக்கா என்னும் பெயர் வழங்கியது.

ஒருநாள் மெய்ஞ்ஞானமுள்ள ஒரு சிலந்தியானது அச்சிவபெருமானுடைய திருமுடிமேல் சூரிய வெப்பமும் சருகும் பொருந்தாதபடி தனது வாயினின்றுந் தோன்றிய நாலினல் மேற்கட்டி கட்டிச்சென்றது. சிலந்தி கட்டிய வலையைச் சிவபெருமானுடைய திருவடியை வணங்கச்சென்ற வெள்ளானை கண்டு, அது அநுசிதம் என்று நினைத்து, அதனைச் சிதைத்தது. சிலம்பி மீண்டு சிவனுடைய திருமுடிமேல் மேற்கட்டி செய்தது. யானை மறுநாள் அம்மேற்கட்டியை முன்போல் அழித்தது. சிலம்பி "எம்பிரானது திரு

மேனியிற் சருகுவிழாவண்ணம் யான் வருந்திக்கட்டிய நூல் விதானத்தை யானை அழிக்கலாமா?" என்று கோபித்து, அவ்வியானையின் துதிக்கையிலே புகுந்து கடித்தது. யானையானது தனது கையை நிலத்தின் மோதிக்கொண்டு விழுந் திறந்தது. யானை வேகமாக மோத அக்கையினுள்ளே புகுந்த சிலந்தியுமிறந்தது. சிவபெருமான் வெள்ளானைக்கு வரத்தைக்கொடுத்து, சிலந்தியைச் சோழர்குலத்திற்பிறந்து உலகத்தை அரசாட்சி செய்யும்படி கிருபைசெய்தருளினார்.

சோழர்குலத் தரசனான சிபியின் வமிசத்திற் றோன்றிய சுபதேவன் என்பவன் தன்னுடைய மாதேவியாகிய கமலவதியுடன் சிதம்பரத்தை அடைந்து, கனகசபையில் ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் நடராசப்பெருமானுடைய திருவடிகளைச் சென்னியுறத் தாழ்ந்து வழிபட்டு வருவானாயினான். மாதேவியாகிய கமலவதி மக்கட்பேறின்மையால் வரம் வேண்ட நடேசரது திருவருளினால், சிறந்த திருப்பணியைத் திருவானைக்காவிற் செய்த சிலந்தியானது கமலவதியினுடைய வயிற்றில் ஒரு மகவாய் வந்து தங்கியது. கமலவதிக்குக் கருப்பநாள் நிரம்பிக் குழந்தையைப்பிரசவிக்குங் காலம் வந்தடுத்தபொழுது மூதறிவினராகிய சோதிடர்கள் "இக்குழந்தை ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமேல் மூவுலகங்களையும் அரசாளும்" என்று கூறினார்கள். அப்பொழுது மாதேவி "என் பிள்ளை இப்போது பிறவாமல் இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கும்வண்ணம் என் கால்களைக் கட்டித்தூக்குங்கள்" என்றாள். அவ்வாறே அதனைச் செய்து முடித்துச் சோதிடர்கள் சொல்லிய காலம் வரக் கட்டவிழ்த்துவிட்டார்கள். அருமணிபோன்ற பிள்ளையை அக்கமலவதி பெற்றெடுத்து, அது பிறக்குங் காலம் தாழ்ந்தமையால் சிவந்த கண்களையுடைத்தாயிருக்கக்கண்டு

"என் கோச்செங்கண்ணனே?" என்று கூறி உடனே இறந்துபோயினள். சுபதேவச்சோழன் அவ்வரிய புதல்வரை வளர்த்து மகுடஞ்சூட்டி அரசாட்சிசெய்பவைத்துச் சிவலோகத்தை அடைந்தனன்.

கோச்செங்கட்சோழநாயனர் முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானுடைய திருவருளினலே, தமது பூர்வசென்ம உணர்ச்சியை அறிந்து இவ்வுலகத்தை அரசாட்சிசெய்பவராய் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் வண்ணம் சிவாலயங்களை விருப்போடு கட்டுவிக்குந் திருத்தொண்டு செய்யுங் கடமையை மேற்கொண்டார். திருவானைக்காவிலே தாம் முற்பிறவியில் திருவருள் பெற்றமையை உணர்ந்து, அங்கே வெண்ணாவல் மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு ஒரு கோயிலைச் சமர்ப்பித்தார். பின்னரும் மந்திரிகளை ஏவி, சோழநாட்டிற் பல திருக்கோயில்களைக் கட்டுவித்தார். கட்டுவித்து அவ்வாலயங்கடோறும், நித்தியமாகிய பூசையும், நைமித்திகமாகிய திருவிழாவும் தவறாது நடத்தற்கு வேண்டும் நிபந்தங்கள் அமைத்து, அவைகளைச் சைவாகம விதிப்படி சிறிதாயினும் வழுவாது நடத்துவித்து வருவாராயினர். வருங்காலத்தில் தில்லைவாழந்தணர்களுக்குப் பல மாளிகைகளைக் கட்டுவித்தார். கோச்செங்கட்சோழநாயனர் சிவபெருமானுக்குச் செய்யுந் திருத்தொண்டோடு பூமியைப் பொதுநீக்கி ஆண்டு நடராசப்பெருமானுடைய திருவடிநீழலை அடைந்தனர்.

**திருநாவுக்கரசு சுவாமிகள். (திருநேரிசை)**

சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவ ணிறந்தபோதே கோச்செங்க ணனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனரே.

---

## உ௬. ஆலயவழிபாடு I.

கருணாநிதியாகிய சிவபெருமான் புறத்திலே திருக்கோயிலினுள்ளிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனியும், மெய்யடியாருடைய திரு வேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும் அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றருள் செய்வர். வினைவயத்தாற் பிறந்திறந் துழலும் ஆன்மாக்களை அவற்றினின்றும் எடுக்குங் காரணமாகவே தலம், தீர்த்தம், மூர்த்தி என்னும் வடிவாய் விளங்கினர். இம் மூன்றையுஞ் சிவனாகவே வணங்கவேண்டும். அவ்வாறு வணங்குவோர் குருவருளாலே முத்தி யடைவார்கள். சிவாலயத்தைச் சிவனெனக்கண்டு வழிபடுவோர் சீவன் முத்தராவார் எனச் சிவஞானபோதம் என்னும் சித்தாந்த சாஸ்திரம் செப்புகின்றது. மார்க்கண்டேய முனிவர் சிவாலய வணக்கம் செய்து சீவன் முத்தராயினர் என்பதே இதற்குச்சான்றாகும். பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், முனிவர்களும், அவுணர்களும், பிறரும் ஆலயவழிபாட்டினாலன்றோ தாந்தாம் விரும்பியவற்றை எய்தி இன்புற்றார்கள். சம்பந்தர் அப்பர் சுவாமிகள் முதலிய நாயன்மாரும் தமது செய்கைகளினாலும் வாக்குக்களினாலும் ஆலய சேவையின் பெருமையை நன்கு காட்டியிருக்கின்றார்கள். சிவாலயங்கள் இல்லாதவூர் எவ்வித வளப்பங்களினால் நிறைந்திருப்பினும் அவ்வூர் காட்டுக்குச் சமமாகும்.

"திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்

விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணு வூரு
மவையெல்லா மூரல்ல வடவி காடே"

சிவபெருமான் இந்த அருமையாகிய மானுடப்பிறவியை எமக்குத் தந்தது தம்மை வழிபாடுசெய்து முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம். ஆதலால் இத்துணை விசேடமுள்ள ஆலயவழிபாட்டை நாடோறுஞ் செய்தல்வேண்டும். செய்தவர்களே மானுடப்பிறவியாலாய பயனை அடைவார்கள். சிவாலயங்களை நோக்குங் கண்களே கண்களாம். சிவனுடைய கோயிலிற் புகுங் கால்களே கால்களாம். அப்பெருமானைத் தரிசியாத கண்களாலும், திருக்கோயிலைப் பிரதக்ஷிணம் செய்யாத கால்களாலும், திருக்கோயிலை வலம்வந்து போற்றாத சரீரத்தாலும் யாது பயன்? அவை இருந்தும் பிரயோசனமற்றவைகளாம்.

திருநாவுக்கரசு நாயனர்

கால்களாற் பயனென்—கறைக்
கண்டனுறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென்.

ஆக்கை யாற்பயனென்—அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னுதவிவ்
ஆக்கை யாற்பயனென்.

வரகுண பாண்டியன் செங்கோலோச்சி அரசியற்று நாளிலே ஒருநாள் காட்டிற்சென்று சூரியன் அஸ்தமிக்கும்வரையும் வேட்டையாடிக்கொண்டு,

மதுரைக்குத் திரும்பினன். திரும்பி வரும்பொழுது வேகத்தோடு செல்லும் அவன் குதிரை அக்காட்டிற் படுத்திருந்த ஒரு பிராமணன்மேலே கால்வைக்க, அவன் இறந்தான். இறந்த பிராமணனுடைய பிரேதத்தை அவன் உறவினர் பாண்டியனுடைய கடைத்தலைவாயிலிலே போட்டு நிகழ்ந்தவற்றை அறிவிக்க, பாண்டியன் வேண்டும் பொருள் கொடுத்து மயானக் கிருத்தியத்தை முடிப்பித்தான். அவனைப் பிரமகத்தி பிடித்தது.

பாண்டியன் பிரமகத்தி நீங்கும்பொருட்டு அரசமரத்தைப் பிரதக்கிணஞ்செய்து, அறுகு கொய்தும் பசுக்களுக்குக் கொடுத்தும், தானம் முதலிய புண்ணியங்களைச் செய்தும் பிரமகத்தி நீங்கவில்லை. பாண்டியன் பிரமகத்தியினால் வருந்தும்பொழுது பிராமணர்கள் அவனை நோக்கி, "அரசனே! நீ நாடோறும் விரதநெறியோடு சோமசுந்தரக் கடவுளை ஆயிரத்தெட்டுத்தரம் பிரதக்கிணம் செய்குதி; இப்படிப் பத்துத்தினம் செய்வையேல் சோமசுந்தரக்கடவுள் உனக்கு வழிகாட்டுவார்" என்றார்கள்.

வரகுணபாண்டியன் அது கேட்டு திருக் கோயிலை அடைந்து சோமசுந்தரேசரை வணங்கி, "அடியேனுடைய பழியைத் தீர்த்தருளும்" என்று விண்ணப்பித்தான். விண்ணப்பித்து ஆயிரத்தெட்டு முறை வலம்வந்து வணங்கினன். பரமசிவனது கிருபையினாலே ஆகாயத்தினின்றும் "பாண்டியனே! பிரதக்ஷிணம் ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அசுவமேதயாகபலங்கொடுக்கும். நீ, அத்துணைச்சிறப்புற்ற பிரதக்ஷிணம் ஒவ்வொருநாளும் ஆயிரத்தெட்டுச் செய்து வந்தாய், இக்காரணத்தினால் சந்தோஷங்கொண்டோம், நீ சோழனோடு யுத்தத்தில் எதிர்க்கும்பொழுது, அவன் புறங்காட்டியோட நீ துரத்துஞ் சமையத்தில்

திருவிடைமருதூரை அடைவாய். அங்கே பிரமகத்தியை நீக்கியருளுவோம்" என்றோர் அசரீரி தோன்றிற்று. பாண்டியன் அதுகேட்டு மகிழ்ந்து அரண்மனை அடைந்தான்.

சிலநாட்கழிய, சோழன் பாண்டியனோடுயுத்தஞ்செய்து முதுகிட்டான். வரகுணபாண்டியன் அவனைத் துரத்திக்கொண்டு போகும்பொழுது காவேரியை அடைந்தான். அடைந்து பூசத்துறையிலே ஸ்நானஞ்செய்து திருவிடைமருதூரிற் சென்று, திருக்கோயிலின் கிழக்கு வாயிலைக் கடந்துசென்றான். செல்லுதலும் பிரமகத்திப்பழியும் பாசமும் புறத்தே நின்றன. வரகுணதேவன் சிவலிங்கத்தைத் தரிசித்து அன்புமயமாய் நின்று தோத்திரஞ் செய்து வணங்கி மதுரையை அடைந்தான்.

ஆகவே போகங்களையும் மோட்சத்தையும் அடைய விரும்பினோர் யாவரும் ஆலய வழிபாட்டை மெய்யன்புடன் செய்தல் வேண்டும்.

---

## உச. ஆலயவழிபாடு II.

ஆலய தரிசனத்துக்குச் செல்லுவோர் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, சந்தியாவந்தனமுதலிய முடித்துக்கொண்டு செல்லுதல் வேண்டும். திருக்கோயிலுக்குச் சமீபமாக வந்தவுடன் கால்களைக் கழுவித் திருக்கோபுரத்தைத் தரிசித்து இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே போய்ப் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்கரித்தல் வேண்டும். ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமுஞ் செய்தல்வேண்டும். அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு

என்னும் எட்டவயவமும் நிலத்திலே படும்படி வணங்குவதாம். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே படும்படி வணங்குதலாம். திரயாங்க நமஸ்காரம் ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் பொது. அதாவது சிரசிலே இரண்டு கைகளையுங் குவித்தலாம். அட்டாங்க நமஸ்காரம்பண்ணும்பொழுது, பூமியிலே சிரசைவைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகள் அரையை நோக்க நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தும்படி செய்தல்வேண்டும். நமஸ்கரித்து எழும்பி இரண்டு கரங்களையும் இருதயத்திற் குவித்துக்கொண்டு, பாதங்களை மெல்லவைத்து வலம்வருதல் வேண்டும். வலம்வரும் பொழுது கொடித்தம்ப நிழலேனும், தூபி நிழலேனும் இருந்தால் அந்த நிழலில் மூன்றிலொருபாகம் நீக்கி எஞ்சிய பாகத்திலே செல்லுதல் முறையாகும். ஆலய வணக்கம் செய்யும்பொழுது, தேவாரம், திருவாசகம், முதலிய அருட்பாக்களை ஓதல்வேண்டும். தரிசனம் முடிந்தவுடன் சண்டேசுரர் சன்னிதியை அடைந்து கும்பிட்டு மூன்று முறை கைகொட்டித் தரிசனபலத்தைத் தரும்படி பிரார்த்திக்கவேண்டும். பின் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்கரித்துக் கடவுளுடைய மந்திரத்தை இயன்ற உருச்செபித்து வீட்டுக்குச் செல்லுதல்வேண்டும்.

திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள்:—ஆசாரமில்லாதுபோதல், கால்கழுவாதுபோதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், பாக்குவெற்றிலை உண்டல், மூக்கு நீர்

சிந்தல், ஆசனத்திலிருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி முடித்தல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், வீண்வார்த்தை பேசல், சண்டையிடல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கேபோதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம்வருதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், திருவிளக்கவியக்கண்டும் தூண்டாதொழிதல் முதலாயினவாம். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்திலே விழுந்து வருந்துவர்.

கலிங்கதேசத்திலே செங்கோல் செலுத்தி அரசாட்சிசெய்த காலிங்கராசனுடைய புத்திரனாகிய விராதன், மந்திரி புத்திரனாகிய சந்திரன், புரோகிதன் புத்திரனாகிய சுனந்தன், வாயற்காவலாளன் புத்திரனாகிய சுகந்தன் என்னும் நால்வரும் தீர்த்த யாத்திரைசெய்ய விரும்பினார்கள்; விரும்பிய அவர்கள் தங்கள் தங்கள் பெற்றாரை வணங்கி, அனுமதிபெற்றுக்கொண்டு, முற்பிறப்பிற் செய்த வினைப்பகுதி செலுத்தச் சென்றார்கள். அந்நால்வரும் சுரேசுரம் என்னுந் தலத்தை அடைந்து, அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபிரானை வணங்கினார்கள். சூரியன் அஸ்தமித்தான். அவ்விரவில் அரசகுமாரன் சிவாலயத்தில் நித்திரை செய்தான். அவன் தலை கோதிமுடித்து மயிரை உதிர்த்தான். மந்திரி குமாரன் சிவாசாரியருடைய மடத்தில் தாம்பூலத்தை மென்று எச்சிலுமிழ்ந்து அங்கே சயனித்தான். புரோகித குமாரன் நந்தனவனத்தில் எச்சிலுமிழ்ந்து, அங்கே துயின்றான். மற்றவன் திருக்குளப்படி

யில் உறங்கினான். அவன் திருக்குளத்தினுள் மூக்கு நீர் சிந்தினான். இவர்கள் சிவபெருமானுடைய திருவுள்ளம் வெறுக்கக்கூடிய செயல்களைச் செய்தமையால் பாவிகளாய், தொடங்கிய யாத்திரையும் முற்றுப்பெறாது, சிரரோகம், கண்டமாலை, மூக்கால் நீர் வடிதல் என்னும் நோய்களால் பீடிக்கப்பட்டு இறந்து, நரகத்துன்பத்தை அடைந்தார்கள்.

---

## உரு. சிவாலயத் திருத்தொண்டுகள்.

சிவாலயத்தின்பொருட்டுச் செயற்பாலனவாகிய திருத்தொண்டுகள் திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தனவனம் வைத்தல், பத்திரபுஷ்பம் எடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்த தூபமிடுதல், திருவிளக்கேற்றுதல், தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களை மனங்கசியப் பாடல், ஆனந்தக் கூத்தாடல், திருக்கோயிற் பிராகாரங்களிலும் திருவீதியிலுமுள்ள புல்லைச் செருக்குதல், சந்தனம் கர்ப்பூரம் முதலிய பூசைத்திரவியங் கொடுத்தல் என்பனவைகளாம்.

**திருநாவுக்கரசுநாயனார்.**

**திருத்தாண்டகம்.**

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே.

இத் திருத்தொண்டுகளாலே சிறப்புற்ற மெய்யடியார் பலருடைய சரித்திரம் திருத்தொண்டர் பெரியபுராணத் திலே காணலாம்.

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரில் வேளா ளர் குலத்தில் புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் மாதினியார் வயிற்றிலே, திலகவதியார் என் னும் புத்திரியாரும் மருணீக்கியார் என்கின்ற புத்திரரும் பிறந்தார்கள். மருணீக்கியார் பல கலைகளையுங் கற்று வரு வாராயினர். திலகவதியாருக்குப் பன்னிரு வயசு ஆனபொ ழுது, அரசனிடத்தில் சேனாதிபதித்தொழிலில் அமர்ந்திருப் பவராகிய கலிப்பகையார் தமக்கும் திலகவதியாருக்கும் மணம் பேசுவித்தார். புகழனார் அதற்கு உடன்பட்டார். கலிப்பகையார் தாம் மணஞ்செய்யமுன் அரசனேவலால் வடதேசத் தரசர்களை எதிர்த்து நெடுநாள் யுத்தஞ்செய்தார்.

இப்படி நடக்குங்காலத்திலே, புகழனார் தேகவியோகம் அடைந்தார். அவர் மனைவியாரும் அவருடன் இறந்தார். திலகவதியாரும் மருணீக்கியாரும் பிதா மாதாக்களுக்குச் செய்யவேண்டிய அந்தியக்கிரியைகளைச் செய்துமுடித்தார் கள். இங்கே இங்ஙனம் நடக்க, கலிப்பகையார் யுத்தகளத் தில் இறந்தார். இச்சமாசாரத்தைத் திலகவதியார் அறிந்து, நம்முடைய தந்தை தாயர்கள் என்னை அவருக்கே கொடுக்க நிச்சயித்து இருந்தமையால், இவ்வுயிர் அவருக்கே யுரியது என்று இறக்கத் துணிந்தார். ஆயினும் தமது தம்பியாரா கிய மருணீக்கியாரது வேண்டுகோளின்படி தமது கருத் தைத் தடுத்து; வேறு மணஞ் செய்யாது, வீட்டிலே தவஞ் செய்துகொண்டிருந்தார். மருணீக்கியார் சமணர்களுடைய போதனை வலிமையினாலே ஆருகத சமயமே முத்தியைக் கொடுக்குஞ் சமயம் என்று அதிற் பிரவேசித்தார். பிரவே

சித்துச் சமணகுருமாருட் சிரேட்டராய் விளங்கினர். திலகவதியார் சிவபெருமானிடத்தில் பத்திமிகுந்து, திருவதிகை வீரட்டானத்தை அடைந்து, சிவனை வணங்கி, விபூதி ருத்திராக்ஷந் தரித்து, தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், சாணத்தினலே மெழுகுதல், புஷ்பங்களைக் கொய்து வந்து திருமாலைகள் தொடுத்தமைத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவதொண்டுகளைச் செய்துவந்தார். செய்துவருங்காலத்திலே, திலகவதியார் தம்முடைய தம்பியாரை ஆருகத சமயத்தினின்றுந் தூக்கிக் காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்துவந்தார். சிவபெருமான் சொப்பனத்திலே தோன்றி, "தபோதனியே, நாம் அவனைச் சூலைநோயினல் வருத்தி ஆட்கொள்வோம்" என்று கூறி மறைந்தருளினர்.

சிவபெருமானுடைய திருவருளினல் தருமசேனர் என்னும் ஆருகதநாமத்தையுடைய மருணீக்கியாரது வயிற்றிலே சூலைநோய் உண்டாகிக் குடரைக் குடைந்தது. சமணர் அந்நோயைத் தங்கள் மந்திர சாமர்த்தியத்தினலே தணித்தும் தணியாமை கண்டு, கைவிட்டார்கள். திலகவதியாரே தமக்கு உதவி என்று துணிந்து, தம்முடைய சமாசாரத்தை அவருக்கு அறிவிக்கும்படி ஒருவனை அனுப்பினர். அவன் தருமசேனருடைய சமாசாரங்களைக் கூற, திலகவதியார் "யான் அங்கு வரேன். இதை நமது தம்பிக்குக் கூறு" என்று சொல்லி அனுப்பினர். அவன் அதை அறிவிக்க, மருணீக்கியார் சோகித்து, சமணருடைய இடத்தைக் கடந்து இரவிலே ஒருவருங்காணுதபடி திலகவதியாருடைய மடத்தை அடைந்து வணங்கி, "தாயே, சூலைநோயைத் தாங்கவாற்ருமையால் உம்மையே சரண் என்று அடைந்

தேன். அடியேன் கரையேறும் வழியை அருளிச்செய்க" என்றார். திலகவதியார் "இது சிவபிரானது அருளே, தம்முடைய திருவடியை அடைந்தோருக்கு அருள்புரியும் பரமசிவனைப் பணிந்து அவருக்குத் திருத்தொண்டுகளைச் செய்யும்" என்று பணித்தருளினார். மருணீக்கியார் அதை ஏற்றுநிற்க; தபோதனியார் திருவருளை நினைந்து திருநீற்றைத் திருவைந்தெழுத்தோதிக் கொடுத்தார். மருணீக்கியார் பணிந்து வாங்கி அணிந்துகொண்டார்.

திலகவதியார் திருப்பள்ளி எழுச்சிக்காலத்தில் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுமெடுத்துக்கொண்டு தம்பியாரை அழைத்துக்கொண்டுபோனார். மருணீக்கியார் திருவதிகை வீரட்டானேசுரரைத் தொழுது வலங்கொண்டு, விழுந்து வணங்கி, சூலைநோய் நீங்கும்பொருட்டுச் சிவபெருமான்மேல்,

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றே னடியே னதிகைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே சூலைநோய் நீங்கிற்று. அப்பொழுது மருணீக்கியார் சிவபிரானுடைய கருணைக்கடலில் அமிழ்ந்தி, சரீரம் முழுவதிலும் உரோமாஞ்சங்கொள்ள, கண்கள் ஆனந்தநீர் சொரிய நிலத்திலே விழுந்து புரண்டு அயர்ச்சிகொண்டார். இப்படி நடக்

கும் வேளையில் "நீ ஞானமயமாகிய தேவாரப்பதிகத்தைப் பாடினமையால், உனக்குத் திருநாவுக்கரசு என்னும்பெயரே ஏழுலகங்களிலும் வழங்குக" என்று சிவபெருமானுடைய திருவருளினாலே ஒரு அசரீரி ஆகாயத்திலே தோன்றியது. திருநாவுக்கரசுநாயனார் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுந் திருப்பணி செய்ய விரும்பி, சிவசின்னந் தரித்துத் தியானமறா உணர்வும், துதிரூபமாகிய தோத்திரமும், உழவாரத் திருப்பணி விடையும் உடையவர் ஆயினார். திலகவதியார் சிவபெருமான் தமது தம்பியாரை ஆட்கொண்ட திறத்தை நினைத்து மகிழ்ந்து வணங்கினார். திலகவதியார் சிவபெருமானுடைய திருக்கோயிற் றிருத்தொண்டைச் செய்திருந்து மோக்ஷத்தையடைந்தார்.

திருக்கடவூரில் அவதரித்த கலயர் என்பவர் அவ்வூரில் வீற்றிருக்கும் வீரட்டநாதருக்குக் குங்குலியத்தூபம் இட்டுவந்தார். இட்டுவருங்காலத்தில் திருவருளால் வறுமை உண்டாயிற்று. உண்டாகியும் தாம் செய்துவந்த திருத்தொண்டிலே தவறாதவராயிருந்தார். ஒரு தினம் அவர் மனைவியார் பசியினால் வருந்தும் புத்திரர்களைப்பார்த்து இரங்கி, தம்முடைய தாலியைக் கணவர் கையிற் கொடுத்து நெல்லு வாங்கிக்கொண்டு வரும்படி கூறினார். அதை வாங்கி நெல்லுக்குச் சென்றவர், ஒருவன் குங்குலியப்பொதிகொண்டு எதிரேவரத் தாலியைக் கொடுத்து அப்பொதியை வாங்கிக் கொண்டு ஆலயத்துக்குச் சென்று அங்கே தூபமிட்டுக் கொண்டு இருந்தார். சிவபெருமான் அன்றிரவு அவரது வீடு முழுவதிலும் பொற்குவியலும் நெற்குவியலும் பிற குவியலும் நிறையும்படி செய்தார். செய்து, அம்மனைவியாருக்குக் கனவிலே கிருபைசெய்தார். உடனே அவர் விழித்துத் திருவமுது பாகஞ்செய்ய முயற்சித்தார். பின்னர்,

பெருமான் நாயனருடைய கனவிலே தோன்றி, "பக்தனே, நீ வீட்டுக்குச் சென்று பாலுஞ் சோறும் உண்டு பசியை ஒழி" என்று திருவாய்மலர்ந்தருளினர். நாயனர் வீட்டை அடைந்து நிதிக்குவையைக் கண்டு, திருவருளைத் துதித்தார். மனைவியார் கணவரையும் சிவனடியார்களையுந் திருவமுதுசெய்வித்தார். குங்குலியக்கலய நாயனர் குங்குலியத் தூபமிடுதலாகிய திருப்பணியைச் செய்துகொண்டிருந்து சிவபதமடைந்தார்.

இச்சரித்திரங்களாலே சிவாலயத்தொண்டின் மகிமை உணர்த்தப்பட்டது.

---

## உசு. திருவிளக்கிடுதல்.

ஆலயம் முதலிய சிவ சன்னிதானங்களிலும், பூசையிலும், யாகம் முதலியவற்றிலும் விளக்கிடுதல் மகா புண்ணியமாம். விளக்கிடுதல் சரியைத் தொழில்களுள் விசேடித்ததாகச் சொல்லப்பட்டது. தீபமேற்றுபவர்களும், தீபந் தாங்குபவர்களும், தீபத்துக்கு நெய் உதவுபவர்களும் பாபம் நீங்கி உண்மை ஞானவிளக்கம் அடைந்து சிவபெருமானுடைய திருவடியை அடைவார்கள். திருவிளக்கிடுதலாகிய சிவ புண்ணியத்தின் மகிமையை,

**திருநாவுக்கரசு நாயனர்**

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
யரும்பொடுமலர்கள்கொண்டாங்கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனரே"

என்னுந் திருச்செய்யுளாலும்,

"விளக்கினுர் பெற்ற வின்ப மெழுகினுற் பதிற்றியாகுந்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றாயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகு
மளப்பிலை கீதஞ் சொன்னுர்க் கடிகடா மருளுமாறே"

என்னுந் திருச்செய்யுளாலும், நன்கு உணர்த்தியிருக்கின்றூர்கள்.

மாவலி என்பான் முற்பிறப்பில் எலியாகப் பிறந்து சிவாலயத்துள்ள விளக்கிலிடப்பட்ட திரியை அபுத்திபூருவமாகத் தீண்டி ஓங்கியெரியச்செய்த காரணத்தானன்றே புவனம் யாவையும் பொது அறப் புரக்கும் வாழ்வையும் ஈற்றில் முத்தியையும் அடைந்தான். இங்ஙனமாயின் புத்திபூருவமாகத் திருவிளக்கிடுவார் அடையும் பலன் இவ்வளவினதென்று கூறுதே உணர்ந்துகொள்ளலாம். மெய்யன்புடன் திருவிளக்கேற்றியவர்களுடைய சரித்திரங்கள் பல உள. நமிநந்தி அடிகள் நாயனுருடைய சரித்திரத்தைக் காட்டுவாம்.

சோழநாட்டிலேயுள்ள ஏமப்பேறூரிலே, அந்தணர் குலத்தில் விபூதியே மெய்ப்பொருள் என்று அறியுந் துணிபுடையவரும், சிவபெருமானது திருவடிகளை அல்லும் பகலும் வழிபடுதலே இன்பமாகவுடையவருமாகிய நமிநந்தி அடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருவாரூரை அடைந்து வன்மீகநாதரை வணங்கிவருவாராயினுர். ஒருநாள் வன்மீகநாதரை வணங்கி எழுந்து பெருவாழ்வடைந்து, பாங்கரிலுள்ள அரனெறி என்னும் ஆலயத்தை அடைந்தார். அடைந்து காதலோடு வணங்கிப் பல திருத்தொண்டுகள் செய்து, எண்ணில்லாத தீபமேற்றுதற்கு விரும்பிய நாயனுர், அப்பொழுது மாலைக்காலமாதலும் அப்பாற்செல்லிற் பொழுதுசெல்லும்என்று நினைத்துச்

சமீபத்திலே ஒரு வீடிருந்ததுகண்டு அது சமணர்வீடென்றறியாது போய்ச் "சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய் தாருங்கள்" என்று கேட்டார். அவர்கள் "கையிலே அக்கினி வைத்திருக்கும் நுங்கடவுளுக்கு விளக்குமிகையாகும்; இங்கே நெய் இல்லை; நீரை முகந்து எரியும்" என்று கூறினார்கள். நமிநந்தியடிகள் அதைக் கேட்டுப் பொறாராகி வருத்தமுடன் சிவனது கோயிலை அடைந்து நமஸ்கரித்தார்.

அப்பொழுது "நமிநந்தியே! நீ உன் கவலையை நீக்குதி; சமீபத்தில் இருக்கின்ற குளத்தில் நீரை முகந்து கொண்டுவந்து விளக்கேற்றுதி" என்றோர் அசரீரிவாக்கு எழுந்தது. அதுகேட்டு நமிநந்தியடிகள், சிந்தைதெளிந்து திருவருளைத் துதித்துக் குளத்தில் இறங்கி, சிவநாமத்தை உச்சரித்து, நீரைமுகந்துகொண்டு கோயிலிலே வந்து அகலிலே முறுக்கிய திரியில் அந்நீரை வார்த்து விளக்கேற்றினர். அது சுடர்விட்டெரிந்தது. அதுநோக்கி அவ்வாலயம் நிறைய நாடறியும்படி நீரினாலே திருவிளக்கெரித்தார். திருவிளக்கு இரவிலே நின்று எரியும்படி, குறைகின்றதகழிகளுக்கெல்லாம் நீர்வார்த்து, தமது வீட்டையடைந்து மறுநாட்காலையில் கோயிலுக்கு வந்து, பல திருத்தொண்டுகளைப் பகலிற் செய்து இரவில் திருவிளக்கேற்றுவர். இந்தப்பிரகாரம் திருத்தொண்டுகளைச் செய்திருந்து சிவபிரானுடைய திருவடிகளை அடைந்தனர்.

---

## உஎ. சிவநின்மாலியம்.

சிவபெருமானுடைய திருமேனியில் தரிக்கப்பட்ட விபூதி, புஷ்பம், சந்தனம் முதலியவைகளும், அப்பெருமானுக்கு நிவேதிக்கப்பட்ட திரு அமுது முதலியவைகளும் சிவ நின்மாலியப் பொருள்கள் என்று சொல்லப்படும். இவைகளை அணிவதாலும் உட்கொள்ளுவதாலும் பாவம் தேய்ந்து முத்தியின்பம் கைகூடும். இந்த நின்மலப்பொருள்களை ஆசாரியராயினும், தீக்ஷை முதலியவற்றினால் உயர்ந்தோராயினும் கொடுக்கும்பொழுது, அவரை வணங்கி இருகரத்தாலும் பெற்றுக்கொண்டு மீட்டும் வணங்குதல் வேண்டும். சிவநின்மாலியப் பொருள்களை ஒருகையினாலே பெற்றுக்கொள்ளுதலும், ஆசனத்திருந்து பெற்றுக்கொள்ளுதலும், அவைகளை இகழ்தலும், காலினாலே மிதித்தலும், கடத்தலும், அசுத்தமான இடங்களிலே வைத்தலும் உய்தியில் குற்றங்களாகும். இக்குற்றங்களைச் செய்தோர் தண்டிக்கப்படுவர்.

துருவாசமுனிவர் காசியிலே ஒரு சிவலிங்கந்தாபித்துப் பூசைசெய்தார். செய்யும்பொழுது, சிவபெருமானது திருமுடியினின்றும் ஒரு தாமரைப் பூவிழ, அதை இருகரங்களாலும் ஏந்தி, கண், சென்னி, மார்பு ஆகிய தானங்களில் அணைத்து, விடைபெற்றுக்கொண்டு சுவர்க்கத்துக்குச் சென்றார். செல்லும்பொழுது இந்திரன் அவுணர்களைக்கொன்று ,வெற்றிமாலை சூடிச் சேனைக் கடல் சத்திக்க வெள்ளை யானையில் பவனிவந்தான். அப்பொழுது தேவர்கள் கையுறைகளைக் கொடுத்து வணங்கினார்கள். துருவாசமுனிவர் தம்முடைய கரத்திலிருந்த பூவை நீட்டினார். மதியற்றவனாகிய இந்திரன் செல்வச்செருக்கினால் அப்புட்

பத்தை ஒருகையினுல் வாங்கி மதயானையின் மத்தகத்தின் மேல் வைத்தான். யானை தனமேல் வைக்கப்பட்ட தாமரைப்பூவை விழுத்திக் காலால் உழக்கிச்சென்றது.

துருவாசமுனிவர் அதுகண்டு கோபித்துப் பார்த்து, "மெய்யன்பர்கள் அருவருத்துத்தள்ளிய, எளிய செல்வத்தினலாய செருக்கையுடையவனே! நீ யாது காரியஞ் செய்தாய்! தேவர்கள் தரும் கையுறைகளையே பெரிதாக மதித்தாய்! முழுமுதற் கடவுளாகிய சிவபிரானது முடிமேல் சாத்தப்பட்ட பூவை வணங்காது வாங்கி யானை மிதித்துச் சிந்த அதன்மேல் வைத்தாயே, விட்டுணுவினுடைய இறுமாப்பும், பிரமனுடைய இறுமாப்பும், உன் இறுமாப்பும் சிவபிரானைப்பூசித்தபேறென்று உணர்ந்திலையே. பேதையே, இச்சிவத்துரோகத்தினுல் உன்னுடைய தலையும் பாண்டிய ராசன் ஒருவனது வளையினுலே அறுக. இந்த வெள்ளை யானை காட்டானையாகக்கடவது" என்று சபித்தார்.

தேவர்கள் நடுநடுங்கி, துருவாசமுனிவரை விழுந்து நமஸ்கரித்து, "சுவாமீ, நமது அரசனும் யானையும் கொடும் பாவஞ்செய்தமையினுல் சபித்தீர்; இச்சாபத்தை நீக்கியருளுக" என்று பிரார்த்தித்தார்கள். துருவாசமுனிவர் திருவுளமிரங்கி, சிவநிர்மாலிய நிந்தனை பரிகாரத்தினலே நீங்காது; இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகக்கடவது; வெள்ளை யானை காட்டு யானையாகி நூறு ஆண்டுகள் சென்றதற்குப்பின் முன்போலாகக்கடது என்று பிறிது சாபஞ் சொன்னர். துருவாசமுனிவர் சாபப்படி . . . திரன் உக்கிரபாண்டியனுல் மகுடபங்கம் அடைந்து அவமானமுற்றுன்.

வெள்ளையானை சுவர்க்கம் நீங்கி, அறிவிழந்து காட்டியானையாகி, நூறுவருடங்கழியக் கடம்பவனத்திற் புகுந்து, பொற்றாமரைவாவியைக் கண்டது. உடனே மெய்யறிவு தோன்ற ஸ்நாநஞ் செய்து பழையவடிவுபெற்று, பூசை செய்து சுவர்க்கமடைந்து இனிது வாழ்ந்திருந்தது.

---

## ௨௮. சிவத்திரவியங் கவர்தல்.

சிவபெருமானை நிந்தித்தலும், குருசங்கமங்களை நிந்தித்தலும் ஈசுரத் துரோகங்களாகிய அதிபாதகங்களாவது போல, சிவனுக்கும் குருசங்கமங்களுக்கும் உரிய திரவியங்களை அபகரிப்பதும் ஈசுரத் துரோகமாகிய அதிபாதகங்களாம். ஈசுரத்துரோகம் எவ்வகைப்பட்ட பிராயச்சித்தத்தாலும் தீராது.

சிவத்திரவியங்களைக் கவர்ந்தவர்களும், கவருதற்கு உடன்பட்டவர்களும், கவருதற்கு முயன்றவர்களும், அவரோடு நட்புக்கொள்ளுபவர்களும் நரகத்துன்பமடைந்து, அது அனுபவித்தபின் பூமியிலே மலக்கிருமி முதலியனவாகப் பிறந்திறந்து; பின் மனிதப்பிறவி எடுத்து நோய்களினாலும் பசியினாலும் வருந்துவார்கள்.

விதாதா என்பவன் அங்கதேசத்திலிருந்து செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்துவந்தான். அவனுக்கு அசித்தன் என்பவன் புரோகிதனாய் இருந்தான். விதாதா இராச்சியபரிபாலனம் செய்துவருங் காலத்திலே, நாரத முனிவர் சபைக்குப் போயினார். அரசன் அவரைக் கண்டு துசென்று பூசித்துத் தனது சிங்கானத்தின்மீது இருத்தி வணங்கினான். முனிவர் அரசனை நோக்கி, "மன்னனே! உன்பிதா சுவர்க்கலோகத்தில் இந்திரனது சபை

யில் இருக்கின்றான். அவன், தான்மேலவர்களது சொற்படி தருமத்தைச்செய்து இந்திரபோகத்தைப் பெற்றதாகவும், நீயும் நல்ல தருமவழியாக நடந்து, அரசாட்சிசெய்யத் தான் விரும்புவதாகவும் உனக்குச் சொல்லும்படி என்னிடத்திலே கூறினான்" என்று சொல்லியருளினார். அதன் பின்னர், அரசனதுபக்கலாகவிருந்த அசித்தனை நோக்கி; உன்பிதா நரகத்தில் மிகுந்த துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். யான் அவ்விடம் சென்றபொழுது உனக்குச் சொல்லும்படி மேல்வருமாறு கூறினான்.

"யான் அங்கதேசத்தில் ஒரு அரசனுக்கு மந்திரியாயிருந்தேன். பொருளாசைமிகுதியால் தருமத்தைவெறுத்துப் பெருந் திரவியத்தைத்தேடிப் பாதுகாத்தேன். அப்பெரும் பாவத்தால் இந்த நரகத்திற்கிடந்து வருந்துகின்றேன். யான் சம்பாதித்த பொருள்களை என் வீட்டுத் தூணடியிற் புதைத்துவிட்டேன், அதை என் மகனுக்குச் சொல்லவில்லை. இவைகளைத் தேவரீர் அவனுக்குக் கூறி அத்திரவியத்தை எடுத்துத் தருமத்தைச்செய்து, என்னையும் நரகத்தினின்று மீட்கும்படி சொல்லவேண்டும்"

இவ்வாறு அரசனும் மந்திரியும் தெரியும்படி கூறிய நாரதமுனிவர் மீண்டார். அசித்தன் தனது வீடுசென்று தூணின்கீழ்த் தோண்டிப் புதையலை எடுத்துத் தருமங்களைச்செய்தான். புண்ணியங்களைச் செய்தமையால் அவன் தாதை நரகத்தினின்று நீங்கிச் சுவர்க்கத்தை அடைந்தான்.

ஒருதினம் அரசனும் மந்திரியும் பிராமணர்களை [illegible] வித்துத் தானஞ்செய்யத் தொடங்கினார்கள். தொடங்[illegible] அவர்கள் உண்ணப்படுவனவற்றைப் படைத்தார்கள். சிலருக்கு வாழைப்பழம் படைக்காமையின், அப்பிராமணர்

கள் கறுத்து நோக்கி, "எங்களுக்குமாத்திரம் வாழைப்பழம் அரிதாய்விட்டதா?" என்றார்கள். அரசன் அசித்தனை நோக்கி, "நூறு வாழைப்பழம் அழைத்தி" என்று கூறினான். அப்பொழுது ஒரு பிராமணன் "இதற்கு மேற்கே வீமேசுரம் என்னும் சிவத்தலம் இருக்கின்றது. அவ்வாலயத்துக்குரிய வாழைச்சோலையில் பழுத்தகுலை இருக்கின்றது" என்று கூறினான். அசித்தன் என்பான் அங்கே நின்ற சிலரை நோக்கி, அதற்குத்தக்க விலையைக்கொடுத்து அனுப்பினான். அவ்வாலயத்தில் உள்ளவர்கள் சிவத்திரவியங்களின் உயர்வை எடுத்துச்சொல்லி, "சிவபெருமானுடைய அபிடேகத்திற்கன்றி வேறொன்றற்குங் கொடுப்பதில்லை" என்றார்கள். ஏவலாளர்கள் திரும்பிவந்து அரசனுக்குக் கூறினார்கள். அசித்தன் அவர்களை நோக்கி, "விலையை அவர்களிடம் போட்டுவிட்டுத் தகுதியான நூறு வாழைப்பழங்கள் எடுத்துவாருங்கள்" என்று கோபத்தோடு சொல்லியனுப்பினான். மந்திரியினுடைய கட்டளைப்படி ஏவலர்கள் தோட்டத்தினுட்போய், பணத்தை எறிந்துவிட்டு, பெரியகுலையாக எடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அரசனும் மந்திரியும் அப்பழங்களைப் பிராமணர்களுக்குப் பரிமாறித் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றினார்கள்.

அவ்வாலயத்திலுள்ள மெய்யன்பினராகிய மறையவர்கள், ஏவலாளர் வீசிய பணத்தை எடுக்காது, அரசனுக்கு முறையிட்டார்கள். அரசன் அவர்கள் கூறியதைச் செவிசாத்தினனல்லன்.

அரசன் சிவத்திரவியங் கவர்தற்கு இணங்கியமையினால் அவன் பிதாவை நரகத்திற் செலுத்தினார்கள். அரசனுடைய நாட்டையும் மனைவியையும் குறுநிலமன்னர் கைக்

கொண்டார்கள். அசித்தன் என்பவனது கண்களையும் தோண்டி எறிந்தார்கள். அவன் இறந்து நரகத்தையடைந்தான். அவன் செய்த புண்ணியத்தினால் சுவர்க்கத்தை அடைந்த பிதாவும் நரகத்தை அடைந்தான். வாழைப் பழத்தைத் தந்தாலல்லது உண்ணேனென்ற பிராமணர்களும், சிவனுக்குரிய அப்பழங்களைக் கொண்டுவந்தவர்களும், அத்தோட்டத்திலிருக்கிறதென்று அடையாளங் காட்டினவனும் ஆகிய இவர்கள் எல்லோரும் நரகத்தை அடைந்தார்கள். அரசன் க்ஷயரோகத்தினால் வருந்தி நரகத்தை அடைந்தான்.

### சோமேசர் முதுமொழிவெண்பா.

நின்னபிடே கப்பழத்தை நீண்மறையோர்க் கீந்தவிறை
துன்னுகுடி யோடழிந்தான் சோமேசா—பன்னில்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

---

## உகூ. குருசங்கம வழிபாடு.

தீக்ஷைவைத்தவர், வித்தை கற்பிப்பவர், பதிபசுபாச உண்மைகளைப் போதிப்பவர், சமயாசாரக் கிரியைகளைச் செய்பவர் முதலியோர் குரு எனப்படுவர். நிருவாணதீக்ஷிதர், விசேட தீக்ஷிதர் சமயதீக்ஷிதர் என்னும் முத்திறத்துச் சிவபத்தர்கள் சங்கமம் எனப்படுவர். குருவையுஞ் சிவ னடியாரையும் மனிதரென்று பாவியாது சிவனெ நினைத்து மனம் வாக்குக் காயங்களினாலே வழிபடல்வே டும். குரு சங்கமங்களிடத்து அன்புசெய்யாது அவமானஞ் செய்து சிவனிடத்துப் பக்தியுள்ளவர்போல் ஒழுகுதல்

வயிற்றைவளர்க்குங் காரணமாகவும், இடம்பங் காரணமாகவுஞ் செய்யும் நடிப்புமாத்திரையேயன்றி வேறில்லை. சிவபத்தியுடையவர்களுக்கு அச்சம்பந்தம் உடையவருடைய இணக்கம் சிவபக்தியை வளர்க்கும். அச்சம்பந்தம் இல்லாதவருடைய இணக்கம் சிவபத்தியைக் கெடுக்கும். குருவும் அடியாரும் தம் வீட்டுக்கு வரின் இன்சொற் சொல்லி ஆசனத்திலிருத்தி நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு விபூதி வாங்கித்தரித்து, மீட்டும் நமஸ்கரித்து அவர் இரு என்றபின் இருத்தல்வேண்டும்.

தாம் பிறரை வணங்கும்போது அவ்வணக்கம் சிவனுக்கென்று சிந்தித்தல்வேண்டும், தம்மைப் பிறர் வணங்கும்போது இவ்வணக்கம் நமக்கல்ல; நம்மிடத்து இருக்கும் சிவனுக்காம் என்று சிந்தித்தல்வேண்டும். மாணாக்கர் தாம் குருவுக்கு எவ்வளவுபொருள் கொடுப்பினும், தம்மைக் குருவுக்கு அடிமையாக ஒப்புக்கொடுத்தலேயன்றி அப்பொருளைப் பிரதி உபகாரமாக நினைத்தல் கூடாது. தீக்ஷாகுரு முதலாயினோர் சிவபதமடைந்த மாசநட்சத்திரத்திலாயினும் திதியிலாயினும் அவரைக்குறித்துக் குருபூசை செய்து வரல்வேண்டும்.

இன்னும் தமிழ்வேதத்தைத் திருவாய்மலர்ந்தருளிச் சமயஸ்தாபனஞ் செய்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமயகுரவர் நால்வருக்கும், பெரியபுராணத்தைத் திருவாய்மலர்ந்தருளிய சேக்கிழார்நாயனாருக்கும், மெய் ண்டதேவர் முதலிய சந்தானசாரியர் நால்வருக்கும், திருக் ளைத் திருவாய்மலர்ந்தருளிய திருவள்ளுவநாயனருக் இயன்றமட்டும் குருபூசை செய்தல் அவசியமாம். குருபூசைசெய்ய இயலாதவர் இயன்ற பொருள்களைக் கொடுத்துப் பூசையைத் தரிசித்தல்வேண்டும். அதுவும்

இயலாதவர் கறிதிருத்துதல் முதலியதொண்டுகளைச் செய்தல்வேண்டும்.

குருவுக்குஞ் சிவனடியாருக்குஞ் செய்யத்தகாத குற்றங்கள்:—கண்டவுடன் இருக்கைவிட்டு எழாமை, அவர் எழும்பும்பொழுது உடன் எழாமை, அவர் திருமுன்னை உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், போர்த்துக்கொள்ளுதல், அவர் தரும் பொருளை ஒருகையாலே வாங்குதல், அவருக்குக் கொடுக்கும்பொருளை ஒருகையாற் கொடுத்தல், அவர் கோபிக்கும்போது தாமுங் கோபித்தல், அவருடைய ஆசனம் முதலியவற்றைத் தாம் உபயோகித்தல் முதலியவைகளாம்.

கிருதயுகத்திலே தேவராசனாகிய இந்திரன் தேவசபையிலே அரம்பையர்களுடைய ஆடலையும் பாடலையும் கண்டும் கேட்டும் களிப்புறுவானாயினான். அப்பொழுது தேவகுருவாகிய வியாழபகவான் அங்கே வந்தனர். இந்திரன் அவர் வருதலைக்கண்டும் இருக்கைவிட்டெழுந்து வழிபடாது வாளாஇருந்தான். அதுகண்ட வியாழபகவான் அவ்விடத்தினின்று போயினார். இந்திரனுடைய செல்வம் சிறிதுசிறிதாகக் குன்றியது. இந்திரன் குருவை நிந்தித்த பாதகத்தினால் இது விளைந்தது என்று நினைந்து, குருவை எவ்விடத்துந்தேடிக் காணாது, பிரமதேவரிடத்தில் சென்று நிகழ்ந்ததை விண்ணப்பஞ்செய்தான். பிரமதேவர் குருநிந்தனையால் இந்திரனுக்கு மேல் நிகழ்வதனை அறிந்து, "நீ உனது குருவாகிய வியாழனைக் காணுமளவும், அவுண[torn]கிய விசுவரூபனை உனக்குக் குருவாக்கிக்கொள்ளுதி" [torn]னார். இந்திரன் விசுவரூபனைக் குருவாக்கிக்கொண்டு, [torn] ஒரு யாகஞ்செய்யும்படி வேண்டினான். அவுணன் புறத்திலே தேவர்களுக்கு ஆக்கம்பெருகுக என்றுகூறி, அகத்

திலே அசுரர்க்கு உய்யுந்திறம் உண்டாகுக' என்று செய்தான். இவ்வஞ்சனையை அறிந்த இந்திரன் தன் குலிசாயுதத்தினாலே விசுவரூபனுடைய தலைகள் மூன்றையும் வெட்டினான். துவட்டா தன் குமாரனாகிய விசுவரூபனை இந்திரன் கொன்றமையைக் கேள்வியுற்று, ஒரு யாகஞ்செய்து யாககுண்டத்தினின்று விருத்திரனைத் தோற்றுவித்து, இந்திரனைக் கொல்லும்படி ஏவினான். இந்திரன் அவனைத் தனது குலிசத்தினாலே கொன்றான். உடனே பிரமகத்தி தோஷம் இந்திரனைப் பிடித்துக்கொண்டது. இந்திரன் அச்சங்கொண்டு ஒரு தடாகத்தில் விழுந்து, தாமரை நாளத்தில் ஒளித்துக்கொண்டான்.

அதன்பின்பு தேவர்கள் பிரகஸ்பதி பகவானை வணங்கி, தமக்கு அரசனில்லாக் குறையை விண்ணப்பித்தார்கள், வியாழன் தடாகத்தில் ஒளித்துக்கொண்டிருந்த இந்திரனைக்கூவி, வெளிப்பட்டுவந்த அவனை அழைத்துக்கொண்டு திரும்பினார். இந்திரன் "சுவாமீ! இப்பழி நீங்குவது எங்ஙனம்" என்றான். வியாழன் "இப்பழி பூமியிலேயே தீரும், அங்கேவா" என்றார். இந்திரன் குருவுடன்வந்து பல தலங்களை வணங்கி, கடம்பவனம் என்னும் பெயரையுடைய மதுரையை அடைந்தான். அவனைக் கொலைப்பழிவிட்டு நீங்கியது. அங்கே சிவலிங்கத்தைக் கண்டு பூசித்து வணங்கினான். சிவபெருமான் தோன்றி, "சித்திரை மாதத்தில்வரும் சித்திரை நட்சத்திரத்தில் நம்மை வந்து பூசிப்பாயாக; உனக்கு முத்தியைத் தருவோம்" ...று மறைந்தருளினார். பின்குருவைப் பூசித்து "அப... பொறுத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்து, சுவர்க்கமடைந்து அரசாட்சிசெய்திருந்தான்.

## ௩௦. நக்கீரர்.

பொய்யடிமையில்லாப் புலவர்களாகிய நக்கீரர் முதலிய வித்துவான்களை உயிர்த் துணைவர்களாகக்கொண்டு ஒழுகுகின்ற வங்கியசூடாமணி என்னும் பாண்டியன், வசந்த காலத்தில் ஒருநாள் மேல்மாளிகையில் தன்மனைவியோடிருந்தான். அப்பொழுது மந்தமாருதத்தோடு தன்மனைவியின் கூந்தல் வாசனைவீச, அப்பாண்டியன் தன்மனைவியாளது கூந்தலின் இயற்கை வாசனையாகும் என்றுமதித்து, அதனைப் பிறருக்குப் புலப்படுத்தாது தன்மனதிற்பொருந்திய நுண்பொருள் விளங்கும்படி ஒரு செய்யுள்செய்யும் புலவன் இதைக்கொள்க என்று, ஆயிரம்பொன் நிறைந்த ஒருகிழியைச் சங்க மண்டபத்தின்முன்னே தூக்கினான். புலவர் யாவரும் தமக்குத் தோன்றியவாறு பாக்களைப் புனைந்து அரசன் முன்னர்ச்சென்று சாற்றினர். அவைகளனைத்தையும் பாண்டியன் வெறுத்ததனால் அவர்கள்வருந்தி அகன்றார்கள். அப்பொற்கிழி அறுப்பாரின்றி இருந்தது. இருக்குங்காலத்தில் பஞ்சம்வந்தது.

சோமசுந்தரக் கடவுளை வழிபடும் ஆதிசைவராகிய தருமி என்பவர், தமக்குப் பொருள்வரவின்மையாற் கவலையுற்றுச் சோமசுந்தரக்கடவுளை அடைந்து அவருக்கதனை முறையிட்டார். கடவுள் அருள்சுரந்து, “அன்பனே, நீ வருந்தேல்; பாண்டியராசன் தன்கருத்தை விளக்கி, ஒ[illegible] செய்யுள்செய்யும் புலவன் கைக்கொள்ளும்படி ஆ[illegible] பொன்னை அமைத்ததோர் கிழியைச் சங்கமண்டபத்[illegible] முன்னே தூக்கியிருக்கின்றான்; இப்பாடலை உரைத்து அதைப் பெற்றுக்கொள்ளுதி” என்று

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே

என்னும் பாசுரத்தை அளித்தருளினர்.

அதனாற் சந்தோஷம் மிக்கதருமியும் அவ்வாசனுக்கு அப்பாடலாகிய அமிர்தத்தைப் புகட்டினன். பாண்டியன் தான் கருதியபடி இருத்தலால் மகிழ்ந்து, "இப்பாடலைச் சங்கப்புலவர் முன்னிலையில் அரங்கேற்றுவீராக" என்றான். தருமி சபையில் அரங்கேற்றப் புலவர்கள் மகிழ்ந்தார்கள். நக்கீரர் கல்விச்செருக்கினால் "நீயுரைத்த பாட்டுப் பிழையுடைத்து" என்றார். அதுகேட்ட தருமி துக்கமுடையராய் விரைந்துசென்று ஆலவாய் அடிகளுக்கு முறையிட்டார். பரமசிவன் ஒரு புலவருருக்கொண்டு, சங்கப் புலவரிடத்துச்சென்று, "எமது செய்யுளுக்குக் குற்றங்கூறினவர் யாவர்?" என்றார். நக்கீரர் யானே என்று தருக்கிக் கூறினர். சிவபெருமான் "குற்றம்யாது சொல்" என்றார். நக்கீரனர் "மகளிரது கூந்தலுக்கு நாற்றம் செயற்கையாலல்லாமல் இயற்கையாகவுளதோ? ஆகையால் இக்கவி குற்றமுடைத்து" என்றார். பெருமான் "தேவமகளிர் கூந்தலுக்கு மணம் இயற்கையாக உளதன்றோ" என்றார். நக்கீரர் "தெய்வமகளிர் கூந்தலும் நறு நாற்[illegible]த்தை இயற்கையாக வுடையதன்று" என்றார். சோம[illegible]ரக்கடவுள் நீ வழிபட்டேத்தும் காளத்திநாதரது [illegible]த்தமர்ந்த ஞானப்பூங்கோதையினது கூந்தல் எத்தன்மையது?" என்று வினவினர். நக்கீரர் செருக்கினால் "அதுவுஞ் செயற்கைமணமுள்ளதே" என்று சாதித்தனர்.

அதுகண்டு பரமசிவன் தமது நெற்றிக்கண்ணையும் திருச்சடையையுங் காட்டியருளினார். நக்கீரர் "வடிவமுழுதுங் கண்களைக்காட்டினாலும் செய்யுள் பிழையுடையதே" என்றார். கடவுள் "இயற்கைவாசனை வீசும் அம்பிகையினது கூந்தலைச் செயற்கை மணமுடையதென்று இழித்துக் கூறினை; ஆதலால் நீ குட்டநோயடைந்து அலைக" என்றார். நக்கீரர் சரீரம் நடுங்கி இரங்கி கருணைக்கடலாகிய எந்தையே, உண்மை ஞானமில்லாத அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொண்டு, திருவருள்புரிக" என்று விண்ணப்பஞ் செய்தனர். பெருமான் திருவுளமிரங்கி, நீ கைலைகாணில் இங்நோய் தீரும் என்றுபணித்து மறைந்தருளினார். தருமி பொற்கிழிபெற்று மகிழ்ந்தார்.

தமிழ் நாவலர் கைலை செல்லவிரும்பி மற்றைப் புலவர்களிடத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு, பலதலங்களையும் வணங்கி, இமயத்தையடைந்து, அங்கேயுள்ள பொய்கையொன்றில் நீராடி அதன்கரையிலுள்ள ஆலவிருட்சத்தடியில் தியானஞ்செய்திருந்தார். அப்பொழுது ஒருகிளையினின்றும் ஓர் இலையானது பாதி நிலத்திலும் பாதி சலத்திலுமாக விழுந்தது. நிலத்தில் விழுந்தபாதி பறவையும் நீரில் விழுந்தபாதி மீனுமாகத் தம்முள் ஒன்றையொன்று இழுத்தன. நக்கீரர் அவ்வதிசயத்தைக்கண்டு தியான நிலை தவறினார். அற்றைப்பொழுதில் ஒருபெரிய பூதம் நக்கீரரைத் தூக்கிக்கொண்டு சென்று இவர்போல் தியானத்தினின்றும் வழுவிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொ[illegible]பதின்மருடன் மலைக்குகையினுள்ளே வைத்து நீரா[illegible] சென்றது. அக்குகையினுள்ள அவரெல்லாம் எக்[illegible]றப் புலவரை நோக்கி, "நீ இங்கே வருதலால் ஆயிரம் என்னுந் தொகையாயினேம்; இனி நாம் அப்பூதத்துக்கு

இரையானோம்" என்று வருந்தாநின்றார்கள். நக்கீரர் அதைக்கேட்டு வருந்தாது, சுப்பிரமணியக்கடவுளுக்கு இத் துன்பத்தை நீக்குதல் அரிதாமோ என்று நினைத்துத் திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தத்தைப் பாடிமுடித்து அக்கடவுளுடைய திருவடிமீது சாத்தினார். முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி, நக்கீரரை அப் பூதம் உண்ணுங்காதலால் அணுகும்பொழுது, ஒரு தண்டினால் அதனை அடித்துச் சங்கரித்து, நக்கீரரையும் மற்றையோரையும் சிறைவிடுத்தருளினார்.

நக்கீரர் ஆறுமுகக்கடவுளை வணங்கி "ஐயனே, அடியேனது செருக்கினால், திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் எந்தை எனக்குக் குட்டநோயைத்தந்து, இது கயிலை தரிசித்தாற்றீரும் என்றருள்செய்தார்; ஆதலால் திருக்கைலாசத்தையுங்காட்டி எனது நோயை நீக்கியருளுக" என்று பிரார்த்தித்தார். முருகக்கடவுள் எமது பிதாவாகிய சிவபெருமான் இன்னகைலை என்று சுட்டியுரையாமையால் தென்கைலையிலும் இப்பிணி நீங்கும் என்று திருவுளங்கொண்டு நக்கீரருக்கு ஒரு தடாகத்தைக்காட்டி "நீ இத் தடாகத்திலே மூழ்கின் திருக்கைலாசகிரியைக் காண்பாய்" என்றார். நக்கீரர் சுப்பிரமணியக் கடவுளைத் தொழுது தடாகத்தில் ஸ்நானஞ்செய்து தென்கயிலைதோன்றப் பொன்முகலியில் எழுந்தார்.

நக்கீரர் உடனே வியாதியகன்று, விழிகள் நீர்சொரியக் ...கள் சிரமேலேற நாகலிங்கப்பெருமானையும் ஞானப்பூங் ...தை அம்மையாரையும் பணிந்து, திருவைந்தெழுத்தை ...த்து அன்புமயமாகிக் கைலைவேறு காளத்திவேறு என்னுஞ் சிந்தனையின்றி கைலைபாதி காளத்திபாதி என்னும் வெண்பா அந்தாதியைப்பாடினார். சிவபெருமான்

அவருக்கு அருள்செய்யுமாறு திருவுள்ளங்கொண்டு எதிரே தோன்றி "அன்பனே, உனக்குவேண்டியவற்றைக் கூறுதி" என்றருள்செய்தார். நக்கீரதேவர் "அடியேனது உடற்பிணியைப் போக்கிய அருட்குன்றே! அறிவைமூடும் ஆணவப்பிணியையும்நீக்கி, தேவரீரது திருவடி நீழலில் இருத்தியருள்க" என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் மலபரிபாகமும் சத்திநிபாதமுமுற்ற நக்கீரரைத் தமது திருவடியில் இருத்தியருளினார்.

## ௩௧. சுப்பிரமணியக்கடவுளும் ஔவையாரும்.

**ச**ரசுவதியின் அம்சமாய்ப் பிறந்து, விநாயகக் கடவுளைப் பூசித்து அக்கடவுளின் திருவருளைப்பெற்ற ஔவையார், அரசசபையை வெறுத்து, கல்விச் செருக்கினால் அகங்காரமுற்றுக் காட்டுமார்க்கமாக வந்தார். சுப்பிரமணியக்கடவுள் ஔவையாரின் கல்விச்செருக்கை நீக்கவும், ஒரு கலாவினோதஞ் செய்யவுந் திருவுளங்கொண்டருளினார்.

ஔவையார் வரும் வழியில் குமாரக்கடவுள் பசுக்களை மேய்க்கும் ஒரு இடையச்சிறுவராகி, கோல் பொருந்திய கையையுடையவராய் நாவல்மரத்திலேறிப் பழம் தின்பவர்களைப்போல நடித்து நின்றார். பசியினால் மிக வருந்திநின்ற ஔவையார் சுப்பிரமணியக்கடவுளாகிய இடையச்சிறுவனை நோக்கி, "குமாரனே! பழத்தில் மிக்க விருப்பமுடை னாக இருக்கின்றனை. என் பசிநீங்கச் சில பழம் கொ என்றார். "தாயே! சுடுபழம் தருவோமா? சுடாப்பழம் தருவோமா? எதுவென்று கூறுவாயானால் இப்பொழுதே கொடுப்பாம்" என்றார்.

ஔவையார் கேட்டுத் திகைத்து நாவற்பழங்களில் சுடும் பழத்தை எங்கேயாவது கண்டதும் கேட்டதுமில்லை, சுடாதபழங்களை எங்குமிருப்பதைக் கண்டும் கேட்டுமுள்ளேம், இதென்ன புதுமையென் றாலோசித்து அதனை அறிவோமென்று, "பிள்ளையே! சுடுகனியே தருக" என்று சொன்னார். குமாரசுவாமியாகிய பாலவடிவினர் நன்றாய்க் கனிந்த சில பழங்களை மணலின்மீது எறிந்தார். அப்பழங்களை ஔவையார் எடுத்துப் பசிக்கொடுமையினால் விரைந்து உண்பதற்கு விரும்பிப் பழங்களிலொட்டியிருந்த மண் போகுமாறு வாயால் ஊதினார். அதனைப்பார்த்த எம்பெருமான் "கிழவியே! சுட்டதுபோலும்? சுட்டதுபோலும்?" என்று திருக்கரங்களைத் தட்டிச் சிரித்தார். ஔவையார் அதுகேட்டு மிகவும்நாணி, "அறிவான் முதிர்ந்து எமக்கு நிகராவார் ஒருவருமிலரென்று இறுமாந்தோமல்லவா! அகத்திய முனிவருடைய சிறிய கையுள் பெருங்கட லுழுந்தளவாக்கி ஆசமிக்கப்பட்டதே, சிற்றுளியாலே பெருமலை தகர்ந்தொழிதல் கண்கண்டவிஷயமே. அறிவு யாரிடத்தடங்கிற்று! அறிவுக்கும் எல்லையுண்டோ? இதுநாள்வரையும் எவராலும் வெல்லப்படாமல் கூரிய மதிகொண்ட புலவர்களையெல்லாம் வென்று சிறப்புற்று விளங்கினேன். இத்தினத்தில் ஒரு சிறுவன் வெள்கச் செய்தனனே. இது என்னை"யென்று துன்பசாகரத்தில் ஆழ்ந்தார்.

குமாரக்கடவுள் கண்டு, "முதியாய்! நீ வருந்தலை" ...ன்று தமது சுயவடிவத்தைக் காட்டி முன்னின்றார். ...வயார் பரவசமாய், பன்முறை துதித்துநின்றார். சுப்...ியக்கடவுள் கிருபாநோக்கஞ்செய்து, "பண்டிதையே! உன்னுடன் கலாவினோதஞ்செய்ய வந்தோம். இனியது எது?" என்று வினவியருளினார்.

ஔவையார்,

இனியது கேட்கிற் றனிநெடு வேலோ
யினிது இனிது வேகாந்த மினிது
வதனினு மினிது வாதியைத் தொழுத
லதனினு மினிது வறிவினர்ச் சேர்த
லதனினு மினிது வறிவுள் ளோரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே.

என்று கூறினர்.

அதைக் கேட்டருளிய கடவுள் "கலைக் கிழத்தியே! நன்று நன்று, இனியன கூறினை; கொடியனவற்றையும் இவ்வுலகத்தார் அறிந்தொழுகுமாறு தெரிவிப்பாய்" என்று கட்டளைசெய்தருளினர்.

அதற்கு விடையாக,

கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
வதனினுங் கொடிது விளமையில் வறுமை
யதனினுங் கொடிது வாற்றொணுக் கொடுநோ
யதனினுங் கொடிது வன்பிலாப் பெண்டி
ரதனினுங் கொடிதிங் கறையி
னின்புற வவள்கையி லுண்பது தானே

என்ற கவியை ஔவையார் சொற்றனர். அதுகேட்ட முருகவேள், "ஔவையே! அரியவற்றுளெல்லாம் அரியது யாது?" என்று வினவியருளினர். ஔவையார்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோ
யரிதரிது மானுட ராத லரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது

பேடு நீங்கிப் பிறந்த காலையு
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்
தானமுந் தவமுந் தாஞ்செய்த லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே."

என்று உத்தரங்கூறினர். "பெரியவற்றிலெல்லாம் பெரிது யாது?" என்று குமாரக்கடவுள் கேட்டருளினர். ஔவையார் அவருடைய திருவடிகளை வணங்கி, "எங்கள் தெய்வமே! தேவரீர் அறியாததொன்றுண்டோ! எல்லாவறிவுமுடைய தேவரீர் நாயினுங்கடைப்பட்ட பேதையேனை வினவல், பிதாமாதாக்கள் தமது சிறுவர்களது வாயினின்றுண்டாகும் குதலை வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷமுறுதல் போன்றது" என்று கூறுவாராயினர்.

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோ
னலைகடல் குறுமுனி யங்கையி லடக்கங்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பார
மரவோ வுமையவள் சிறுவிரன் மோதிர
முமையோ விறைவர் பாகத் தொடுக்க
மிறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லலும் பெரிதே

என்று கூறிய உத்தரத்தைக் குமாரக்கடவுள் கேட்டு மகிழ்ந்து, "பண்டிதாய்! உனது விடைகளைக்கேட்டு சந்தோஷமுற்றேம்; பசி, பிணி, நரை, திரை முதலியன இல்லாதபடி நெடுங்காலம் வாழ நினைப்பையேயாகில் சேரநாட்டிலே பெருமலையின் முழையிடத்தே கருநெல்லியிலே அமிர்தம்போன்ற இனிய பழமொன்றிருக்கின்றது. அரசனாகிய அதிகமான் நெடுமான் வஞ்சியைப் பாடிக் கேட்பாயானால் தருவான். அதை உண்டு நன்கு வாழ்தி" என்று கிருபைசெய்து மறைந்தருளினார். அத் திருவாக்கின்படியே ஔவையார் கொங்கநாட்டில் கருவூரை அடைந்து அங்கே அரசாட்சிசெய்திருந்த அதிகமானெடுமான் வஞ்சியைப்பாடி நெல்லிக்கனியுண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தனர்.

---

## கஉ. முசுகுந்தச்சக்கரவர்த்தி.

முன்னொருநாளிலே திருக்கைலாசமலையிலுள்ள சோலையில் உமாமகேசுவரர் வீற்றிருக்கும்பொழுது, ஒரு முசுவானது அவர் இருவர்மீதும் வில்வபத்திரங்களைப் பறித்துச் சொரிந்துகொண்டிருந்தது. சிவபெருமான் திருவுளமிரங்கி அதற்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினார். ஞானமுதிக்கப்பெற்ற முசு பார்வதீ பரமேஸ்வரர்களை அன்போடு வணங்கி, "அடியேன்செய்த பிழையைப் பொறுத்தருளுக" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் "நீ பி[illegible] செய்திலாய்; வில்வபத்திரங்களைக்கொண்டு நம்மைப் [illegible] தாய், ஆதலால் நீ மனுவமிசத்திற் பிறந்து உலகு[illegible] யும் அரசாளுவாய்" என்று அருள்புரிந்தார். முசு அத் திருவாக்கைக்கேட்டுத் துன்பமடைந்து, "அடியேன் உங்

களைத் தரிசித்து அழியாப் பெருஞ்செல்வத்தை அனுபவித்துக்கொண்டிருத்தலைவிட்டு, அழியுஞ் செல்வவலையில் அகப்படுவேனாயின் எங்ஙனம் உய்வேன்" என்றது. சிவபெருமான் கேட்டு: "முசுவே! நீ பூமியை அரசாண்டிருந்து பின்னர் நம்மிடத்துவருதி" என்று கூறியருளினார். அப்பொழுது அம்முசுக்கலை "எம்பெருமானே! இம்முசுவின் முகத்தோடு பிறக்கும்வண்ணம் அருள்புரிக" என்று கூறிற்று. சிவபெருமான் அவ்வரத்தை அதற்குக் கொடுத்தருளினார். முசுக்கலை பூமியில்வந்து அரிச்சந்திர மகாராசனுக்கு ஒரு வழித்தோன்றலாய் முகம் முசு, மற்ற அவயவங்களெல்லாம் பேரழகுடையதாகிப் பிறந்து முசுகுந்தன் என்னும் நாமத்தைப் பொருந்தியிருந்தது. இவ்வாறு பிறந்த முசுகுந்தன் சோழநாட்டிலுள்ள கருவூரிலிருந்துகொண்டு செங்கோல் செலுத்திவருவானாயினான்.

அம்முசுகுந்தச் சக்கரவர்த்தி ஒருநாள் தனது குலகுருவாகிய வசிட்டமுனிவரிடத்திற்போய் அவருடைய பாதங்களைவணங்கி, "சுவாமீ! சுப்பிரமணியக்கடவுளுடைய விரதங்களையெல்லாம் கூறியருளுக" என்று கேட்டான். வசிட்டமுனிவர் சுக்கிரவாரவிரதம், கார்த்திகைவிரதம், கந்தசட்டிவிரதம் ஆகிய சுப்பிரமணிய விரதங்களை அநுட்டிக்கும் முறையையும், அநுட்டித்தோர் பெற்றபேறுகளையும் அவன் அறியும்படி விரிவாக உபதேசித்தருளினார். அரசன் இருஷியிடம் உத்தரவுபெற்று அளவில்லாத காலம் [illegible]ருகக்கடவுளைத் தியானித்து அவ்விரதங்களை அநுட்டித்[illegible] முருகக்கடவுள் வீரவாகு முதலிய வீரர்களும் [illegible]ருஞ் சூழத்தோன்றி அருளினார். முசுகுந்தன் முருகக்கடவுளை வணங்கி, "அடியேன் பூமியை ஆளும்படி வீரவாகு முதலிய வீரர்களைத் துணைவர்களாகத் தந்தரு

ளுக" என்று பிரார்த்தித்தான். சுப்பிரமணியக்கடவுள் அவ்வாறே கொடுத்து அருள்புரிந்து, மறைந்தனர். முசுகுந்தன் வீரவாகுமுதலியோருக்குப் பலவரிசைகளை உதவிச் சேனைத்தலைவர்களாக்கினான். அக்காலத்தில் தேவ அரம்பையர்கள் பூவுலக அரசர்கள்மாட்டு வளர்ந்தார்கள். முசுகுந்தன் வீரவாகு முதலியோருக்கு அவர்களை மணஞ்செய்வித்தான். வீரவாகு புட்பகந்தி என்னுங் கன்னிகையை மணந்து, சித்திரவல்லி என்னும் பெண்ணைப் பெற்று அரசனுக்கு மணஞ்செய்து கொடுத்தார். பின்னும் அநகன், சனகன் என்பவரைப் பெற்றார். மற்றைய வீரரும் பல பிள்ளைகளைப் பெற்றார்கள். வீரவாகு முதலியோர் மற்றை அரசர்களை வென்று, முசுகுந்தனுக்குக் கீர்த்தியை நிறுவினார்கள். முசுகுந்தன் சித்திரவல்லியைச் சேர்ந்து அங்கிவன்மனைப்பெற்று மகிழ்ந்தான்.

முசுகுந்தன் அரசாட்சி செய்துவருங் காலத்திலே, வலன் என்பான் இந்திரனை எதிர்த்து யுத்தஞ்செய்தான். இந்திரன் அவனை வெல்லமாட்டாது முசுகுந்தச் சக்கரவர்த்தியை அழைத்தான். அவன் வீரர்களோடுவந்து தேவ சேனாபதியாந் தலைமையைத்தாங்கி, அவுணசேனைகளை அழித்தான். அவுணசேனைகள் அழிதலும் இந்திரன் வலனைக் கொன்று வெற்றிபெற்று, முசுகுந்தனை அழைத்துத் தனது கோயிலில் இருத்தி உபசாரங்களைச் சொல்லி, அதன்பின்னர் விட்டுணுவினாலே பூசிக்கப்பட்ட தியாகராஜமூர்த்தியைப் பூசித்தான். முசுகுந்தன் அவரைக்கண்டு தி[illegible] கைலாசமலையில் இருந்த கோலத்தைத் தரிசித்து, [illegible] மகிழ்ச்சியடைந்த யான் இப்பொழுது மானிடப்பிற[illegible] மயங்கினேனே" என்றுகூறி அவரை நோக்கித் துதிப்பாராயினான்:—

"ஏகனேபோற்றியார்க்கு மீசனேபோற்றியம்மை
பாகனேபோற்றிமேலாம் பரஞ்சுடருருவேபோற்றி
மேகமார்களனேபோற்றி விடைமிசைவருவாய்போற்றி
மோகமார்த்தக்கன்வேள்வி முடித்திடுமுதல்வாபோற்றி"

முசுகுந்தன் துதிப்ப, சிவபெருமான்கிருபைபுரிந்து, "நீ எம்மைப் பூமியிற்கொண்டுபோய்ப் பூசிக்குதி" என்றருள் புரிந்தார். முசுகுந்தன் ஆச்சரிய மடைந்தான். இந்திரன் பூசைமுடித்து, முசுகுந்தனுக்கு ஆபரணாதிகளைக் கொடுத்து, "இன்னும் உனக்கு வேண்டியதைச் சொல்லுதி" என்றான். முசுகுந்தன் "நீ பூசைசெய்கிற கடவுளை எனக்குக் கொடுக்குதி" என்றான். இந்திரன் "அரசனே, இம்மூர்த்தியை விட்டுணுவே எனக்குத்தந்தார்; அவர் சம்மதம் உண்டாயின் தருவேன்" என்றான். முசுகுந்தன் விட்டுணுவினுடைய சம்மதம்பெற்று அதைத் தேவராசனுக்கு அறிவித்தான். புரந்தரன்வருந்தி ஒரு உபாயத்தை நினைத்துத் தேவத்தச்சனைக்கொண்டு, தான்வைத்துப் பூசிக்கும் சோமாஸ்கந்தமூர்த்திபோன்ற ஆறு திருவடிவங்களைச் செய்வித்து, ஒவ்வொன்றாக முசுகுந்தனுடைய கையிற் கொடுக்க, அவன்வாங்கி சிவன் அருளாமையால் ஆறுதரமும் "இவர் அவரன்று" என்று கூறினான். இந்திரன் விட்டுணு பூசித்த மூர்த்தியைக்காட்டினான். அப்பொழுது சிவபெருமான் அன்பனே! உன்னிடம் வந்தோம்" என்றருள்செய்தார். முசுகுந்தன் மகிழ்ந்து இவரைத்தருக" [illegible]று வாங்கினான். வாங்கி இந்திரனிடம் விடைபெற்று [illegible] பூசித்த சோமாஸ்கந்தரை திருவாரூரில் பிர[illegible]டைசெய்து, மற்றை ஆறுமூர்த்திகளையும் திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளிலியூர், திருவான்மியூர், திருமறைக்காடு என்னுந் தலங்களில்

ஒருநாளில் தாபித்து சிரத்தையோடு பூசைசெய்வித்து, திருவாரூர்த் தியாகராசருக்கும் மற்றைத் தலங்களிலுள்ள மூர்த்திகளுக்கும் மகோற்சவம் நடத்தினான். நடத்திய முசுகுந்தன் திருவருள்வழிநின்று செங்கோல்நடாத்தி அங்கிவன் மனுக்கு முடிசூட்டித் திருக்கைலாசமலையை அடைந்தான். வீரவாகு முதலியோரும் தம் புதல்வருக்குத் தங்கள்வரிசைகளைக்கொடுத்து, தவஞ்செய்து கந்தகிரியை அடைந்தார்கள்.

முசுகுந்தன் முருகக்கடவுளுடைய விரதங்களை அனுட்டித்தே இத்துணைப்பெருமைகளை அடைந்தான். ஆதலால் கந்தசுவாமியுடைய விரதங்களை முறைப்படி அநுட்டித்தவர் நினைத்த வரங்களைப் பெறுவர்.

---

## ௨௨. கரிக்குருவி உபதேசம்பெற்றது.

**சு**குணபாண்டியன் என்பவன் அரசாட்சிசெய்துவருங் காலத்திலே, ஒருவன் முற்பிறவியிலே மிகுந்த தருமத்தையே செய்து, சிறிது பாவமுஞ்செய்த காரணத்தினால் கரிக்குருவியாகப் பிறந்தான். அக்கரிக்குருவி இரத்தஞ் சோருந் தலையையுடையதாய், பறவைகளுக்கெல்லாம் எளியதாகி, வனத்துட்சென்று, ஒரு மரத்தில் இருந்தது. இருக்குமெல்லையில் அகமும் புறமும் தூயவரும் தீர்த்தயாத்திரைக்காகப் புறப்பட்டவருமாகிய ஒருவர், அடியார்கள் சிலரைநோக்கி, மதுரைத்தலத்தினதும் பொற்[illegible]ரைத் தீர்த்தத்தினதும், சோமசுந்தரமூர்த்தியினது[illegible]மைகளைக்கூறினார். அதைக் கொம்பரிலிருந்த கரிக்குருவி கேட்டு, ஞானம்பெற்று, இப்பிறவியை ஒழிப்பதற்கு, முனிவர் கூறியதே உறுதியென்று துணிவுகொண்டு, எழுந்து

மதுரையை அடைந்தது. அடைந்த கரிக்குருவி பொற்றாமரைவாவியில் ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரக்கடவுளை வலம்வந்து மனதினுற்றொழுது இருந்தது. இங்ஙனமாக மூன்றுதினங்கள் கழிந்தன.

மீனாட்சியம்மையார் சோமசுந்தரக்கடவுளை நோக்கி, "தலைவரே, இக்கரிக்குருவி செய்யுஞ்செய்கை என்னை?" என்று வினவினர். சிவபெருமான் அதனுடைய செய்கைகளெல்லாவற்றையும் திருவாய்மலர்ந்தருளி, பத்தியையும் நியமத்தையும் மேற்கொண்ட பறவைமீது கிருபாநோக்கம்வைத்து மந்திரோபதேசஞ்செய்தருளினர். குருவி சிவபெருமான் உபதேசித்த மந்திரத்தைக் கேட்டுச் சிற்றுணர்ச்சி நீங்கி, "முற்பிறப்பிற் சிவதருமத்தைச் செய்தமையால் இப்பிறப்பில் இம்மந்திரத்தை உபதேசஞ்செய்தருளினீர்; இது வருபிறப்பில் நல்லநெறிக்கேதுவாதலால் மும்மையிலும் வலியுடையேனாயினேன்" என்று துதித்து "என்னுடைய மரபுக்கெல்லாம் வலியான் என்னும் பெயர் வழங்கவேண்டும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் "அங்ஙனமே ஆகுக" என்று கிருபைசெய்தருளினர். கரிக்குருவி சிவபெருமான் உபதேசித்தருளிய மந்திரத்தைப்பயின்று, முத்தியடைந்தது.

---

## ௩௪. விட்டுணு.

விட்டுணு சிவபெருமானுடைய அடியவருள் விசே[illegible]யவராய்த் தேவர்களுக்கெல்லாந் தலைவராயுள்ளவர். இவர் கரிய நிறமும், ஒரு தலையும், இரண்டு கண்களும், நான்கு கரங்களும், இரண்டு பாதங்களுமுடையவர். துளசி

மாலையையும், சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள் என்னும் பஞ்சாயுதங்களையுந் தரித்திருப்பர். கருடனை வாகனமாகவும் இலக்குமியைச் சத்தியாகவும் உள்ளவர். விட்டுணு சிவபெருமானுடைய திருவருளாலே, திதிகிருத்தியத்தைச் செய்கின்றார்.

தேவர்களும் அசுரர்களும் பலவருஷங்களாகக் கொடும் போர் செய்தபொழுது, தேவர்கள் வலியிழத்தலும் விட்டுணு அசுரரோடு எதிர்த்தார். அவுணர்கள் பயந்து ஓடிப் பிருகு முனிவருடைய மனைவியும், இலக்குமியினுடைய தாயுமாகிய கியாதியினிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். விட்டுணு கோபம் மிகுந்து ஆச்சிரம வாய்தலில் நின்ற மாமியைக் கொன்று அவுணரைச் சங்கரித்துச் சென்றனர். பிருகு, மனைவி இறந்துகிடப்பதுகண்டு, "இதைச்செய்த விட்டுணு அளவற்ற பிறவிகளை எடுத்து வருந்தக்கடவன்" என்று சபித்தனர். விட்டுணு காஞ்சியில் சிவபெருமானைப் பூசித்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருள, விட்டுணு வணங்கி, "பிருகுமுனிவரிட்ட சாபத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான், "விட்டுணுவே கேள்! நமது அடியவர்கள் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவை அவ்வப்பயனைப் பயந்தேவிடுவதல்லது பழுதாகா; நீ நம்மை வழிபடும்பேற்றினால் பூமியில் பத்துப் பிறப்புக்களுண்டாம். அப்பத்துப் பிறப்பும் உலகத்துக்கு உபகாரமாகும்" என்றுகூறி மறைந்தருளினார்.

சிவபெருமான் அருளிய பிரகாரம் விட்டுணுவி[illegible] பத்துப் பிறப்புகள்; மற்சம், கூர்மம், வராகம், [illegible] வாமனர், பரசுராமர், பலராமர், தசரதராமர், கிருஷ்ணர், கற்கி என்பவைகளாம். சோமுகன் என்னும் அசுரத்தலை

வன் வேதங்களைக் கவர்ந்து கொண்டுசென்று சமுத்திரத்தி லொழித்தான். அப்பொழுது விட்டுணு மற்சவடிவேற்று சோமுகனைப் பின்றொடர்ந்து சென்று அவனுயிரையொழித்து, வேதங்களைப் பிரமாவிடம் கொடுத்தார். அதனாலே விட்டுணு கெர்வங்கொண்டு, உயிர்களை வருத்தினுர். சிவபெருமான் மீனின் கண்ணைப்பறித்து, அவரது கர்வத்தையடக்கி, அவரது வேண்டுகோளின்படி அம்மீன் கண்ணைச் சாத்தியருளினுர்.

தேவரும் அசுரரும் கூடி அமிர்தம் எடுத்து உண்ணும் பொருட்டுப் பாற்கடலைக் கடைந்தார்கள். அவர்கள் கொண்ட மந்தர மலையாகிய மத்து சமுத்திரத்திலமிழ்ந்தாமல் தாங்கும்பொருட்டு கூர்மாவதாரங்கொண்டார். அவ்வவதாரத்தில் விட்டுணு கெர்வங்கொண்டமையால் சிவபெருமான் ஆமையின் ஓட்டைப் பிடுங்கித் தரித்தருளினுர். முன்னேர்காலத்தில் இரணியாக்கன் என்னும் அசுரன் பூமியைக் கவர்ந்து பிலத்துட்சென்றுன். திருமால் பன்றிவடிவங்கொண்டு, இரணியாக்ஷனைக்கொன்று பூமியை முன்போலப் பதித்தருளினுர். அதனாலே திருமால் அகங்காரங்கொண்டார். சிவபெருமான் அப்பன்றியினது கொம்பைப் பிடிங்கித்தரித்து, விட்டுணுவின் அகங்காரத்தை நீக்கியருளினுர். விட்டுணு இரணியன் என்னும் அசுரனைக் கொல்லும்பொருட்டு நரசிங்காவதாரம் கொண்டனர். பின்பு அகந்தைகொள்ளச் சிவபெருமான் நரசிங்கத்தோலை உரித்[illegible] போர்த்துக் கிருபைசெய்தருளினுர். திருமால் மாவலி [illegible]ம் அசுரனை அடக்கும்பொருட்டு வாமனுவதாரங் [illegible]ர். சிவபெருமான் தருக்குற்ற வாமனரது முதுகெலும்பைப் பிடிங்கி அவரது கர்வத்தை அடக்கி அருள் செய்தார். திருமால் இவ்வைந்து அவதாரங்களையுங்

கொண்டபொழுது அவ்வைத்தொழிலை முடித்தபின்னர் செர்வங்கொள்ளச் சிவபெருமான் அக்கர்வத்தை அடக்கினமையால் இந்த ஐந்து அவதாரங்களும் நிக்கிரக அவதாரம் எனப்படும்.

பூமியிலுள்ள மனுடர்களை நீதிதவருமல் இரட்சிக்கும்பொருட்டு பரசுராம அவதாரம், பலராம அவதாரங்களைக்கொண்டனர். இலங்கையிலிருந்து அரசாட்சி செய்தவனுகிய இராவணனை வதைக்கும்பொருட்டு, தசரதனிடத்தில் இராமர் என்னும் பெயரோடு அவதரித்தனர். பாரதயுத்தம் நடத்திப் பூமிபாரந் தீர்க்கும்பொருட்டு கிருஷ்ணராக அவதரித்தார். இன்னும் யுகம்முடிவில் உலகத்தை அழிக்கும்பொருட்டு கற்கி அவதாரமும் எடுப்பர். விட்டுணு மற்றைய நான்கு அவதாரங்களையுங் கொண்டபொழுது அகங்காரஞ் சிறிதுமில்லாமல் சிவபெருமானையே பரம்பொருள் என்று பூசைசெய்து வணங்கி அப்பெருமானுடைய திருவருளைப்பெற்றனர். ஆதலினல் இந்நான்கு அவதாரங்களும் கற்கி அவதாரமும் அநுக்கிரக அவதாரங்கள் என்று சொல்லப்படும். இவர் உலகத்தை இரட்சிக்கும்பொருட்டு இன்னும் எடுத்த அவதாரங்கள் பல.

விட்டுணுமூர்த்தி ததீசி முனிவரை எதிர்த்துயுத்தஞ் செய்து தமது சக்கராயுதத்தை அம்முனிவர்மீது செலுத்தினர். அச்சக்கரம் முனிவரது வச்சிர தேகத்திற்பட்டு நுதிமடிந்து அழிந்தது. விட்டுணு, சலந்தரனைச் சங்கரித்த சுதர்சனம் என்னுஞ் சக்கரத்தைச் சிவபெருமா[illegible] டத்துப் பெறவெண்ணி, காஞ்சிபுரத்தை அடை[illegible] லிங்கப் பிரதிஷ்டைசெய்து, நாளொன்றுக்கு [illegible] தாமரை மலர்களாற் சிவார்ச்சனை செய்திருந்தனர். சிவபெருமான் விட்டுணுவினுடைய பத்திமுதிர்ச்சியை ஆன்

மாக்களுக்கு அறிவிக்குங்காரணமாக, ஒரு பூவை மறைத்தருளினர். ஒருமலர் குறைந்தமையால் விட்டுணு தமது ஒருகண்ணையிடந்து, தாமரைமலராகப் பாவித்து அருச்சித்துச் சிவபூசையின் குறையை முடித்தனர். சிவபெருமான் இடபவாகனத்தில் தேவியாருடன் தோன்றியருளி, சக்கரத்தையுங் கண்ணையுங்கொடுத்து மறைந்தனர். விட்டுணு நமஸ்கரித்து சக்கரத்தைப் பெற்றுக்கொண்டு, வைகுண்டத்தை அடைந்து நீங்காத பத்தியுடனிருந்தார்.

சிவனடியாராகிய விட்டுணுவை இகழ்தல் பாவமாகும். அவரைச் சிவனோடு சமப்படுத்திக் கூறுபவர்களும், சிவனுக்கு மிக்கவர் என்று கூறுபவர்களும் துன்பமடைவார்கள்.

**திருநாவுக்கரசுநாயனர்.** பழம்பஞ்சுரம்.

தடமலராயிரங்கள் குறைவொன்றதாக
நிறைவென்றுதன் கணதனல்
உடன்வழிபாடுசெய்த திருமாலைவெந்தை
பெருமானுகந்துமிகவும்
சுடரடியான் முயன்றசுழல்வித்தரக்க
னிதயம்பிளந்தகொடுமை
யடல்வலியாழியாழியவனுக்களித்த
வவனநமக்கொர்சரணே.

**திருப்பல்லாண்டு.**

பாலுக்குப்பாலகன் வேண்டியமுதிடப்
பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்
மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்
பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கே
பல்லாண்டுகூறுதுமே.

## ௩௫. சைவாசாரியரும் வைணவனும்.

**சைவ** ஒழுக்கமுடையவனாகிய கலாதரன் என்பவன் சோனதேசத்திலிருந்து உலகங்களைப் பரிபாலித்தான். பரிபாலிக்குங் காலத்தில் ஒருநாள் ஞானசாத்திரங்களை அறிந்த சிவாசாரியராகிய பசுபதிபாரதி என்பவர் அரசசபையை அடைந்தார். அரசன் தனது குருவாகும் பாரதியாரைக் கண்டவுடன் சிங்காசனத்திலிருத்தித் துதித்து மனங்கசிந்து நின்றான். பசுபதிபாரதியார் ஆசிர்வாதஞ் செய்தார். அப்பொழுது சபையிலிருந்த தபோதனர் முதலிய அனைவரும் அவரை வணங்கினார்கள்.

பசுபதிபாரதியார் அரசனை நோக்கி "அரசனே! ஒரு நுட்ப உண்மையை உனக்குச் சொல்லுகின்றேன். கேட்பாயாக: சைவசமயமே உண்மைச் சமயம். சிவபெருமான் ஒருவரே முழுமுதற்கடவுள். சிவபெருமான் எள்ளில் நெய்போல உலகமெங்கணும் நிறைந்திருக்கின்றனர். திருமாலும் சிவபெருமானைப் பூசித்தே தமது அதிகார கிருத்தியத்தைப் பெற்றனர்" என்று பதியிலக்கணங்களைப் போதித்தார். அச்சபையிலிருந்த வாசுதேவன் என்னும் வைணவன் பசுபதிபாரதியாரைநோக்கி, "ஓட்டைக் கையிற் கொண்டு இரந்துண்டு திரிபவன் ஆகிய உமது சிவன் தன்னை வழிபட்டவர்களுக்கு முத்தியைக் கொடுக்கும் சத்தியையுடையவனா?" என்றான்

பசுபதிபாரதிமனஞ் சகித்தற்கு இயலாதவராய் [illegible] தேவனை நோக்கி; தாருகாவனத்து முனிவர்கள் மீ[illegible] என்னும் அசுத்தவைதிக சமயிகள் ஆனார்கள். அ[illegible] அவ்விதம் கெட்டுப்போகா வண்ணம் சுத்தர்களாக்கி முத்தியைக் கொடுக்குமாறே சிவபெருமான் பிச்சாடனமூர்த்தியா

யினர். வாசுதேவனே! சிவபெருமான் ஒருவரே முத்தியைக் கொடுப்பவர் என அறிந்து கொள்ளுதி." என்றார்.

வாசுதேவன்:— "நீர் இவ்வளவு சிறப்பாகப் பேசிய சிவபெருமானுக்குப் புலித்தோலா உடையாகப் பொருந்துவது?"

பசுபதிபாரதி:— "தாருகாவனத்துமுனிவர் தாம்செய்த அபிசாரவேள்வியிற் றோன்றிய புலியை நோக்கி, சிவபெருமான் மீது ஏவினர். சிவபெருமான் அதன்தோலை யுரித்து ஆடையாக அணிந்தனர்."

வாசுதேவன்:— "ஒரு பெண்ணுடன் கூடி மயங்கும் உமது கடவுளோ பதியாவர்."

பசுபதிபாரதி:— "வாசுதேவனே! பிரமாவினுடைய படைத்தற்றொழில் நடைபெறும்வண்ணமே தம்மோடு அபின்னமாகிய வல்லமையை ஒரு பெண்வடிவாக்கி, இடப்பாகத்தில் வைத்தனர் என்பதை அறிவாயாக."

வாசுதேவன்:— "தலையில் மற்றொரு பெண்ணாகிய கங்கையை உமது கடவுள் சுமப்பதென்னை?"

பசுபதிபாரதி:— "உமாதேவியாரது திருக்கரத்தில் உள்ள பத்து விரல்களிலிருந்து தோன்றிய வியர்வை பத்து நதிகளாய், உலகத்தை அழிக்கும்வண்ணம் பாய்ந்து சென் ... அதனால் உலகம் அழிவடையாவண்ணம் திருச்சடை ... க்கியருளினார்."

வாசுதேவன்.— "உமது கடவுள் சுடலையை இடமாகக்கொண்டு கூத்தாடுவது பொருந்துமா? சுடலையிற் கூத்தாடுவது சிரிப்புக்கிடமான செயலல்லவா?"

பசுபதிபாரதி:- "வேதபுருடர்களாலும் அறிதற்கரிய எமது கடவுள் சர்வசங்காரகாலத்தில் பிரமா விட்டுணு முதலிய சகலரையுஞ் சங்காரஞ்செய்த இடம் மயானமாம். அதில் உமாதேவியாருடன் தாம் நின்று திருநடனஞ் செய்வார்."

வாசுதேவன்:- "உமது சிவன் சங்காரஞ்செய்வர் என்றமையால் இழிவாகிய தாமதகுணமுடையவரன்றோ?"

பசுபதிபாரதி:- பிரமா விட்டுணு முதலிய தேவர்களே சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணவசத்தர். பசுபதியாகிய நமது கடவுள் மாயாசம்பந்தமாகிய முக்குணங்களைக் கடந்தவர். அவர் தாமதகுணமுடையரென்பது சங்காரத் தொழிலுக்குள்ள செயற்கைக் குணமேயன்றி அவருக்கு அது இயற்கையன்று."

வாசுதேவன்:- "உமது கடவுள் சுடுகாட்டிலுள்ள இழிந்த பொருளாகிய எலும்புகளை ஆபரணமாக அணிவது என்னை?"

பசுபதிபாரதி:-"அளவற்ற பிரம விட்டுணுக்கள் இறந்தார்கள். அவர்களது அநித்தத்தையும் தமது நித்தியத்தையும் ஆன்மாக்களுக்கு அறிவித்தல்காரணமாகவும், அவர்கள் எண்ணிறந்த தவத்தைச் செய்தமையாலும் அவர்களது எலும்பை மாலையாகத் தரித்தனர்."

வாசுதேவன்:- "நம் கடவுள் ஆமை ஓட்டை மார்பிலே தரித்தது எக்காரணம்பற்றி? தமக்கு அலங்... மாகும் என்பது கருதியா?"

பசுபதிபாரதி:- "உமது தலைவராகிய விட்... கடலைக் கடைந்த காலத்தில் மந்தரும் மந்தரமலையை ஆமைவடிவு கொண்டு சுமந்தமையால், அகந்தையுற்று உல

கத்துக்குத் துன்பஞ் செய்தார். சிவபெருமான் ஆமையின் ஓட்டைப்பிடுங்க, அவர் அகந்தை நீங்கி, பழையவடிவங்கொண்டு துதித்தார். சிவபெருமான் அவரது வேண்டுகோளின்படி அவ்வோட்டைச் சாத்தியருளினர்."

வாசுதேவன்;— "பன்றிக்கோடு அணிந்த காரணம் என்னை?"

பசுபதிபாரதி:— "இரணியாக்கன் என்னும் அசுரன் தேவர்களுக்குத் துன்பஞ்செய்தான். விட்டுணு பன்றிவடிவங்கொண்டு, அவுணனைக் குற்றிக்கொன்று அகந்தையுடையவராய் உயிர்களை வருத்தினர். சிவபெருமான் ஒரு கொம்பைப் பிடுங்குதலும் விட்டுணு முன்னையுருக்கொண்டு துதித்தனர். கடவுள் அக்கொம்பைத் திருமார்பில் தரித்துக்கொண்டனர்."

பசுபதிபாரதி என்னும் சிவாசாரியரும் வாசுதேவன் என்னும் வைணவனும் இப்படித் தருக்கித்து நிற்குஞ் சமயத்தில், கேசரி என்னும் வைணவன் சில வினாக்களை வினவினன்.

கேசரி:— "ஒரு விருட்சத்திற் காய்க்கின்ற காய்களாகிய உருத்திராக்கமும், பசுச்சாணத்தைச்சுட்ட சாம்பராகிய வெண்ணீறுமா முத்தியைப்பாலிப்பன?" என்றான்.

பசுபதிபாரதி:— நீ சிவபெருமானை உணராய்; மெய்ஞ்ஞானம் எவ்வழிக்கிடைக்கும் என்பதையும் நோக்காய்; [illegible]கியகாரணைப்போல் பிதற்றுகின்றாய்; அதனுண்மை [illegible]கின்றனம் கேட்பாய். தேவர்கள் திரிபுரத்[illegible] தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ்செய்துகொண்டபொழுது, திருக்கைலாசபதியினுடைய மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரிற்றோன்றிய

மணியாம். அது சிவபிரானுடைய திருக்கண்ணிற்றோன்றும் திருவருட்பேற்றிற்கு அறிகுறியாம். பசுக்களாகிய நம்மைப்பற்றிய மலமாகிய அழுக்கை ஞானமாகிய அக்கினியினாலே சுடச் சிவத்துவமாகிய சுத்த நிலையை நாம் அடைவோம். அதற்கு அறிகுறியாகவே பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகிய திருநீற்றை நாம் அணிந்துகொள்கின்றோம்.

உருத்திராக்கத்தையும் விபூதியையும் அன்புடன் தரிப்பவர்களே மனதினால் நினைப்பவர்களும் சிவபெருமானது திருவடிகளை அடைதற்குரியராவர். தரியாதவர்களும் தரித்தவர்களை இகழ்வோரும் நீசராவர். ஆதலால் நீயும் நீசரிற்கொடியவன்.

எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட
திருநீறுஞ்சாதனமுங்கண்டாலுள்கி
உவராதேயவரவரைக்கண்டபோது
உகந்தடிமைத்திறநினைந்தங் குவந்துநோக்கி
இவர்தேவரவர்தேவரென்றுசொல்லி
யிரண்டாட்டதொழிந்தீசன் றிறமேபேணிக்
கவராதேதொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே.

(திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்.)

என்பதையும்,

பிணியெலாம் வரினுமஞ்சேன் பிறப்பினேடிறப்பு மஞ்
றுணிநிலா வணியினான் றன் றொழும்பரோ டழு
திணிநிலம் பிளந்துங்காணச் சேவடிபரவி வெண்
றணிகிலாத வரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

(திருவாசகம்.)

என்பதையும் உணர்ந்தாயில்லை. என்று தகுந்த உத்தரம் உரைத்தார்.

அவருடைய மாணாக்கனாகிய வசு என்னும் அந்தணன் தனது குருவை மறுத்து, "தேவரீர் கூறியவைகளை அங்கீகரிப்பவர் ஒருவரையுங் கண்டிலேன்; எழுந்தருளுவீர்" என்று கூறினான். பசுபதி மாணாக்கனை நோக்கி:—"இவர்கள் சிவநிந்தனை செய்தலைக் கேட்டுக்கொண்டு என்னுயிரைச்சகியேன்; ஆகையால் இவர்களுக்கு உத்தரங்கூறுவேன்" என்றார். வசு உடனே போயினான். மாணாக்கன் போதலை நோக்கி எல்லோருஞ் சிரித்தார்கள்.

சாந்தன் என்பவன் பாரதியாருக்குச் சமீபத்தில்வந்து "தேவரீரிடத்தில் வேதாகமங்களை ஒதிய மாணாக்கனுக்கும் பாவி உம்மை விரும்பவில்லை. அடியேனை மாணாக்கனாக எற்று அருள்புரிதல் வேண்டும்" என்றான். பசுபதிபாரதி:—"உன்பிதா சிவத்தியானமுடையோன் ஆதலால் உனக்கும் சிவபத்திவாய்த்தது; உண்மை மார்க்கத்துக்கும் எதுவாயது" என்றார்.

அச்சபையிலிருந்த பத்திரன் பாரதியாரை நோக்கி:—"பெரியவரே, இச்சாந்தன் தீயொழுக்கம் உடையவன்; இவனை மாணாக்கனாக்கிக்கொள்ள எவ்விதம் உடன்பட்டீர்" என்றான்.

பாரதி:—"சிவபெருமானுடைய திருவடிகளில் நீங் [illegible] அன்புள்ளவர்கள் செய்யும் பாவமும் புண்ணியமா [illegible] ருத்திராக்ஷங்களைத் தரித்த சிவனடியார்களை [illegible] வர்கள் நரகத்துன்பத்தை அடைவார்களென்று வேதாகமங்கள் கூறுகின்றன. நீயும் அத்துன்பத்தைப் பெற்றுக்கொண்டனை" என்று கூறினார்.

பின்பு பாரதியார் அரசனைப்பார்த்து; "அரசனே! சிவபெருமானையும் அடியார்களையும் விபூதிருத்திராக்கத்தையும் நிந்தித்தவர்களும், வேதாகமங்களைப் போதித்த ஆசாரியரைப் பிரிந்தவனும் ஆகிய அதிபாதகர்களுக்கேற்ற தண்டனையைச்செய்க" என்றார். அரசன், "இன்னும் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு, இந்த வைணவர்களது மார்க்கத்தை அழிப்பீராக" என்று இகழ்ச்சியாகக் கூறினான். அதுகேட்ட பாரதியார் இனி இவனுக்கு ஒன்றுங் கூறலாகாதெனவிடுத்து, சிவனைத் தியானித்துக்கொண்டு, வைணவர்களைப்பார்த்து "இடிவிழுந்து அழிந்துபோவீர்களாக" என்று சபித்தார். உடனே இடிவிழுந்து நான்கு பாவிகளும் இறந்தார்கள். அதை அரசன் பார்த்து அச்சமுற்றான். பாரதியார் அரசனை நோக்கி, "நீ கழுதையாகுதி" என்று சபித்தார். உடனே அவன் கழுதையானான். அந்நால்வரும் அரசனும் நெடுங்காலம் நரகத் துன்பமுற்றார்கள்.

---

## ௩௯. சண்டேசுரநாயனார்.

**சோழ** நாட்டிலுள்ள திருச்சேய்ஞலூர் என்னுந் திருப்பதியிலே பிராமணவருணத்தில் எச்சதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அவன் மனைவியாகிய பவித்திரையிடத்து விசாரசர்மர் என்பவர் திருவவ[illegible] தாரஞ் செய்தார். அவருக்கு ஐந்து வயசிலே வே[illegible] ஆகமம் முதலிய சாஸ்திரங்களைக் கற்பிப்பாரின்[illegible] அறியும் உணர்வு உண்டாயது. தந்தைதாயார் அ[illegible] எழுவயசிலே உபநயநம் செய்வித்தார்கள். ஆசாரியர்கள் வேதம் முதலியவற்றைத் தாம் ஓதுவித்தற்கு முன்னரே,

அவ்விசாரசருமருக்குத் தாமே அறிந்து கொள்ளும்படி பொருந்தியிருக்கும் அறிவை நோக்கி வியப்படைந்தார்கள். நடம்புரியுஞ் சிவனே நம்மை அடிமையாக உடையார் என்னும் நிட்சித்தமுடையராய் விசாரசர்மர் விளங்குவாராயினர்.

ஒருநாள் அவர் தம்முடன் வேதாத்தியயனஞ் செய்கின்ற பிள்ளைகளோடும் அவ்வூர்ப்பசு நிரைகளுடன் கூடிச் சென்றார். சென்றபொழுது, ஓரீற்றுப்பசு ஒன்று மேய்ப்பவனாகிய இடையனைக் குத்தப்போயது. இடையன் பழிபாவங்களுக்குக் கூசாது கோலினால் அடித்தான். உண்மையறிவு விளங்கப்பெற்ற விசாரசருமர் வெகுண்டு, அவன் சமீபத்திற்போய்ப் பின்னும் அடியாதபடி தடுத்து, பசுக்கள் சிவபெருமான் இவர்ந்தருளுகின்ற இடபத்தின் சுற்றமாதலையும், அவைகளின் உறுப்புக்களிலே தேவர்கள் முனிவர்கள் தீர்த்தங்கள் இருத்தலையும் அவைகள் தரும் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்கள் சிவபெருமானுக்கு அபிடேகத்திரவிய மாதலையும், சிவ சின்னமாகிய விபூதிக்கு மூலம் அவற்றின் சாணம் ஆதலையும், பசுநிரையைக் காத்தலினும் சிறந்தகடன் இல்லை என்பதையுஞ் சிந்தித்து, அவ்விடையனை நோக்கி "இப்பசுக் கூட்டங்களை நானேமேய்ப்பேன்; நீ மேய்க்கவேண்டாம்" என்றார். இடையன் அஞ்சிக் கும்பிட்டுக்கொண்டு போயினான்.

[illegible] விசாரசருமர் பிராமணர்களின் உத்தரவுபெற்று [illegible] வருவாராயினர். மேய்த்துவருங் காலத்தில் [illegible]எல்லாம் முன்னையிலும் அதிகமாகப் பால் கறக்கக் காண்கையால் பிராமணர் மிக்க சந்தோஷங் கொள்ளுவாராயினர்.

பசுக்கள் தங்கள் கன்றுகள் பிரிந்தாலும் வருத்தமடையாது, தங்களை மேய்க்கின்ற விசாரசருமர் சற்றேனும் பிரியின், அவர் சமீபத்தில்வந்து தாய்போல் உருகி, ஒருவருங் கறக்காமல் தாமே பால்சொரியும். பசுக்கள் பாலைத்தாமே சொரியவே, அப்பால் அபிடேகத்துக்குத் தகுதியுடைத்தாந் தன்மையை நினைத்தார். நினைக்கவே, சிவார்ச்சனையிடத்தில் வேட்கை தலைப்பட்டது. உடனே அவர் மண்ணியாற்றங்கரையில் ஒருமணற்குன்றிலே, ஆத்திமரநீழலில், சிவலிங்கத் திருமேனியை மணலாலாக்கி, சிவாலயமும் கோபுரமும் வகுத்து அமைத்தார். பத்திர புஷ்பங்களும் பறித்துப் பூங்கூடையில் இட்டுவைத்தார். வைத்துப் புதுக்குடங்களைக் கொண்டுவந்து, பசுக்களிடம் பாலைப்பெற்றுச் சென்று ஆலயத்தில் வைத்து, முற்பிறப்பின் தொடர்ச்சியினால் அருச்சித்துப் பாலினால் அபிஷேகஞ்செய்தார். இடையறாது மேன்மேலும் பெருகிவளரும் மெய்யன்பே வடிவாயுள்ள விசாரசருமர் செய்யும் பூசையை அவ்விலிங்கத்தில்நின்று சிவபெருமான் ஏற்றருளினார். இப்படி நெடுநாளாக விசாரசருமர் 'பார்ப்பவருக்கு விளையாட்டுப்போலத் தோன்றுஞ் சிவபூசையைச்செய்து வருவாராயினார்.

பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டுப் பாலைச்சொரிந்தும் பிராமணர்க்கும் முன்போலப் பாலைக்கொடுத்தன. விசாரசருமர் செய்யும் அர்ச்சனையின் உண்மையை அறியாத ஒருவன் அவ்வூர் அந்தணர்களுக்கு அதை அறி[illegible]தான். அவர்கள் சபையாருக்குத் தெரிவித்தார்க[illegible]யார் எச்சதத்தனை அழைத்து "உமது மகன் பிர[illegible]ஓமத்தின்பொருட்டுப் பால்கறக்கும் பசுக்கள் எல்லாவற்றையும் மேய்ப்பவன்போலக் கொண்டுசென்று பால்கறந்து

மண்ணியாற்றங்கரை மணலிலே வீணாக ஊற்றுகின்றா னும்" என்றார்கள். எச்சதத்தன், "எனது சிறுவன் செய் வதை நான் அறியேன்; அக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; இனி அவன் செய்யிற் குற்றம் எனதே யாகும்" என்றுகூறி சபையின் அனுமதிபெற்றுத் தன் மனையிற் போயினான்.

மறுநாள் எச்சதத்தன் தன்மைந்தனின் சமாசாரத்தை அறிய விரும்பி, அவர் அறியாமல் அவர்பிறகே சென்று, ஒரு குராமரத்திலேறி ஒளித்திருந்தான். விசாரசருமர் ஸ்நானம்பண்ணி அன்பினோடு முன்போலப் பூசைசெய்து பாற்குடங்களை எடுத்து அபிஷேகஞ்செய்தார். குராமரத் திலிருந்த எச்சதத்தன் அதுகண்டு, கடுங்கோபங்கொண்டு கொடுஞ்சொற்களைச்சொல்லி, கைத்தண்டினாற் பன்முறை அடித்தான். அவர்மனம் சிவபூசையில் அழுந்திக்கிடந்த மையால், அது அவருக்குப் புலப்பட்டிலது. பின்னும் எச்சதத்தன் வெகுண்டு பலமுறை அடித்தான். விசார சருமர் வேறொன்றும் அறியாராகித் திருமஞ்சனம் ஆட் டும்பணியில் நின்றார். அவரன்பை அறியாத பிதாவான வன் பாற்குடங்களைக் காலாற் சிதறினான். சிதறும்பொழு தில் சிறுவர் அதுகண்டு அதுசெய்தவன் தந்தையென்று அறிந்தும், அவன்செய்தது சிவாபராதமாதலால், அவன் காலைத் துணிக்கும்படி ஒருகோலை எடுத்தார். சிவாஞ்ஞை யால் அது மழுவாயிற்று. அம்மழுவினால் அவனதுகாலை ...டினார். மறையோன் மண்ணில் விழுந்தான். சிவ ...ந்த இடரை நீக்கியவராகிய விசாரசருமர் முன் ... அருச்சனைசெய்யப்புகுந்தார். சிவபெருமான் உமை யோடு இடபாரூடராய்த் தோன்றியருளினார். விசாரசரு மர் மகிழ்ந்து விழுந்து வணங்கினார். பரமசிவன் வணங்

கிய சிறுவரைத திருக்கைகளாலெடுத்து, "நீ நம்பொருட்டு உன்பிதாவை வெட்டினாய்; இனி உனக்கு நாமே பிதா" என்று அருள்செய்து அவர்தேகத்தைத் தடவியருளினார். சிவபெருமானுடைய திருக்கைகளாலே தீண்டப்பட்ட அவர்தேகம் ஒளிரூபமாய் விளங்கியது. அண்டர்நாயகர் "உன்னைத் தொண்டருக்கெல்லாம் அதிபனாக்கி, நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுரர் பதவியைத்தந்தோம்" என்றருளித் தமது சடையிலிருந்த கொன்றைமாலையை அவருக்குச் சூட்டியருளினார். விசாரசருமர் சிவபெருமானைக் கும்பிட்டு அவராற்கொடுக்கப்பட்ட சண்டேசர் பதவியை அடைந்தார். எச்சதத்தர் குற்றஞ்செய்தும் சண்டேஸ்வர நாயனாரால் தண்டிக்கப்பட்டமையின், சிவலோகம் அடைந்தார்.

### திருஞானசம்பந்தர்.

**திருப்பாசுரம்** **பண்-கௌசிகம்.**

கடிசேர்ந்த போதுமலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட முக்கண்மூர்த்தி
யடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டுமன்றே.

### பெரியபுராணம்.

அண்டர்பிரானுந் தொண்டர் தமக் கதிபனாக்கி யனைத்துநா
முண்ட கலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச்
சண்டீசனுமாம்பதந்தந்தோமென் றங்கவர்பொற்றடமுடிக்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூ[illegible]

### முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

ஷெ நூலாசிரியரால் எழுதப்பட்ட புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| சிவபூசை விளக்கம் | ரூபா 1 | சதம் 50. |
| மகோற்சவ சந்திரிகை | | ,, 30. |
| பிராசாத தீபம் உரை | | ,, 40. |
| அச்சுவேலி சித்திவிநாயகர் ஊஞ்சல் | | ,, 03. |
| சைவப்பிரகாசிகை | | ,, 40. |

திருமகள் அச்சியந்திரசாலை,

சுன்னாகம்.